1065

1065
3-54
197208

ஆகஸ்ட் 26௳ முதல்
தென்னாடெங்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
கூண்டுக் கிளி!
திரைக்கதை, வசனம்: விந்தன்
டைரக்ஷன்: ராமண்ணா

Popular
for more than 70 years
LITTLE'S
ORIENTAL
BALM
தலைவலி, மார்சளி, தொண்டை பொறுமல், நரம்பு வலி, சுளுக்கு, கை, கால் பிடிப்பு, கீல் வாதம் முதலிய எல்லா வலிகளுக்கும் மிகச் சிறந்தது.
ORIENTAL BALM
For All Aches and Pains
LITTLE'S ORIENTAL BALM & PH. LTD
MADRAS - 2

ஸ்தாபிதம் **தபால் மூலம்** 1952

இலவசக் கல்வி போதனை

E குரூப் வகுப்புகள் ஆரம்ப தேதி 4-9-54.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த யாவரும் 1. மெட்ரிகுலேஷன், 2. 55-56 மெட்ரிகுலேஷன் 3. S. S. L. C. 4. தமிழ் வித்வான் 5. 55-56 தமிழ் வித்வான் 6. Book Keeping 7. E. S. L. C. (8-ம் வகுப்பு) 8. கிராம மணியம், 9. ஹோமியோபதி டாக்டர், 10. கைத்தறி நெசவு, 11. ஹிந்தி, (55 பிப்ரவரி) 12. பேசிக் ஆங்கிலம், (A. B. C. D. ஆரம்ப ஆங்கில பாடம் முதல் 5-ம் பாரத்திற்குறிய பாடம் வரை) முதலிய 1954-55-ம் வருட சர்க்கார் பரீட்சைகளுக்கு தபால் மூலம் மும்முறை அனுப்பவும், திறமையும் வாய்ந்த ஆசிரியர்களால் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட பாடங்கள் அனுப்பி, பயிற்சி அளிக்கப்படும் என்பதற்கும் உத்திரவாதப் பத்திரம் அளித்து இலவசமாக பயிற்சி அளிக்கப்படும். மாணவர்களின் கஷ்ட நஷ்டங்களுக்கு தமது உத்திரவாதப் பத்திரம் பொறுப்பேற்றுக் கொள்கிறது.

ஆகவே, 4-9-54 முதல் ஆரம்பமாகும் E குரூப் வகுப்புகளின் முழு விவரங்களுக்கு உடன் 2 ஒரு அணு ஸ்டாம்புடன் எழுதிச் சேர்ந்துக்கொள்ளவும்.

கவனிக்க:—1952-ம் ஆண்டு முதல் சொந்த அச்சகத்துடன் (Press) இலவசக் கல்வி பணியாற்றிவரும் நமது இன்ஸ்டிடியூட்டின் 23-1-54, 12-3-54, 5-5-54, 23-6-54 தேதிகளில் ஆரம்பமான A. B. C. D. குரூப் வகுப்புகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் சேர்ந்து கல்வி கற்றுவருகிறார்கள் மேலும், பல ஆயிர மாணவர்களின் விருப்பத்திற்கிணங்க 4-9-54 முதல் E குரூப் வகுப்புகள் ஆரம்பித்துள்ளோம்.

போலிக் கல்வி ஸ்தாபனங்களுக்கு சவால் விடுகிறோம்!

நமது தமிழ் நாட்டின் தனிப்பெரும் தபால் இலவசக் கல்வி ஸ்தாபனம்!!

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ரிஷிவந்தியம் P. O. (Via) திருக்கோவிலூர் S. A. Dt.

குணத்தில் மேலானது

L.G. எல்.ஜி.

மிஸ்கி பெருங்காயம்

மார்க்கை கவனித்து வாங்கவும்

லால்ஜி கோது & கம்பெனி

சௌகார்பேட்டை, மதருஸ்-1.

தலைமை ஆபீஸ்: பம்பாய்.

ஸ்ரீ அம்பாள்

ஆபீஸர் பொடி

காரம்...
மணம்..
..மிகுந்தது..

ஸ்ரீ அம்பாள் & கோ. P.B.3. மதருஸ்.1.

ஏ. ஸி. ஸி.

" நீலகிரி "

பிராண்டு
போர்ட்லண்டு
சிமெண்டு

பிரிட்டிஷ் ஸ்டேன்டார்டு
தரத்தைவிட சிறந்தது

கீழ்கண்ட எங்கள் டிபோக்களில் கிடைக்கும்

ராயப்பேட்டை :	சிமெண்டு கான்கிரீட் ஒர்க்ஸ்,
	11-A, வெஸ்ட்காட் ரோடு.
திருவல்லிக்கேணி :	131, பைகிராப்ட்ஸ் ரோடு.
	283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு.
	173, பார்பர்ஸ் பிரிட்ஜ் ரோடு.
மயிலாப்பூர் :	14, கச்சேரி ரோடு.
புதுப்பேட்டை :	73, ஹாரிஸ் ரோடு.
பெரியமெட் :	" ஜயாமான்ஷன் " பூந்தமல்லி ஹைரோடு.
சூளை :	139, சூளை ஹைரோடு.
	40, காலத்திய முதலி தெரு, புதிய மார்கட்.
புரசவாக்கம் :	139/2 புரசவாக்கம் ஹைரோடு.

மற்றும்

15, செம்புதாஸ் தெருவிலுள்ள எங்கள் ஆபீஸிலும் கிடைக்கும்

எம். குப்புஸ்வாமி நாய்க்கர்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

போன் : 2489.



எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு — குறள்

செடி 2 மலர் 5	செப். 1954	ஜய ஆ ஆவணி மீ

பொருளடக்கம்

எச்சரிக்கை செய்கிறோம் 9

நம்பிக்கை 11

இஸ்லாமியத் தமிழ் தொண்டு 14

பாரதி பாதையில்... (கவிதை) 16

அலை ஓய்ந்தது (தொடர் கதை) ... 19

கடைசி சண்டை 27

தாயுள்ளம் ... 35

சோக நாடகம் 41

வாழ்க்கை ஒரு சிறை 49

பாப்பா உமா ... 61

சமரசம் ... 69

பட உலகம் ... 78

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

1972

''ஊஹூம், வாத்தியாரு....அடிப்பாரு
பள்ளிக் கூடத்துக்கு....வரமாட்டேன்........

புகைப்படம்: ஏ. வி. ராமமூர்த்தி.

எச்சரிக்கை செய்கிறோம்!

எச்சரிக்கை வேறு யாருக்குமல்ல, திரு-கொச்சி முதலமைச்சர் பட்டம் தாணுப் பிள்ளைக்கு! கடந்த சில மாதங்களாக அவரின் போக்கே விசித்திரமாக இருக்கிறது. நாட்டிற்கே நாகரீகம் கற்றுத்தந்த தமிழர்களை அடக்குமுறை கொண்டு நசுக்குவதோடு நில்லாமல் ஒன்று இரண்டல்ல, தமிழ் மக்கள் பத்துப் பேரின் உயிரைச் சுட்டுப் பொசுக்கி இருக்கிறார்.

இந்நேரம் ஒரு குடும்பம் வீதியிலேயும், மற்றொரு குடும்பம் பிச்சை எடுக்கவும், இன்னும் பல குடும்பங்கள் இடந்தெரியாது நசித்துப் போய்க் கொண்டிருக்கிறதே, இந்த பழிபாவத்திற்கு என்றாவது ஒரு நாள் பட்டம்தாணு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

தமிழ் மக்களோடு உடன் பிறந்ததுதான் பண்பாடு. அந்தப் பண்பாட்டிற்கு எடுத்துக் காட்டுதான் இப்போது நடந்த சாத்வீகப் போராட்டமாகும். அதை விட்டு, சிங்கத் தமிழர்கள் சீறி எழுந்திருந்தால் இந்நேரம் அதன் நிலையே வேறு மாதிரி இருந்திருக்கும்.

இதோடு சும்மா இராமல், தாயகத்தோடு சேர விரும்பும் தமிழர்களை அவர்கள் சேர விரும்பவில்லை என்று பொய் பிரச்சாரம் செய்கிறார். பிரஜா சோஷியலிஸ்ட் கட்சிக்கே இழுக்கைத் தேடித் தந்த 'பெருமை' பட்டம் தாணுவுடையதாகும். இதை மறக்க முடியாது. தமிழ் இனத்திடம் ஒற்றுமைக் குறைவு இருக்கிறதென்ற சந்தேக எண்ணத்தால் தன் மனம்போன போக்கெல்லாம் நடந்தால், தமிழர்கள் அதற்குத் தகுந்த பாடம் கற்பித்து விடும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதை சமீபத்தில் திண்டுக்கல் வட்டாரத்தில் பட்டம் தாணுவுக்கு எதிராக எழுந்த எதிரொலியே அவருக்குச் சரியான எச்சரிக்கை! இனியேனும் பட்டம்தாணு தனது சொந்த மூளைக்கு வேலை கொடுக்க வேண்டும்! கொடுப்பாரா?

பல்வேறு நாட்டு சரித்திரங்கள் மாறியதை பட்டம்தாணுவுக்கு ஞாபகப்படுத்துகிறோம். அழகு நிறைந்த காஷ்மீரின் தலைவராக இருந்த ஷேக் அப்துல்லா, சர்வாதிகாரத் திமிர் பிடித்ததன் காரணமாக, சொந்த நாட்டுச் சிறைச்சாலையே அவருக்கு வரவேற்புத் தந்திருக்கிறது. இதே தலை எழுத்துத்தான் தென்னாப்பிரிக்கா மலானுக்கும், எகிப்து முசாதிக்குக்கும், நகீபுக்கும் இன்னும் எங்கெல்லாம் இம்மாதிரி சர்வாதிகார வெறி தாண்டவமாடுகிறதோ, அங்கெல்லாம் மக்களின் கடைசி விடை என்ன என்பதைப் பட்டம்தாணு சிந்திக்க வேண்டும்.

அதிகார மமதையால், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் இணைந்திருக்கும், மூணார், தேவிகுள வட்டாரத்திலே, தமிழ் தலைவர்கள் வீடுகளிலே புகுந்து, வீடெல்லாம் பலாத்காரத்துடன் சோதனையிட்டு, தன் அன்புக் கணவனின் நண்பர்கள் வீடு சென்று விசாரிக்கும்போது தலை நிமிர்ந்து பதில் சொல்லத் தெரியாத கற்புக்கரசிகளை மலையாளப் போலீசைவிட்டு மட்டரகமாகப் பேசியும், இன்னும் எத்தனையோ தமிழ்த் தொண்டர்களை கணுக்காலுக்குக் கீழே எலும்பு நொறுங்கும்வரை அடித்துப் படுகாயப்படுத்தியுமிருக்கிறார்கள். சிறைச்சாலையிலிட்டுச் சித்திரவதை செய்திருக்கிறார்களென்று செய்தியறிந்த தமிழினம் என்றைக்கும் மறக்க முடியாது. எரிமலைக்குமுறலை எதிர்கொண்டழைக்கத் துணிந்திருக்கிறார்கள்.

காங்கிரஸில் இல்லை! காந்தியத்தில் நாம்!

சுமார் இரண்டாண்டு கால சர்ச்சைக்குப் பிறகு இறுதியாகத் தமிழரசுக் கழகத்தார் காங்கிரசிலிருந்து வெளியேறிவிட்டனர். தமிழரசுக் கழகத்தார் காங்கிரஸில் இருக்க விரும்பினால், த. அ. கழகத்திலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்றும் அதையும் 15 நாட்களுக்குள் நிறைவேற்ற வேண்டுமென்றும் கட்டளை அனுப்பியது தமிழ்நாடு காங்கிரஸ். ஆனால், காங்கிரஸிலிருந்து செயலற்றுக்கிடப்பதைவிட கழகத்திலிருந்து தமிழகத்திற்கு சேவை செய்வதே சிறந்த வழியென தீர்மானித்துவிட்டனர் தமிழரசுக்கழகத்தார். அதன் விளைவாக கழகத்தோழர்கள் அணி அணியாக காங்கிரஸிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். ஊர் பேர் தெரியாத ஒன்றிருவரைத் தவிர கழகத்திலிருந்து யாரும் வெளியேறவில்லை இது தமிழரசுக் கழகத்தினிடம் அதன் அங்கத்தினர்கள் வைத்திருக்கும் ஆழ்ந்த பற்றுதலுக்கு சிறந்த அத்தாட்சி.

ம. பொ. சி. சுமார் முப்பதாண்டு காலம் பிரதிபலன் எதுவுமின்றி காங்கிரஸுக்கு முழு நேரம் பாடுபட்டு வந்தவர், பொதுவாக காங்கிரஸ்காரர்களென்றாலே மக்களிடையே அதிருப்தி நிலவிவரும் இன்னாளில் ம. பொ. சி. க்கு மக்களிடையே மதிப்பிருந்து வருகிறதை அவரை விரோதிப்பவர்கள் கூட மறுக்க முடியாத உண்மை, அப்படி காங்கிரஸின் பலத்திற்கும் பெருமைக்கும் காரணமாக இருந்த ம. பொ. சி. அவர்கள் காங்கிரஸிலிருந்து வெளியேறக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது, இது தமிழ்நாட்டில் காங்கிரஸுக்கு பெரும் நஷ்டமாகும்.

அவருடைய இடத்தைப் பூர்த்தி செய்வது த. நா. கா.வுக்கு அவ்வளவு எளிதான காரியமல்ல. திருவாளர்கள்: சின்ன அண்ணாமலை, வேலூர் வி. கே. குப்புசாமி, கவி. கா. மு. ஷெரீப், ஜி. உமாபதி போன்ற இன்னும் பல காங்கிரஸின் பிரச்சார பீரங்கிகளை எல்லாம் துர்ப்பாக்கிய வசமாக இழந்துவிட்டது. த. நா. கா. இது மறைமுகமாக காங்கிரஸின் விரோதி கட்சிகளுக்கு எதிர்பாராது வாய்த்த அதிர்ஷ்டமாகும்.

தமிழரசுக் கழகத்தார் காங்கிரஸிலிருந்து வெளியேறிவிட்டதால் த. அ. கழகம் எதிர் காலத்தில் வளர்வதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. இத்தனை நாளும் காங்கிரஸின் இஷ்டத்திற்கு இடங்கொடாமல் தமிழரசுக் கழகம் செயலாற்ற வேண்டியிருந்தது, இனியப்படிக்கின்றி சுதந்திரமாக அது தனது மானசாட்சிப்படி வளையாமல் நெளியாமல் நேர் போக்கில் செயலாற்றி முன்னேற முடியும்.

காங்கிரஸிலிருந்து வெளியேறிய பிறகும் தமிழரசுக் கழகத்தார் காந்தீயப் பாதையினின்று விலாகாமல், இந்தியாவின் ஐக்கியத்திற்குக் கேடில்லாத வகையில் தமிழினத்தின் நலன்களுக்காகப் பாடுபடுவதாக, திரு. ம. பொ. சி. அறிவித்துள்ளார். அதை, நாம் மனமாற வரவேற்கிறோம்.

மேலட்டைச் சித்திரம்:

பருவஎழில் புதுமைதவழ் பைங்கொடியாள் வதனம்!
பனித்துளிகள் கண்சிமிட்டும் தேனுறையும் மலரோ,
படையெடுக்கும் கடல்அலையோ நெழியும் கருங்கூந்தல்
பாவையவள் செவ்விதழோ செம்பவளச் சாயல்!
கயல்விழியோ புருவமது வீரனின் கூர்வாளோ
கவிஞனவன் தோற்றுவிட்டான் கன்னியின் புன்னகையில்!



"நம்பிக்கை"

அன்புள்ள தம்பி !

உன் சிந்தனை வளர்ச்சிக்காக, பருவகால அலைகள் பொங்கி எழும் உன் இதயத்திலே உன் எண்ணங்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து விடாமல், எதிர் காலத்திலே இன்பத் தமிழகத்திலே உனை ஈன்ற பெருமையோடு உளம்பூரித்து, உன் இலட்சியத்தை புகழை, கடமையை, வீரத்தைக் காண விரும்புகின்ற தமிழன்னையின் நம்பிக்கைப் பெருமூச்சு வெற்றிப் புன்னகையாக மிளிர வேண்டுமென்ற அளவு கடந்த இதய ஆசையின் விளைவால் என் சிந்தனையில் தோன்றும் நல்லுரைகளை நீண்ட நாட்களாக உன் நலன் வளர கடித மூலமாக வளர்த்துக் கொண்டு வருகிறேன். அந்த வளர்ச்சியில் இன்னொன்று முக்யமாக நீ தெரிந்து கொள்ள வேண்டுமென்ற காரணத்தால் இம் முறை "நம்பிக்கை!" என்பதைப் பற்றி விளக்கத் துணிந்தேன்.

"அகில உலக அரங்கில் நமது கண்ணோட்டத்தினிடையே காணும் அரிய பற்பல சரித்திர ஆராய்ச்சி வரலாற்று ஏடுகளையும், ஏட்டில் காணும் விளக்கங்களையும் நமது இதயத்தின் துலாக்கோலாம் சிந்தனையில் எடையிட்டுப் பார்க்கும்போது எத்தகைய அற்புத நிகழ்ச்சிக் குறிப்புகளை கடந்துவிட்ட காலம் ஒன்று திரட்டித் தந்திருக்கிறது ! அதிலே எவ்வளவு மாறுதல்கள் அபூர்வ சம்பவங்கள் ! எண்ணத்தைத் திகைக்க வைக்கும் ஆச்சர்யமான சந்தர்ப்ப நிலைத் தோற்றங்கள்! இஃது நமக்கே வியப்பாகத் தோன்றுகிறதல்லவா ?" இவ்வித வியப்பிற்கு விளக்கமென்ன என்ற கேள்விக்குறி முனையின் எதிரொலியில் தான்; உலகம் போற்றும் உத்தமர்களை, உலக அறிஞர்களை; இலக்கிய மன்னர்களை, ஏனைய கலைஞர் குழுக்களை, கடமைக்காக கல்லறையிலே, விஷக்கிண்ணத்திலே, வெடிக்குண்டிலே, தூக்கு மேடையிலே, சிறைச்சாலையிலே, சித்ரவதையிலே; வெங்கொடுமை சாட்டிலே வெந்து மடிந்து மண்ணிலே புதையுண்டு புழுக்களின் உணவாகப் படைக்கப்பட்டதைக் கேள்விப் பட்டிருக்கிறோம்.

உதாரணத்திற்கு ஒரு சிலரைக் குறிப்பிடுகிறேன் ! உலக அறிஞன் கலீலீயோ! சத்தியத்தின் தூதுவன் கிருஸ்து ! லட்சியவாதி சாக்ரட்டீஸ் ! அஹிம்சை வீரன் காந்தி ! பொது மறைப் புலவன் வள்ளுவன் ! புதுமைக்கவி பாரதி ! புரட்சிவீரன் வ. ஊ. சி., கட்ட பொம்மன் இன்னும் எண்ண அளவில் அடங்காது மண்ணில் மறைந்த மாணிக்கங்கள் பலர்.

உலகம் பல்லாயிரக்கோடி மக்களைக் கொட்டி குவித்திருந்தாலும், இறுதியாகப் பார்க்கப் போனால், வாழ்க்கைப் போராட்டத்தின் கடைசிப் பட்டியலில் ஒரு சிலரைத் தான் வாழ்த்தும், புகழும் வாறியணைத்துக் கொள்கிறது ! அவர்களைத்தான் மேலே குறிப்பிட்டிருக்கிறேன். அவர்கள் எப்போதும், எந்தச் சமயத்திலும், எந்த காட்டிலும், சுதந்திர ஜோதிகளாக உலவிக் கொண்டே யிருப்பார்கள். இஃது மறக்க முடியாத மாற்ற முடியாத உண்மையாகும். இவர்கள் அனைவரும், நம்பிக்கையில் நாட்டங் கொண்டவர்களே தவிர, தன்னம்பிக்கையை இழந்து விட்டவர்களல்ல என்பதை நீ, உணர வேண்டும்.

அன்று கலீலியோவைக் கல்லால் அடித்தபோது அவன் நம்பிக்கை அசைந்திருந்தால் எதிர்காலம் அவனை என்ன நினைத்திருக்கும்! அது போலவே, சாக்ரட்டீஸோ, காந்தியோ, கிருஸ்துவோ, வள்ளுவனோ, பாரதியோ, வ. ஊ. சியோ, கட்டப்பொம்மனோ சந்தர்ப்ப சூழ் நிலையின் காரணமாகத் தங்களது நம்பிக்கையை விட்டுக் கொடுத்திருந்தால் சரித்திரத்தில் இவர்களுக்கு இடம் உண்டா! இடம் கிடைக்குமா! இவர்கள் யார். என்று கேள்வி கேட்கும் அளவிற்கு அல்லவா வந்திருப்பார்கள் இவ்வுலகத்தார்! இன்றைய உலக மக்களின் இதயத்திலே இவர்கள் புகழிடம் பெற்றுவிட்டார்களல்லவா? நம்பிக்கையில் நாட்டமில்லாம லிருந்திருந்தால், இன்றைய விஞ்ஞான உலகின் தலை எழுத்தை நிர்ணயிக்க யாரால் முடியும், என்றெல்லாம் நோக்கும்போது தன்நம்பிக்கை யுடையவர்களின் வைராக்கிய உணர்ச்சியே இத்தகைய சாதனைகளைச் சாதிக்க வல்லது என்றொரு முடிவிற்கு வருகிறோம்.

சந்தேகம் என்பது தாழ்வு மனப்பான்மை யுடையோரின் மாற்றாந்தாய் வளர்ப்புக் குழந்தை என்பதை நீ மறந்து விடக்கூடாது. அக்குழந்தை அவநம்பிக்கையால், ''கோழை'' என்ற முத்திரை குத்தப்பட்டு, கோமாளித்தனமாக, குட்டக் கருத்துக்களின் வித்துக்களாக, ஊமையாக, ஊதாரியாக உலகைப் புரிந்து கொள்ளாத அளவிற்கு ''பயம்'' என்ற படுகுழியில் வீழ்ந்து வீழ்ந்து எழுந்திருக்கிறது. சந்தேகம் நிறைந்த எண்ணத்தோடு இருக்கிறவன் தன்னகத்தே தோன்றும் அரும் பெறும் நல்ல சக்திகளை உதறித் தள்ளிவிடுகிறான், பைத்தியக்காரனைக் காட்சி அளிக்கிறான். மக்கள் மன்றத்திலின்று விலகி நிற்கிறான் விதியைக் கையில் வைத்துக் கொண்டு வேதனையோடு, வெறுப்புணர்ச்சியோடு விம்மலும், விக்கலும் கலந்த நிலையில் விழிகளில் தப்பியோடும் கண்ணீர்த் துளிகளோடு தன்னை அலட்சியப்படுத்தி ஓடிக்கொண்டிருக்கும் கால வேகத்தை கணக்கிட்டுக் கொண்டிருக்கிறான். உலகைப் பழிக்கிறான், ஊராரைக் குறை சொல்கிறான் இறுதியில் சமுதாயக் குற்றவாளியாகி தற்கொலைக்குத் தயாராகி விடுகிறான்.

இவ்வித அபாயகரமான சூழ்நிலையின் எதிர்ப்பு முட்டாளை நாடிச் செல்வதில்லை. காரணம், அவன் தன்னையன்றிப் பிறர் பொருட்டு அக்கரை காட்டுவதில்லை, அந்த அளவிற்கு அவனிடம் சிந்தனை சக்தி என்பதே கிடையாது. சிந்திப்பதே மிகமிகசிக்கலான விஷயம் சிந்திக்காமலிருந்தாலும் தன்னை மனிதனாக்கிக் கொள்ள முடியாது என்பது அவனுக்கு எட்டிக்கசப்பாகும். அவன் காணும் உலகே வேறு, அவன் நடை முறை செயல் பழக்க வழக்கம் அத்தனையுமே ஒரு வகைக் கூட்டுச் சரக்கு! நடுத்தரமான அறிவு படைத்தவனைத்தான் இந்த பயங்கரமான வியாதி தொத்திக் கொண்டு அவனை நாளுக்கு நாள்புழுப்போல அரித்துவிடுகிறது. இதற்குப் பயந்தான் முக்ய காரணமாகும் என்பதைத் தவிர வேறென்ன உனக்குநான் விளக்கமாக எடுத்துக்காட்ட முடியும் என்பதை நீ சற்று யோசிக்க வேண்டும்.

உலக வரலாற்றில் மனித இனம் வாழ நல்ல வழி வகுத்தவர்களை அவர்கள் கையாண்ட செயலை முறையை, தன்னம்பிக்கையை, நாமும் கடைப்பிடித்து அவநம்பிக்கையின் பிடியிலிருந்து தப்பிவிட வேண்டுமே தவிர மீண்டும் மீண்டும் நமது இதயத்தை, எண்ணத்தை, பண்பாட்டை ஆற்றலை அழிவுப் பாதைக்குச் செல்ல விடாது நம்பிக்கையில் நாம் நாட்டமுடையவர்களாக இருக்க வேண்டுமென்று உனக்கு எடுத்துக்காட்டுகிறேன்.

தம்பி, இன்னொரு முக்யமான விஷயத்தைப் பற்றி நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

நம்பிக்கை என்பது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய பிரச்சனையாகும். எதையும் திடீரென நம்பிவிடக் கூடாது சற்று நிதானமாகவே சிந்தித்து ஒரு முடிவிற்கு வரவேண்டும். ஏனென்றால், இன்றைய கால நிலைமையும், எதிர் காலத்தையும் நினைத்துப் பார்க்கும்போது, எதையும் தீர்க்கமாகச் சொல்லிவிட முடியாத அளவில் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது. நீ ஒரு விஷயத்தில் இறங்கும்போது உனக்கு நல்ல ஆராய்ச்சி இருக்க வேண்டும் அதற் கேற்ற வரம்பும் அமைய வேண்டும், அதற்குப் பின்னரே, நீ இறங்கி இருக்கிற விஷயத்தின் விளக்கமறிந்து நம்டிக்கை கொள்ள வேண்டும். அதோடு கூட, பிறர் உன் மீது நம்பிக்கை வைக்குமளவிற்கு நீ உன்னை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் அப்போதுதான் எதிர்கால சமுதாயம் உன்னை எதிர்நோக்கி அழைக்கும். வாழ்க்கையில் ஏற்படும் சிற்சில சூழ்நிலை மாறுதல்களுக்காக, உன் எண்ணத்தை எரிமலையாக்கிக் கொள்ளாதே. வாழ்க்கைப் பாதையேகரடு முரடான காட்டுப்பாதை அவற்றைக் கடந்து செல்லும்போது எத்தனையோ தோல்வி ஏற்படலாம், நிகழ்காலத் தோல்விதான் எதிர்கால வெற்றிப் பாதைக்கு உன்னை விழி அசைத்து அழைக்கும். முயற்சி செய் உன் முழுத்தரமான முயற்சியும், அசையாத நம்பிக்கையும், வாழ்க்கையின் இரு கண்களென மதித்து எதிர்காலத்தில் சீறும் சிறப்புமாகத் தமிழகத்தில் நீ, வாழ ஆசைப்படுகிறேன். அந்த ஒரே ஆசைதான் உன்னிடமிருந்து நான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதே தவிர வேறல்ல.

உன் அன்பான தமையன்.

இஸ்லாமியத் தமிழ்த் தொண்டு

ஹ. ஜா. முகம்மது ஆரீப்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்து பழகி வரும் நந்தமிழுக்கு அணி செய்யும் வகையில் பணி செய்தோர் பலர். மன்னரும் மக்களும் ஆற்றிய அளப்பரிய தொண்டின் பரிசுதான் வற்றாச் சுனைகளாக—தமிழ்த் தொன்மையின் சான்றுகளாக — இன்று நம்மிடையில் வழங்கிவரும் சங்க இலக்கியங்களாகும்.

சங்க மருவிய காலத்திலிருந்து இன்றுவரை தமிழுக்குப் பணி செய்தலே தமக்கு அணியாகக்கொண்டு உழைத்த பெருமை தமிழ் மண்ணில் தோன்றியவர்க்கே யன்றி மாநிலத்து மக்களுக்கும் உண்டு.

சமயத்தால் வேறுபட்டிருந்தும், சமணர், பௌத்தர், வைணவர் ஆகிய பல்லோரும் தத்தம் சமயப் பிரச்சாரத்திற்கு எப்படி தமிழ் மொழியின் வளப்பம் வேண்டுமென்று நினைத்துப் பாடுபட்டார்களோ, அங்ஙனமே கிருத்தவரும் இஸ்லாமியரும் தமிழ் வளர்ச்சியில் ஆர்வங்காட்டி தம் கொள்கையில் ஏற்றங் கண்டிருக்கின்றனர். ஆனால் கிருத்துவ சமண பௌத்த பெரியார்கள் செய்த தமிழ்த் தொண்டை வானளாவப் போற்றிப் புகழும் நம் தமிழ் மக்கள், தங்களுடனேயே ஒன்றி மற்ற சமயத்தவர்களைவிட எண்ணிக்கையில் அதிகமாக வாழும் இஸ்லாமியப் பெரியார்தம் தமிழ்ப்பற்றை தொண்டைப் புகழ, தம் நாவை அசைக்காமலிருப்பது வியப்பிற்குரியது.

அரபு 'லிபி' தெரிந்தோர் தமிழை எளிமையாகக் கற்றுக் கொள்ள அரபு 'லிபி'யைக் கொண்டு பற்பல மார்க்கக் கிரந்தங்களை எழுதி தமிழகத்தில் ஒரு புது மொழியைப் புகுத்தியவர் இஸ்லாமியத் தமிழரன்றோ? சமண பௌத்த கிருத்துவ ஆரிய மக்கள் தமிழைக் கற்று தமிழில் பற்பல செய்யுள் உரை நடை நூற்களை யாத்ததிற்கு எந்த வகையிலும் குறைவில்லாது இஸ்லாமியத் தமிழ்ப்பெருமக்களும் தமிழில் எண்ணிலடங்காத காவியங்களையும் புராணங்களையும் உரைநடைகளையும் உண்டாக்கி தமிழ்த் தொண்டாற்றி வருகின்றனர். இது வெறும் புகழ்ச்சியன்று.

இந்நூற்கள் பெரும்பாலும் தமிழிலுள்ள பேர் பெற்ற முதன் நூற்களை நடையிலும் அமைப்பிலும் போக்கிலும் பொருந்தியே செல்கின்றன. இஸ்லாமியத் தமிழ் நூல்களின் முக்கியக் கதாபாத்திரங்கள் தமிழில் வழங்கும் கதாபாத்திரங்களினின்றும் வேறுபட்டிருப்பினும் அக்கதா பாத்திரங்கள் பெரும்பாலும் தமிழகத்தின் பண்பாட்டினுக்கு ஒத்தே அமைந்திருக்கின்றன. பிறமொழி நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டுமென்று பேரவாக் கொள்ளும் புரட்சிக் கவியின் கருத்திற்கிசைய இவர்களின் தமிழ் நூல்களனைத்தும் அரபி மொழியில் தமக்கு முதன் நூல்களைப் பெற்றிருக்கின்றன. சமய சார்புடைய நூல்களே யன்றி சமயத் தொடர்பற்ற நூல்களும் இஸ்லாமியரால் ஆக்கப்பட்டிருக்கின்றன. தொகுத்துக் கூறினல் முஸ்லிம்கள் இயல், இசை கூத்து என்ற முத்தமிழுக்கும் உருப்படியான தொண்டுகள் பல செய்திருக்கின்றனர்.

இஸ்லாமியரால் உண்டாக்கப்பட்ட தமிழ் நூற்களுள் தலைசிறந்தது சீருப்புராணம் என்ற காப்பியமாகும். இது சமயச் சார்புடைய நூற்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினலும் இதில் ஆங்காங்கு இஸ்லாத்திற்கு முரணான கருத்துக்கள், ஆசாரங்கள் விரவி வருகின்றன. இது முகம்மது நபி

யின் வாழ்க்கையை எண் சுவையும் ததும்பும் விருத்தப்பாக்களில் சொல்லிச் செல்கின்றது. இக் காப்பியத்தின் கவிநயமும் கற்பனைத் திறமும் கம்பராமாயணத்தை ஒத்திருக்கிறது. சமயச் சார்பில்லாது எழுதிய நூல்களில் சிறப்புடையது குலாம் காதிறு நாவலரவர்களால் இயற்றப் பெற்ற மதுரை சங்கத்துப் புலவர் ஆற்றுப்படை என்ற நூலாகும். இதில் புலவர் பெருமக்களின் பெருமையும் கூடலின் அழகும் மதுரைக்குச் செல்லும் வழியின் வனப்பும் கூறப்பட்டிருக்கிறது.

முஸ்லிம்களால் ஆக்கப்பட்ட பிள்ளைத் தமிழ்களில் உயர்ந்தது நபிநாயகம் பிள்ளைத் தமிழாகும். நபிநாயகத்தைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பத்துப் பருவங்களில் செய்யிது அனபியா புலவரவர்களால் பாடப்பெற்றது, தமிழிலேயே இல்லாத புது வகைப் பிரபந்தங்களும் இவர்களால் உண்டாக்கப்பட்டிருக்கின்றன, 'படைப் போர்' என்பது அவ்வகையில் தலைசிறந்தது. முனாஜாத்து, மசலா, நாமா, இஸ்ஸா முதலியன இஸ்லாமியருக்கே உரிய பிரபந்தங்களாகும். காசிம் படைப் போர், முனாஜாத்து மாலை, வெள்ளாட்டி மசலா, முஅஜிஜாதுநாமா, ஜெய்துன் கிஸ்ஸா முதலியன இத்திறத்து பிரபந்தங்களுக்குச் சான்றுகளாம். திரு மதீனத்தந்தாதி' என்பது இஸ்லாமியரால் ஆக்கப்பட்ட அந்தாதிவகையுள் ஒன்று. மாலை, பாட்டு, திருப்புகழ், கும்மி முதலான வகை நூற்களும் உண்டு.

நாடகவகை நூற்களுள் 1873 ல் முகம்மது இபுராஹிம் இயற்றிய 'அப்பாசு' நாடகமும் 1870ல் வண்ணக் களஞ்சியப் புலவரால் எழுதப்பட்ட 'அலி பாதுஷா' நாடகமும் சிறப்புடைய நாடகங்களாகும். இஸ்லாமிய ஆசாரங்களைக் கூறும் தமிழ் இலக்கியங்களுள் ஆசாரக்கோவை தலைமை வாய்ந்தது. இதனைப் பாடினவர் கீழக்கரை அப்துல் மஜீது என்பவர்.

இஸ்லாமிய ஞானிகளால் பாடப்பட்ட பக்தி ததும்பும் நூற்களும் உண்டு. மஸ்தான் சாகிபு பாடல்கள் உள்ளத்தை உருக்கும் தகைமையுடையது.

இஸ்லாமிய கோட்பாடுகளையும் ஆசாரங்களையும் பரப்புவதற்காக எழுதப்பட்ட உரைநடை நூற்களும் உண்டு. இவை பெரும்பாலும் அரபி நூற்களின் மொழி பெயர்ப்புகளாகும். முஸ்லிம் அத்வைத் மூலமொழியும் பரங்கிப் பேட்டை காதிறு ஹசனு மரைக்காயர் அவர்களால் எழுதப்பட்ட கிருஸ்துமத தீபிகையும் சமய வாதங்களுக்கு முதற் காரணமாய் விளங்குகின்றன. எளிய சொற்களைக் கொண்டு குறுகிய வாக்கியங்களில் அழகிய முறையில் உரைநடை நூற்கள் எழுதுவதில் தலைசிறந்த தமிழ் நூலாசிரியர்கள் என்று போற்றப்படும் திரு. வி. வி., ப. தாவுத்ஷா ஆகியவர்களுள் ப. தாவுத்ஷா ஒரு முஸ்லிம் என்பதை யாரே மறுக்க முடியும்? இவர் எழுதிய நபிகள் நாயக மான்மியம் இவருடைய தமிழ் நடைக்கு ஒர் எடுத்துக்காட்டு. காந்தீயக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளைக்கும், நாவலர் வேங்கடசாமி நாட்டார்க்கும் ஆசிரியராக விளங்கியப் பெருமை இலக்கணப் புலவர் பிச்சை இபுராஹிமுக்கன்றோ? இப்புலவர் பெருமான் எழுதிய இன்பத் தமிழ் இலக்கண விளக்கம் என்ற நூல் இலக்கணம் எட்டிக்காயன்று, தித்கும் தீம்பலா என்பதை எண்பிக்க வல்லது.

"தமிழ்நாட்டு சைவ வைணவ ஆசிரியர்களால் தமிழை எவ்வளவு நன்ருகக் கற்று அதிலே பேச எழுத முடியுமோ அவ்வளவு நன்ருகப் பேசவும் எழுதவும் இஸ்லாமியரால் இயலும்.... இவர்களின் அரும்பணியைத் தமிழ் நாடு அறியாதிருத்தல் வருந்தத்தக்கதே" என்ற க. வித்தியானந்தம் M. A. Phdயின் வருத்தச் சொல்லோடு இக்கட்டுரையை முடிக்கிறேன்.

பாரதி பாதையில்......

"ரோஜா"

நீ கேட்கும் கேள்விகட்கு பாரதியே—உலகம்
நினைத்துமனம் குமுறுகின்ற நிலையைப் பாராய்!
நீ சொன்ன சொற்களிலே மாந்தரெலாம்—விழித்து
திக்கெட்டும் சென்றுகலைச் செல்வம் சேர்த்தார்;

நீ பழித்த புழுதியெலாம் நீங்கியதால்—இனியும்
நல்லதொரு வீணை கொணர்ந் திசையை மீட்பாய்!
நீ கோர்த்த பாமணிகள் நிதம் நிதமும்—கற்று
நின்றவ்வழி நெறிதவறு நிலையைக் கற்றார்!

ஏட்டினிலே எழுதிவைத்த பாட்டினைப்போல்—காதல்
புரட்சிகண் டுய்த்துவிட திட்டமிட்டோம்!
வீட்டினிலே பெண்களுக்கு சம உரிமை—இனிமேல்
தந்துவிட்டோம். என்றதனைச் சட்டம் செய்தோம்!

கூட்டினிலே அடைத்துவைத்த நியதிகட்கு—உரிமை
நியாயமிங்கே கிடைத்துவிட்ட நிலையைப் பெற்றோம்;
நீ மீட்ட இசையினிலே வீறுகொண்டு—பரத
நாட்டினிலே புது யுகத்தைப் பெற்றோம்; உய்ந்தோம்!

பாட்டுகளும் செய்யுளையும் பாடிவிட்டோம்—பரத
நாட்டியமும் கூத்துகளும் கலையாய்ச் செய்தோம்;
வீட்டினிலே குடிசையிலே தொழில்கள்—மிகவாய்ப்
பெருகிவரும் நிலையினிலே மிதந்தோம் கண்டாய்?

நீ கேட்ட வரங்களெல்லாம் நியதியெலாம்—நாங்கள்
நித்தம் பெற் றுய்ந்துவரும் நிலையைக் கண்டோம்
நீ வகுத்த பாதையெலாம் மலர்சொரிந்து—தமிழர்
நித்தமதில் சத்தியமாய் நடை பயில்வார்.



Phone: 2200
UMA
TRADE MARK
UP
PRINTERS
PRINTERS &
CARD BOARD BOX MAKERS
Specialists in
CARTONS & CARDBOARD BOXES
4/32, THATHAMUTHIAPPAN ST, MADRAS-1.
எல்லாரக அட்டைப்பெட்டிகள் தயாரிப்பதில் சிறந்தது
உமா ப்ரிண்டர்ஸ்
போன்: 2200
4/32, தாதாமுத்தியப்பன் தெரு, மதராஸ்-1.



மிகச் சிறந்த
மிட்டாய்கள்
Babu's
HIGH CLASS
SWEETS
பாபு கன்பெக்ஷனரி - மதராஸ் ௨1.

அலை ஓய்ந்தது

ர. சண்முகம்

சென்ற இதழ்களில்: முருகானந்தம் செல்வமும் செல்வாக்கும் நிறைந்த ஒரு பெரிய மனிதராக இருந்தார். தன்னுடைய மூத்த மகள் சாவித்திரியை ஒரு ஏழை இளைஞன ஸ்ரீரங்கனுக்கு மணமுடித்து வைத்து அவனை வீட்டோடு வைத்துக் கொண்டார். ஸ்ரீரங்கன் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு முருகானந்தத்தின் செல்வங்களை தன் பெயருக்கு எழுதி வாங்கிக்கொண்டு ஊரைவிட்டே மறைந்து விடுகிறன். ஒருநாள் அவன் முருகானந்தத்தின் சொத்துக்களையெல்லாம் வேறொருவருக்கு விற்றுவிட்டதாக அறிந்து முருகானந்தம் மனமொடிந்து விடுகிறார். அவர் மனைவி இந்த அதிர்ச்சி தாங்கமாட்டாமல் உயிரை விட்டுவிடுகிறள். ஒரு பெரிய குடும்பம் சீரழிகிறது.

ஓட்டாண்டியாகிவிட்ட தன் தந்தையுடன் தன் தங்கை தங்கம் மீனு ஆகிய இருவர் சகிதம் வீட்டைவிட்டு வெளியே புறப்படுகிறள் சாவித்திரி.

ஏழு வருடங்களை எவ்வளவோ கஷ்டங்களுக்கு இடையே சகித்துக்கொண்டு கடைசியாக பழையனூர் வந்து சேர்ந்து அங்கே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு கஷ்ட ஜீவனம் செய்கிறள் சாவித்திரி.

அவள் குடியிருந்த வீட்டின் மாடியில் ஆரோக்கியம் என்ற ஒரு இளைஞன் இருந்தான். சிறுவயதில் அனாதையாக விடப்பட்ட அவன் உழைப்பால் உயர்ந்து பெரிய தையற்கடை வைத்து வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தான். தன்னலமற்ற பொது நல வாழ்வு நடத்துவதன் மூலம் அவன் பழையனூர் மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றிருந்தான். அவன் சாவித்திரியைக் காதலித்தான். ஆனல் சாவித்திரியின் எண்ணத்தை அவனல் புரிந்துகொள்ள இயலாது திணறுகிறன்.

பழையனூர் நகரசபைத் தலைவர் திருவரங்கநாதர் குறுக்கு வழியில் முன்னுக்கு வந்து லட்சாதிபதியாக விளங்குபவர். பணமும், பெண்ணும் அவரது லட்சியங்கள். அவற்றையடைய அவர் எது செய்யவும் தயங்கமாட்டார்.

அவரைக் கொலை செய்ய முயன்று பலிக்காமல் போன கனகசபை என்ற மனிதர் எதிர்பாராதவிதமாக ஆரோக்கியத்தின் நண்பராகி அவன் அறையிலேயே தங்கி விடுகிறர். அவர் திருவரங்கநாதரை கொலை செய்வது பற்றியே சதா சிந்தித்துக் கொண்டிருக்கிறர்.

திருவரங்கநாதர் வீட்டில் நடந்த மதுவிலக்குக் கமிட்டிக் கூட்டத்தில் சாவித்திரி கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பதாக திருவரங்கநாதரின் அந்தரங்க ஆள் ஆஞ்சனேயன் குற்றம் சாட்ட, அங்கிருந்த ஆரோக்கியம் அதை மறுத்துவிட்டு அங்கிருந்தவர்களை ஆத்திரத்துடன் திட்டிப் பேசிவிட்டு வெளியேறுகிறன். அன்று மாலை குன்றின் அடிவாரத்தில் ஆரோக்கியம் உலாவப் போனபோது சாவித்திரி இருட்டிய பிறகு தனியாக மலையடிவாரத்திலுள்ள சேரியை நோக்கிச் செல்வது கண்டு ஆரோக்கியத்தின் மனமும் அவளை சந்தேகிக்கிறது. ஒருவேளை ஆஞ்சனேயன் சொன்னது சரியாக இருக்குமோ என்றும் சிந்திக்கிறன். — **இனி மேலே.........**

சாவித்திரியைப் பின்பற்றிச் சென்று அவளுடைய நடவடிக்கைகளை கண்ணாரக் கண்டு சந்தேக நிவர்த்தி செய்து கொள்ளலாம் என்ற எண்ணம் ஆரோக்கியத்தின் மனதில் ஒரு விநாடி எழுந்தது. ஆனல் அடுத்த நிமிஷம் மனதை மாற்றிக் கொண்டான்.

தனக்கும் சாவித்திரிக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லா

திருக்கும்போது அவளுடைய நடவடிக்கைகளைத் துப்பறிய தனக்கென்ன உரிமை இருக்கிறது என்று அவன் மனம் கூறிற்று; சாவித்திரி குற்றமற்ற நிரபராதி என்று நிரூபிக்கப்படுவதனாலோ; அல்லது குற்றவாளி என்று தீர்மானிக்கப்படுவதாலோ தனக்கு ஏற்படும் லாப நஷ்டங்கள் என்ன என்று எண்ணிப் பார்த்தபோது ஆரோக்கியத்திற்கு தன் செயல் அத்தனையும் பைத்தியக்காரத்தனமானவை என்றே தோன்றியது.

அவளை அவ்வளவு சுலபத்தில் தன் இதயத்தைவிட்டு அகற்றிவிட முடியாது என்று அவனுக்குத் தோன்றியது; என்றாலும் தன் மன அமைதியை சதா கலைத்துக் கொண்டிருக்கும் இந்தப் பிரச்னையை எப்படியாவது ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துதான் ஆக வேண்டும் என்ற திட தீர்மானம் வரவர அவன் மனதில் வேறூன்றத் தொடங்கியது.

சாவித்திரியைப் பற்றி திருவரங்கநாதர் வீட்டில் பேச்சு அடிபடுகிறது; அசாதாரண ஒரு மனிதராகத் தோன்றும் கனகசபையே இவளைப் பற்றி சந்தேகப்படுகிறார்; அவருடைய சந்தேகத்தை மெய்ப்பிப்பது போல இந்த அகாலத்தில் தன்னந்தனியாக இவள் சேரியை நோக்கிச் செல்கிறாள்; மற்றும் இவள் நடத்தும் மர்மம் நிறைந்த வாழ்வு ஆகிய இவற்றை யெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போதுதான் ஒரு தூசி போலவும் சாவித்திரி பயங்கரமான ஒரு சூறுவளி போலவும் ஆரோக்கியத்தின் மனம் கற்பனை செய்தது. இந்தச் சூறுவளியில் சிக்கிக்கொள்ளாமல் கூடியவரை விலகிப் போய்விடுவது தான் நல்லது என்று அவன் மனதில் பட்டது.

இப்படியே பலப்பல சிந்தனைகளால் மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டு பாறை மீது உட்கார்ந்துக் கொண்டிருந்தவன் மிக அருகில் காலடியோசை கேட்கவே திரும்பிப் பார்த்தான். சாவித்திரி திரும்பி வந்துக்கொண்டிருந்தாள்.

அவள் கண்களில் படாமல் மறைந்துக் கொள்ளலாம் என்று ஒருக்கணம் யோசித்தான். பிறகு இப்படிச் செய்வது அனாவசிய வேலை என்று அவனுக்குத் தோன்றியது. அதனால் அவள் வருவதைக் கவனியாதவன் போல வானத்தில் பவனி வரும் நிலாவின்மீது கண்களை ஓடவிட்ட வண்ணம் மௌனமாக இருந்தான்.

நீண்ட நேரங்களுக்குப் பிறகு கழுத்தைத் திருப்பிக் கீழே பார்த்தவன் திகைப்புற்றான். அங்கே ஆரோக்கியத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்த வண்ணம் சாவித்திரி நின்றிருந்தாள்.

ஆரோக்கியத்தின் இதயத்தில் அர்த்தமற்ற ஒரு பரபரப்பு தோன்றியது. உடல் சிலிர்ப்பது போல உணர்ந்தான். அவளைப் பார்த்து ஏதோ சொல்ல வாயெடுத்தான். பலதடவை பேச முயன்றான். ஆனால் ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை.

''வீட்டுக்குப் போகவில்லையா?'' என்று சாவித்திரியே முதற் கேள்வியைப் போட்டு அந்த தர்மசங்கடமான நிலையில் சலனத்தை உண்டாக்கினாள்.

''கொஞ்சம் நேரம் கழித்துப் போகலாம் என்றிருக்கிறேன்'' என்று மெல்லிய குரலில் பதிலளித்தான் ஆரோக்கியம்.

''அதுவரையில் நானும் உங்களோடு தங்கியிருப்பதில் ஆட்சேபனை இல்லையே....'' என்று கேட்டாள் சாவித்திரி.

இந்தக் கேள்வியை அவன் எதிர்பார்க்கவே இல்லை. மேலும் எவ்வித தயக்கமும் இல்லாமல் சகஜபாவத்தில் அவள் பேசிய முறை அவனைப் பெருவியப்பில் ஆழ்த்தியது.

''உங்களுக்கு ஒன்றும் அசௌகரியம் இல்லையென்றால் என் ஆட்சேபனை என்ன இருக்க முடியும்?'' என்று ஆரோக்கியம் கூறிக் கொண்டிருக்கும் போதே

சாவித்திரி பாறையின் மீது ஏறி வந்து அவனுக்கு அருகே உட்கார்ந்துக் கொண்டாள்.

ஆரோக்கியத்துக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவள் அவனுக்கு மிகவும் சமீபத்தில் உட்கார்ந்திருந்தாள். வானத்தில் சந்திரன் நன்றாக ஒளி வீசிக்கொண்டிருந்ததால் சாவித்திரியின் முகம் ஆரோக்கியத்திற்குத் தெளிவாகத் தெரிந்தது. அவள் நீல நிறச் சேலை ஒன்றை உடலை போர்த்தினாற்போல அணிந்திருந்தாள். தலைமயிரை மிக அலட்சியமாக அள்ளி முடித்திருந்தாள். அது கழுத்தில் தள தள வென முடங்கிக் கிடந்தது. முன்புறமாக கலைந்திருந்த கொஞ்சம் கேசங்கள் கன்னத்தில் விழுந்து காற்றில் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தன. இயற்கையாக அழகு ததும்பி வழியும் சாவித்திரியின் தோற்றம் அப்பொழுது அபாரமானதொரு தெய்வீக ஒளி பெற்றுப் பிரகாசிப்பது போலிருந்தது. மெய்மறந்து போய் அந்த எழிற் சிகரத்தை விழுங்கி விடுவது போலப் பார்த்துக் கொண்டிருந்தான்.

எதிரே தெரியும் ஏரியைக் கவனித்துக் கொண்டிருந்த சாவித்திரி, இருந்தாற் போலிருந்து ஆரோக்கியத்தின் பக்கம் திரும்பி ''திருவரங்கநாதர் வீட்டில் நடந்த விஷயம் கேள்விப்பட்டு மிகவும் வருந்தினேன். என்னால் உங்களுக்குப் பலவிதமான தொல்லைகள்.......'' என்றாள்.

''யார் சொன்னது?....'' என்று ஆச்சரியம் ததும்பக் கேட்டான் ஆரோக்கியம்.

''ஆஞ்சனேயர் சொன்னார்....''

''அவனை உங்களுக்குத் தெரியுமா?'' என்று பரபரப்புடன் கேட்டான் ஆரோக்கியம்.

''அவரைப் பார்த்தது இது இரண்டாவது தடவை.

இதற்குமேல் ஒன்றும் தெரியாது...''

''முதல் தடவையாக எப்பொழுது பார்த்தீர்கள்?''

''சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு என்று நினைக்கிறேன்........ இந்த குன்றின் அடிவாரத்தில் தான். மாலை நேரத்தில் குழந்தைகளோடு இங்கே உலாவ வந்திருந்தேன். அப்போது.......''

''என்ன சொன்னான்?....''

''தான் ஒரு பொது நலத் தொண்டர் என்றும், என் குடும்ப நிலையறிந்து வருந்துவதாகவும், திருவரங்கநாதர் நல்ல மனிதர் என்றும், ஒரு தடவை அவரை பேட்டிகாண ஏற்பாடு செய்வதாகவும் அவர் மனமிரங்கினால் ஏதாவது உதவி செய்யக்கூடுமென்றும் கூறினார். உதவி தேவையில்லை என்று மறுத்து விட்டேன்....''

''அயோக்கியப்பயல்....'' என்று பற்களைக் கடித்துக் கொண்டான் ஆரோக்கியம்.

''இன்று மாலை போலீஸ்காரர்கள் வந்துபோன பிறகு அவர் வந்தார். எங்கள் குடும்பத்தைப் பற்றி போலீஸ் அதிகாரிகட்கு ஏதோ தவறான எண்ணம் பரவி இருப்பதாகவும்; தங்கள் விஷயத்தில் திருவரங்கநாதரின் அனுதாபத்தைப் பெறத் தான் முயற்சித்துக் கொண்டிருக்கும்போது நீங்கள் அனாவசியமாக கூட்டத்தில் பேசிக் கெடுத்து விட்டதாகவும், உடனடியாக திருவரங்கநாதரை சந்தித்தால் இந்தப் போலீஸ் தொல்லைகள் நீங்குவதோடு, நகரசபை பள்ளி ஒன்றில் உபாத்தியாயினி வேலை வாங்கித் தரத் தன்னால் முடியுமென்றும் கூறினார்....''

''எல்லாம் இவன் செய்த வினை தானா! இப்பொழுது புரிகிறது. இருக்கட்டும் பார்த்து விடுகிறேன் அந்தப் பயலை....'' என்று கைகளைப் பலமாக தேய்த்துக் கொண்டான் ஆரோக்கியம். அவன் முகத்தில் பரவிய கோபத்தின் வேகத்தை சாவித்திரி கவனித்தாள். பிறகு தயக்கத்தோடு அவனைப் பார்த்து ''நீங்கள் ஒன்றும் தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நான் அல்லல்பட்டு அழியவே பிறந்தவள். என் பொருட்டு நீங்களும் ஏன் கஷ்டத்திற்கு உள்ளாக வேண்டும்? தயவு செய்து எனக்காக எந்தத் தகராறையும் தலை மீது போட்டுக் கொள்ளாதீர்கள்'' என்றாள்.

''இதில் உங்கள் விஷயம் மட்டுமல்ல; இந்த ஊர் பெண்களின் மானத்தைப் பற்றிய விஷயமும் அடங்கியிருக்கிறது. திருவரங்கநாதர் பணத்திமிரால் காமப்பித்துப் பிடித்தலைந்தால் அதற்கு உங்களைப் போன்ற அப்பாவிப் பெண்கள் அல்லல்பட்டு அழிய வேண்டுமா? இந்த மாதிரி ஆட்களை கனகசபை சொல்வதுபோல துண்டு துண்டாக வெட்டித்தான் எறிய வேண்டும்....'' ஆத்திரத்தோடு அவன் போட்ட கூச்சல் அந்தப் பிராந்தியத்தில் எதிரொலி செய்தது.

சாவித்திரி சட்டென அவன் கைகளை பிடித்துக் கொண்டாள். ''ஐயோ.... இதெல்லாம் என்ன.... இந்த அற்பர்களாலெல்லாம் எனக்கு ஒன்றும் ஆபத்து வந்து விடாது. நீங்கள் வீணாக அலட்டிக் கொள்கிறீர்கள். இந்த விஷயத்தை இத்துடன் விட்டு விடுங்கள்'' என்று கெஞ்சினாள்.

குளிர்ச்சி பட்டவுடன் உஷ்ணமானியிலுள்ள பாதரசம் கீழே இறங்குவது போல, சாவித்திரியின் பூப்போன்ற கரங்களின் ஸ்பரிசத்தினால் ஆரோக்கியத்தின் ஆவேசம் ஒரு நொடியில் இறங்கி விட்டது. அத்துடன் அவள் ஸ்பரிசம் உண்டாக்கிய இன்ப உணர்ச்சி அவனை மெய்மறக்க வைத்துவிட்டது. தன்னையும் மீறி எழுந்த ஒரு உணர்ச்சி வேகத்தோடு திடீரென அவள் கரங்களை அழுத்திப் பிடித்துக் கொள்ள முயன்றான். ஆனால் சாவித்திரி சட்டென கைகளை இழுத்துக் கொண்டாள்.

தன்னுடைய இந்தத் திடீர் ஆவேசத்தையும், அதனால் சற்று மிகையாக அவளிடம் நடந்துகொண்டதையும் எண்ணி ஆரோக்கியம் மனதிற்குள் வெட்கமடைந்தான். ஒருவேளை சாவித்திரி எழுந்து போய்விடுவாளோ? என்ற அச்சத்தோடு அவள் பக்கம் நோக்கினான். அவள் அப்படியொன்றும் தவறாக எடுத்துக் கொண்டதாக இல்லை என்பதை அவள் அமர்ந்திருந்த தோற்றமே எடுத்துக்காட்டியது. சந்திர ஒளி பட்டு வெள்ளிச் சரிகைகள் போல பிரகாசிக்கும் ஏரியின் நீர்மீது கண்களைப் பதித்த வண்ணம் மௌனமாக இருந்தாள்.

திடீரென எதைப் பற்றியோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டாள் போலிருக்கிறது. சாவித்திரி அசையவே இல்லை. அப்பொழுது அவள் இருந்த தோற்றம் ஆரோக்கியத்தின் மனதில் ஒரு அழகிய நிழலோவியத்தை நினைவூட்டியது. பெண் மௌனமடையும்போது தான் அவளுடைய உடலழகு சோபிக்கிறது என்பது எவ்வளவு அற்புதமான உண்மை என்பதை அனுபவபூர்வமாக உணர ஆரோக்கியத்துக்கு இந்த சந்தர்ப்பம் பயன்பட்டது. மெய்மறந்து அந்த வடிவழகியை பார்த்தான். இப்படி சாவித்திரி இரவில் தனியாக தனக்கு மிக அருகில் அமர்ந்திருப்பாள் என்று அரைமணி நேரத்திற்கு முன்பு யாராவது சொல்லியிருந்தால் அவர்களை பைத்தியத்தை விடக் கீழாகக் கருதியிருப்பான்.

சட்டெனத் திரும்பிய சாவித்திரி ஆரோக்கியம் தன்னையே உற்று கவனிப்பதைக் கண்டதும் வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டு ''என்ன பார்க்கிறீர்கள்'' என்றாள்.

''பார்க்கவில்லை. சிந்திக்கிறேன்'' என்றான் ஆரோக்கியம்.

''என்ன சிந்தனை....?''

''தேசசேவகன் பெரிய அபாக்கியவான்தான். நான் ஒரு எழுத்தாளன் — அல்லது சித்திரக்காரனாக இருந்திருந்தால் சற்றுமுன் என் மனதைக் கவர்ந்த காட்சிகளை எழுத்தோவியமாகவோ, திரைச் சித்திரமாகவோ தீட்டிப் பார்த்தாவது மகிழ்ந்திருப்பேன்''.

> தேங்கிக் கிடக்கும் குட்டையிலே பூச்சிப் புழுக்கள் உண்டாவது போல், சோம்பிய மனதிலே பயனற்ற தீய எண்ணங்கள் உருவாகின்றன.
>
> —வெ. ஸ்ரீ. சர்மா.

"இதயம்கூட ஒரு திரைச் சீலைக்கு சமம் என்று சொல்கிறீர்களே...."

இப்படி மெல்லிய குரலில் கூறிவிட்டு ஆரோக்கியத்தின் முகத்தை நோக்கினாள் சாவித்திரி.

"அது உண்மைதான். என் இதயத் திரையில்கூட நான் ஒரு சித்திரம் தீட்டினேன்....".

இதைச் சொல்லும் போது அவன் விட்ட ஒரு பெருமூச்சு அவன் மனத்துயரத்தின் பளுவைக் காட்டியது.

"அந்த சித்திரம் இப்போது மறைந்துவிட்டதா....?" என்றாள் சாவித்திரி. ஆரோக்கியம் அவளைக் கூர்ந்து நோக்கிவிட்டு,

"சித்திரம் மறையவில்லை திரைச் சீலைதான் கிழிக்கப்பட்டுவிட்டது...."

"யார் கிழித்தார்கள்...."

"அந்த சித்திரமே தான்...."

இதைச் சொல்லும்போது தன்னை யறியாது அவன் கை அவளைச் சுட்டிக் காட்டியது.

இதைப் புரிந்து கொள்ளாதவள்போல பாவனை செய்துக் கொண்டு சாவித்திரி பேச்சை மாற்றத் தொடங்கினாள்.

"உங்களுடன் ஒருவர் தங்கியிருக்காரே அவர் யார்?"

"நண்பர்...."

கனகசபையைப் பற்றி அவள் மேற்கொண்டு ஏதாவது கேட்பாள் என்று எதிர்பார்த்தான் ஒன்றும் கேட்கவில்லை. கேட்க விரும்பவும் இல்லை என்பதை அவள் முக பாவம் காட்டியது. ஆகவே ஆரோக்கியமும் பேச்சை மாற்றக் கருதி "நான் உங்களை ஒன்று கேட்கலாமா?" என்றான்.

"ஜாக்கிரதையாக மட்டும் கேளுங்கள்" என்று சாவித்திரி சிரித்தாள்.

"இத்தனை நாட்களாக என்னைக் கண்டு பயப்படுபவர்மாதிரி நடந்து கொண்டீர்களே, இன்று அந்தத் தீர்மானம் எப்படி மாறியது?..."

"நான் பயப்பட்டதாக யார் சொன்னது?...."

"பயப்படவே இல்லையா?"

"அது உங்கள் தவறான யூகம். அப்பாவுக்கு ஒரு மாதிரியான மனோ வியாதி. சிறிய விஷயங்களே அவருக்கு பிராணபத்தை உண்டாக்கிவிடலாம். அதற்காகத்தான்........"

"இப்போது புரிகிறது. உங்கள் தந்தைக்கு என்னைக் கண்டால் பிடிக்கவில்லை..."

"தனியாக உங்களைமட்டுமல்ல! பொதுவாக இன்றைய இளைஞர்களைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது...."

"ஏன் அப்படி?..."

"உங்களுக்குத் தேவையில்லாத விஷயம்..." இதைச் சொல்லும்போது சாவித்திரியின் குரலில் கொஞ்சம் கண்டிப்பு கலந்திருந்தது.

"அது போகட்டும் என் மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?...." என்றான் ஆரோக்கியம்.

"இல்லாமலா இங்கே இப்படி உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறேன்...." இதை அவள் வேடிக்

கையும் மதிப்பும் கலக்கக் கூறினாள்.

"உங்கள் வாழ்க்கைக்கு நான் ஏதாவது உதவி செய்தால் மறுக்க மாட்டீர்களே!"

"உதவி எனக்குத் தேவைப்படும் போது நான் அவசியம் உங்களைத் தான் கேட்பேன்...."

இந்த பதிலில் தன் கேள்விக்கு எதிர்மறையான கருத்தே தொனிப்பதைப் புரிந்து கொண்டதும் ஆரோக்கியத்தின் முகம் சுண்டிவிட்டது. இதை சாவித்திரியும் உணர்ந்தாள். அவனை நோக்கி பச்சாதாபத்தோடு "நீங்கள் தவருக எடுத்துக் கொண்டு விட்டீர்கள். என் குடும்ப வாழ்வுக்குத் தேவையான பொருளை நான் ஒரு வழியில் சம்பாதிக்கிறேன். இது போதுமானதாக இருக்கிறது. அதனுல்தான் பொருளாதாரத் துறையில் எனக்கு உதவும் தொல்லை உங்களுக்கு வேண்டாம் என்றேன். மற்றபடி எனக்கோ என் குடும்பத்தினருக்கோ வேறு ஏதாவது தொல்லைகள் இனி அடிக்கடி ஏற்படலாம் என்றே கருதுகிறேன். அப்பொழுது அனுதையான எனக்கு உங்களை விட்டால் வேறு கதி யார்?..." என்ருள் மனமுருக.

"இதைக் கூறிவிட்டு சட்டென எழுந்து நின்றுக் கொண்டு "இனி நாம் அடிக்கடி சந்திக்க வாய்ப்பு கிடைக்கும் என்று நினைக்கிறேன். நான் போய் வருகிறேன்" என்று சொல்லிச் கொண்டே உட்கார்ந்திருந்த பாறையை விட்டுக் கீழே இறங்கினுன்.

பாறையை விட்டுக் கீழே இறங்கிய சாவித்திரி "எனக்குப் பயமாக இருக்கிறது" என்ருள்.

"அப்போ நான் துணைக்கு வரட்டுமா?" என்று அனுதாபத்தோடு கேட்டான் ஆரோக்கியம்,

"பயம் என்னைப் பற்றியல்ல உங்களைப் பற்றித்தான். இந்தப் பக்கம் திருவரங்கநாதருடைய

> எண்ணங்களே மனிதனை உருவாக்குகின்றன. ஆகவே, உண்மையான மனிதனை யாருமே கண்டு கொள்ள முடியாது.... ஒருவனின் உண்மையான எண்ணங்களை எவரும் உணரமுடியாது என்பதனுல்!
>
> —ஞானப்பிரகாசம்.

ஆள் யாராவது வந்தால் நீங்கள் அவனிடம் சண்டைக்குப் போகாமல் இருக்க வேண்டும்...." என்று விளையாட்டாகக் கேட்டாள்.

மேலுக்கு இதை விளையாட்டாகக் கேட்டாலும் உள்ளுக்குள் அவளுக்கு ஆரோக்கியத்தின் சமீபத்திய மனப்போக்கு பயத்தைத் தான் உண்டாக்கியது. அவனுடன் நேரடியாகப் பேசிப் பழகாவிட்டாலும் முன்பெல்லாம் அவன் கோபப்பட்டு அவள் பார்த்ததில்லை. இப்பொழுதோ 'கொலை—சித்திரவதை' போன்ற வார்த்தைகள் அவன் பேச்சில் சர்வ சாதாரணமாக நடமாடுகின்றன. இந்த ஆவேச மனப்பான்மையின் மூல காரணம் தானே என்பதை உணரும்போது தன் மீதே அவளுக்கு ஒரு வெறுப்பு ஏற்பட்டது.

"சீக்கிரமே திரும்பிடுங்கோ" என்று அன்பு தவழக் கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தாள் சாவித்திரி.

கொஞ்ச தூரம் சென்ற பிறகு மெல்ல திரும்பிப் பார்த்தாள். ஆரோக்கியம் இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு தன்னையே கவனித்து நிற்பது ஒரு நிழற் படம் போல அவளுக்குத் தெரிந்தது. மீண்டும் நடக்கத் தொடங்கினுள்.

ஆரோக்கியத்துடன் இப்படி அளவளாவிப் பேச வேண்டும் என்று அவள் தீர்மானிக்கவே இல்லை. தன் வாழ்வில் ஒன்றன் பின் ஒன்ருய் குறுக்கிடும் விபரீத நிகழ்ச்சிகள் அவள் இதயத்தைத் தாக்கி சின்ன பின்னமாக்கிக் கொண்

டிருந்தன. தன் மனக் கொந்தளிப்பை மிகவும் நெருங்கிப் பழகும் யாரிடமாவது ஒரு தடவை சொல்லி அழுதால்தான் மனப்பளு குறையும் போல இருந்தது. ஆனால் யாரிடம் சொல்வது......

இந்த எண்ணத்தோடு நடந்து வந்தவள்தான் ஆரோக்கியம் அமர்ந்திருந்த பாறையின் அருகில் வந்தபோது தன்னை மீறி யெழுந்த உணர்ச்சிப் பெருக்கால் உந்தப்பட்டு அவனோடு வலியவே பேச ஆரம்பித்தாள். அவனோடு கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்ததனால் மனப்பளு மிகவும் குறைந்து அங்கே முழு அமைதி நிறைந்திருப்பதை உணர்ந்தாள், அத்துடன் இன்னொரு சங்கடமும் அவளுக்கு உண்டாகாமல் இல்லை.

தன்னை ஆரோக்கியம் மணமாகாதவள் என நினைக்கிறான் என்பதும், தன்னை அவன் காதலிக்கிறான் என்பதும் அவள் புரிந்து கொண்ட விஷயம்தான். ஒரு நாளைக்கு உண்மை வெளியாகும் போது அந்த அப்பாவியின் மனம் என்ன பாடுபடும் என்பதை எண்ணுந்தோறும் சாவித்திரியின் உள்ளத்தில் ஒரு வித சங்கடம் பரவியது.

''சாவித்திரி'' என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டு அவள் சிந்தனை கலைந்தது. எதிரே ஆஞ்சனேயன் நின்றுக் கொண்டிருந்தான்.

''உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்று அசட்டுச் சிரிப்புடன் கூறினான் ஆஞ்சனேயன்.

அருவருப்பும் ஆத்திரமும் பொங்க அவனை கோபக் கனல் கக்க நோக்கினாள் சாவித்திரி.

''உங்கள் அதிர்ஷ்டம் திருவரங்கநாதர் இந்தநேரத்தில் உலாவுவதற்காக வந்திருக்கிறார். பக்கத்தில்தான் இருக்கிறார். நீங்கள் சந்திக்கலாம்.''

''நான் எதற்காக சந்திக்க வேண்டும்'' என்று சாவித்திரி சீறினாள்.

''எல்லாம் உங்கள் நன்மைக்காகத்தான்.......''

''என் நன்மைக்கு நான் யாருடைய உதவியையும் கோரவில்லையே நீங்கள் போகலாம்'' என்று கூறிவிட்டு சாவித்திரி முன்னேக்கி நகர்ந்தாள்.

ஆஞ்சனேயன் சட்டென பாய்ந்து சாவித்திரியின் கையைப் பிடித்துக் கொண்டு ''ஆரோக்கியத்தின் உதவி மட்டுந்தான் இப்போது உங்களுக்கு அவசியப்படுகிறதோ'' அந்த அன்னக் காவடியால் உங்களுக்கு என்ன உதவி செய்துவிட முடியும். திருவரங்கநாதர் இந்த ஊரின் ராஜா மாதிரி. அவர் இஷ்டப்பட்டால் எது வேண்டுமானாலும் செய்ய முடியும் அவரைத் தடுக்க யாராலும் முடியாது'' என்று கூறிவிட்டு அவளைப் பிடித்து இழுக்கத் தொடங்கினான்.

''ஐயோ'' என்று கூக்குரல் போட சாவித்திரி வாயெடுத்தாள். ஆனால் கண்மூடி திறப்பதற்குள் அங்கே ஒரு அதிசயம் நிகழ்ந்து விட்டது.

எங்கிருந்தோ வந்த கனக சபை ஆஞ்சனேயனை இலேசாகப் பிடித்து இழுத்து அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை வைத்தார். அவன் அடுத்த கணம் சுருண்டுக் கொண்டு கீழே விழுந்தான்.

''ஊருக்கு ராஜாவா அந்தப் பயல்.... ராஜா....'' என்று முணகிவிட்டு கனகசபை அலட்சியாகச் சிரித்தார். பிறகு ஆரோக்கியம் அமர்ந்திருந்த பக்கத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

கீழே உணர்வற்றுக் கிடந்த ஆஞ்சனேயனை பீதியோடு கவனித்துவிட்டு சாவித்திரி வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்து செல்லத் தொடங்கினாள்.

(தொடரும்)

கடைசி சண்டை

ஆர். எஸ். மணி

குத்துச் சண்டை ஆரம்பமாகப் போகிறது என்பதற்கு அடையாளமாக மேடையின்மீது ஏறினார் மத்தியஸ்தர். அதுவரை மேடையின் ஒருபுறமாக இருந்த ஸ்டூலின்மீது அமர்ந்து கயற்றில் சாய்ந்துகொர்ண்டிருந்த 'பாக்ஸர்' பாஸ்கரன் எழுந்து நின்றான். மேடையைச் சுற்றிலும் அமர்ந்திருந்த ஜனங்கள் அவனைக் கண்டவுடன் கரகோஷம் செய்தனர். அவர்களுக்கு நன்றி செலுத்துவது போல் புன்முறுவல் செய்த வண்ணம் கூட்டத்தை ஒருமுறை சுற்றிப் பார்த்தான். ஜனங்களின் ஆரவாரம் அடங்குவதற்குச் சற்று நேரம் பிடித்தது. ஜனங்கள் தன் மீது அத்தனை அபிமானம் வைத்திருப்பதைக் கண்டு அக மகிழ்ந்தான் பாஸ்கரன்.

ஆனால், அவனை எதிர்ப்பதற்காக எதிர்புறத்தில் நின்றிருந்த சிவானந்தத்தின் உள்ளத்தில் ஜனங்களின் உற்சாகம், கூறிய அம்புகள் போல் பாய்ந்தன. சிவானந்தம் இன்று நேற்று குத்துச் சண்டைத் தொழிலில் பிரவேசித்தவன் அல்ல. பதினைந்து வருஷ காலமாக இரவுபகலாய் உழைத்து, அரும்பாடு பட்டு, பலரைத் தோற்கடித்து பெயரும் புகழும் பெற்றிருந்தான். சமீப காலம் வரை அவனுக்கு நிகர் அவன் தான் என்று போற்றுமளவுக்குப் பெயரெடுத்து இருந்தான் சிவானந்தம். ஆனால் சில காலத்திற்கு முன்பு திடீரென்று குத்துச்சண்டை உலகில் பிரவேசித்து மளமளவென்று புகழடைய ஆரம்பித்தான் பாஸ்கரன். அதனால் சிவானந்தத்தின் புகழ் ஓரளவு மங்கத்தான் செய்தது. ஆகவே பாஸ்கரனைத் தோற்கடித்து தன் பெயரை நிலை நாட்டிக்கொள்ளவே அன்று மேடைக்கு வந்திருந்தான். பல சமயங்களில் பலரை எதிர்த்து வெற்றி பெற்றிருந்த சிவானந்தத்திற்கு பாஸ்கரனைத் தோற்கடிப்பது ஒரு பெரிய காரியமாகத் தோன்றவில்லை. ஆனால் ஜனங்களின் மனப் போக்குதான் அவனுக்கு விளங்கவில்லை. 'பலகாலமாக என்னை உற்சாகப்படுத்திய ஜனங்களா, இப்பொழுது பாஸ்கரனைப் பாராட்டுகிறார்கள்? என்னைவிட அவன் எந்த விதத்தில் திறமைசாலி? அதையும்தான் பார்த்து விடுவோமே! இதே ஜனங்கள் இன்னும் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு என்னைப் பாராட்டிப் புகழப் போகிறார்கள்' என்று எண்ணி ஒருவாறு மனதைத் திருப்தி செய்துக் கொண்டான் சிவானந்தம்.

மத்தியஸ்தர் மணியை ஓங்கி அடித்தார். 'டங்'கென்று எழுந்த மணியின் ஒலி அங்கு நிலவி இருந்த அமைதியைக் கலைத்தது. பாஸ்கரனும் சிவானந்தமும் ஒருமுறை கை குலுக்கிவிட்டு குத்துச் சண்டையை ஆரம்பித்தார்கள். பாஸ்கரனுக்கு வயது இருபதுக்கு மேல் இருக்காது. ஆனால் திடகாத்திரமான சரீரத்துடனும் நல்ல தேகக் கட்டுடனும் காணப்பட்டான். சிவானந்தமும் நல்ல உடலமைப்புடன் தோன்றிய போதிலும் முப்பது வயதாகிவிட்டபடியால் அவனிடம் முதுமையின் சாயல் இருக்கத்தான் செய்தது.

குத்துச் சண்டை ஆரம்பித்த சற்று நேரத்திற்கெல்லாம் பாஸ்கரனுக்குப் 'பாயிண்டு'கள் ஏறிக் கொண்டே வந்தன. அதே சமயத்தில் ஜனங்களின் ஆரவாரமும் அதிகரித்

துக் கொண்டே வந்தது, பாஸ்கரன் உண்மையில் ஒரு திறமைசாலி என்பதை அவன் சண்டை செய்த விதத்திலிருந்து தெரிந்து கொண்டான் சிவானந்தம். தான் நினைத்ததுபோல் அவனைத் தோற்கடிப்பதும் அத்தனை சுலபமல்ல என்பதும் அவனுக்கு அப்போதுதான் விளங்கியது. ஆகவே பாஸ்கரனை எப்படியும் ஜெயித்தாக வேண்டுமென்று தன் முழுத் திறமையையும் உபயோகிக்க ஆரம்பித்தான். குத்துச் சண்டை நியதிக்கு விலக்கில்லாமல் சண்டை செய்துக் கொண்டிருந்த அவனுடைய கை தவறுதலாய் பாஸ்கரனின் மூக்கில் பட்டுவிட்டது. அதனுல் அவன் கீழே விழுந்து விட்டான். சிவானந்தத்தின் முரட்டு செயலை எதிர்த்து ஜனங்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

ஐந்து நிமிஷ நேரத்திற்குப்பிறகு நான்காவது ரவுண்டு ஆரம்பமாகியது. சிவானந்தம் தன் புகழைக் காப்பாற்றிக்கொள்ள பெரு முயற்சி செய்துக் கொண்டிருந்தான். தன்னைத் தாக்கிப் பலர் முன்னுல் அவமானப் படுத்திய சிவானந்தத்தை எப்படியாவது பழி வாங்க வேண்டுமென்று மிகுந்த உக்கிரத்துடன் சண்டை செய்தான் பாஸ்கரன்.

கடைசி ரவுண்டில்தான் அவனுக்கு அந்த சந்தர்ப்பம் கிடைத்தது. தன்னையும் மறந்து சண்டை செய்துக்கொண்டிருந்த சிவானந்தத்தின் முகத்தில் தன் பலத்தையெல்லாம் உபயோகித்து ஒரு குத்து குத்தினுன் பாஸ்கரன். சட்டென்று தன் கண்களை மூடிக் கொண்டான் சிவானந்தம். அடுத்த விநாடி அவனுடைய தலை பம்பரம் போல் கிருகிருவென்று சுழன்றது. முகத்தைக் கரத்தினுல் பொத்திய வாறு தரையில் குப்புற விழுந்தான் சிவானந்தம். மத்தியஸ்தர் ஒன்று இரண்டு என்று எண்ண ஆரம்பித்தார். பத்து எண்ணிக்கைக்குப் பிறகும் சிவானந்தம் எழுந்திருக்கவில்லை. பாஸ்கரன் தான் ஜெயித்தான். மக்கள் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டு வெளியேற ஆரம்பித்தார்கள்.

சுமார் ஐந்து நிமிஷ நேரத்திற்குப் பிறகுதான் சிவானந்தத்தின் மயக்கம் தெளிந்தது. அதன் பிறகு தான் கண்களின் கிழே சதை பெயர்ந்து ரத்தம் கசிவதும் தெரிய வந்தது. துண்டினுல் ரத்தத்தைத் துடைத்துக் கொண்டான். கண்களைத் திறந்தான். அவனுல் பார்க்க முடிந்ததே தவிர சரியாகப் பார்க்க முடியவில்லை. பார்வையில் ஏதோ கோளாறு ஏற்பட்டுவிட்டது என்று அவனுக்குப் புரிந்துவிட்டது. குத்துச்சண்டை காண்டிராக்டர் கந்தசாமி சிவானந்தத்தின் சோர்விற்குக் காரணம் புரியாமல், "சிவானந்தம்! கவலைப்படாதீர்கள். அடுத்தமுறை நீங்கள் அவனை கட்டாயம் ஜெயித்துவிடலாம். நீங்கள் 'சரி' என்றுல் அதற்கு, இப்பொழுதே ஏற்பாடு செய்கிறேன்" என்றுர் அவர்.

சிவானந்தம் தன் முகத்தில் அடிபட்டதைப் பற்றிகூட அத்தனை கவலைப்படவில்லை. ஆனுல் பாஸ்கரன் தன்னைத் தோற்கடித்து விட்டானே என்ற எண்ணம் தான் அவனை வெகுவாக வாட்டியது. அவனுடைய வெற்றியை நினைக்கும்போது; ஆத்திரமும் ஆவேசமும் சிவானந்தத்தினிடம் பீறிட்டு எழுந்தன. அவனை எப்படியாவது தோற்கடித்து விட்டுத்தான் மறுவேலை என்று தீர்மானித்தான் சிவானந்தம். அவனுடைய ஆவேசத்தை உணர்ந்த காண்டிராக்டர் கந்தசாமி "பாஸ்கரன் நேற்று வந்தவன். அவனை ஜெயிக்கவா உங்களால் முடியாது?" என்று சிவானந்தத்தைத் துரிதப் படுத்தினுர்.

"சரி, இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை வைத்துக் கொள்ளுங்கள். அவனைப் பழிக்குப் பழி வாங்காவிட்டால் என் பெயர் சிவானந்தம் இல்லை" என்றுன் மிகுந்த வீராப்புடன்.

பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கம் கெண்டிருந்த

கந்தசாமி. சந்தர்ப்பத்தைக் கை விடாமல் அவனை அழைத்துச் சென்று ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு முன்பணமாக நூறு ரூபாய் கொடுத்தார். அதற்குப் பிறகு தான் சிவானந்தத்தின் மனது ஓரளவு நிம்மதி அடைந்தது.

2

அப்போதுதான் தன் கண்ணில் அடிபட்டது அவனுக்கு நினைவு வந்தது. கண் வலிப்பது போலவும், பார்வையில் ஏதோ பிசகு ஏற்பட்டிருப்பது போலவும் பிறகுதான் தோன்றியது. ஆகவே நேராக டாக்டர் தயாநாத் வீட்டிற்குப் புறப்பட்டான் சிவானந்தம். தயாநாத் அவனுடைய வெகுநாளைய நண்பராகையால் சிவானந்தம் இரவு ஒன்பது மணி சுமாருக்கு வந்தபோதிலும் அவனைக் கவனித்தார். டாக்டர் அவனுடைய கண்களை நன்கு பரிசோதனை செய்தார்.

"அடி பலமாகப் பட்டு பார்வையைப் பாதித்து இருக்கிறது. இன்னும் கொஞ்சம் தவறி இருந்தால் கண்ணே போயிருக்கும்" என்று கூறியவண்ணம் ரத்தம் கசிந்த இடத்தில் மருந்து போட்டார். டாக்டரின் வார்த்தைகளைக் கேட்டவுடன் அடங்கி இருந்த ஆத்திரம் பீறிட்டெழுந்தது. "பாஸ்கரன் என்னை ஜெயித்துவிட்டதாக எண்ணிக் கொண்டிருக்கிறான். அடுத்த முறையல்லவா அவன் திறமை தெரியப்போகிறது" என்று உறுமினான் சிவானந்தம்.

"மறுபடியும் பாஸ்கரனுடன் குத்துச்சண்டை போடப் போகிறாயா?" என்று கேட்டார் டாக்டர்.

"ஆமாம்! இன்றைக்குப் பதினைந்தாவது நாள் நடக்கப் போகிறது" என்றான் அவன்.

"மிஸ்டர் சிவானந்தம்! நான் சொல்கிறேன் என்று கோபித்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் கொஞ்ச காலம் சும்மா இருப்பது நல்லது. மறுபடியும் அடிபட்டால் கண் போய்விடும்" என்று எச்சரித்தார் அவர்.

என்னப்பா என் கோடு போட்ட ஷர்ட்டை தொலச்சுபுட்டே சலவை கூலி மட்டும் போட்டிருக்கியே.

நான் என்ன பண்ணுவேனுங்க. சலவை பண்ண பிறகுதானுங்க தொலைஞ்சுடுத்து.

"அப்படியெல்லாம் ஒன்றும் ஆகிவிடாது. நீங்கள் பயப்பட வேண்டாம்" என்று கூறிவிட்டு, டாக்டர் வீட்டை விட்டு வெளியே வந்தான் சிவானந்தம். அவன் மிகுந்த துணிவுடன் டாக்டரிடம் அவ்வாறு கூறிவிட்டானே தவிர, 'மறுபடியும் அடிபட்டால் கண் போய்விடும்' என்ற டாக்டரின் வார்த்தைகள் அவன் காதில் ரீங்காரம் செய்ய ஆரம்பித்தன. 'என்னுடைய புகழைக் காப்பாற்றிக் கொள்ள கண்ணை இழப்பதா? ஒருவேளை கண்ணில் அடிபட்டு விட்டால் என்ன செய்வது? புகழ் முக்கியமா? பார்வை முக்கியமா?' என்று கேள்விக்குமேல் கேள்விகள் எழுந்து அவன் மூளையைக் குழப்பின. கடைசியில் காயம் நன்றாகக் குணமான பிறகு பாஸ்கரனை எதிர்ப்பது என்று முடிவு செய்துக் கொண்டு தன் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட வேண்டுமென்ற தீர்மானத்துடன் கந்தசாமியின் வீட்டை நோக்கி நடந்தான் சிவானந்தம்.

கந்தசாமி அவனை அந்த நேரத்தில் எதிர்பார்க்கவில்லை. வெறி பிடித்தவன் போல் நிற்கும் சிவானந்தத்தைக் கண்டபோது கந்தசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. 'என்ன சிவானந்தம்? என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"என் குத்துச்சண்டை ஒப்பந்தத்தை ரத்து செய்ய வந்திருக்கிறேன். என்னால் பாஸ்கரனுடன் சண்டையிட முடியாது" என்றான் அவன்.

கந்தசாமி அவனைப் பார்த்து அலட்சியமாகச் சிரித்தார். "என்ன சிவானந்தம் நீயா இப்படிப் பேசுகிறாய்? அவனுக்குப் பயந்து விட்டாயே" என்றார் கேலியாக.

"அவனுக்குப் பயப்படவில்லை. என்னால் இப்பொழுது சண்டை செய்ய முடியாது. எனக்கு ஓய்வு வேண்டும். அத்துடன் என் மனைவி மரகதத்திற்கும் உடம்பு சரியில்லை" என்றான். தன் காயத்தைப்பற்றியோ, டாக்டரின் புத்திமதியைப் பற்றியோ அவன் அவரிடம் கூற விரும்பவில்லை. கந்தசாமி அவனைப் பலவிதமாகத் தேற்றினார். உற்சாகமான வார்த்தைகள் எல்லாம் சொல்லிப் பார்த்தார். அவன் விரும்பினால் பூரா பணமும் அப்பொழுதே கொடுப்பதாகக் கூறினார். ஆனால் சிவானந்தம் ஒரே பிடிவாதமாக இருந்தான். இதனால் கோபம் கொண்ட கந்தசாமி, "நீ உன் ஒப்பந்தப்படி இன்றைக்குப் பதினைந்தாவது நாள் பாஸ்கரனுடன் சண்டை செய்துதான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் ஒப்பந்தத்தை மீறியதற்காக உன்மீது நஷ்டஈடு வழக்கு போடுவேன்" என்று கடுமையாக உறைத்தார்.

"நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்துக் கொள்ளுங்கள். இதோ உங்கள் பணம்" என்று கந்தசாமி கொடுத்த பணத்தை அவர் முன்னால் வீசி எறிந்துவிட்டு, விடுவிடுவென்று நடந்தான் சிவானந்தம்.

மறுநாள் காலை கண் விழித்தெழுந்தபோது அவன் தன் கண்ணில் ஒருவித பாதை இருப்பதை உணர்ந்தான். ஒன்று இரண்டு நாட்களில் சரியாகிவிடும் என்று மனதைத் தேற்றிக்கொண்டு தன் மனைவியைப் பார்க்க நர்ஸிங் ஹோமிற்குப் புறப்பட்டான். அவனுக்குக் கலியாணமாகி சுமார் ஐந்து வருஷங்கள் ஆகி இருந்தன, ஆனால் அவன் சுகமாக வாழ்க்கையை நடத்த முடியவில்லை. அவன் மரகதத்தைக் காதலித்துதான் மணந்துகொண்டான். அவள் அவனுக்கு ஒருவிதத்தில் தூரபந்துவும்கூட. மரகதத்தின் வெளியழகைக் கண்டு மயங்கினனே தவிர, அவளை உள்ளூர அறித்துக் கொண்டிருந்த எலும்புருக்கி வியாதியைப் பற்றி அவன் உணரவில்லை. கலியாணமான பிறகுதான் அந்த உண்மை அவனுக்குத் தெரியவந்தது. முதலில் அவள் மீது அவன் சற்று கோபமாகத்தான் இருந்தான். ஆனால் மரகதத்தின் தந்தை இறக்கும் தருவாயில்,

"சிவானந்தம்! மரகதம் தாயில்லாத பொண்ணு. அவளை உன் கையிலே ஒப்படைச்சிருக்கேன். நீதான் அவளைக் காப்பாத்தணும். அவ வியாதியைப் போக்கி அவளை நீதான் ஒரு மனுஷியாக்கவேணும்" என்று கூறிவிட்டுக் காலமானார்.

இயற்கையிலேயே இளகிய உள்ளம் படைத்திருந்த சிவானந்தம் மரகதத்தின் மீதிருந்த கோபத்தை மறந்து அவளை எப்படியாவது குணப்படுத்திவிட வேண்டுமென்று தன் வருமானத்தை யெல்லாம் செலவு செய்தான். ஆனால் சரியான குணம் காணவில்லை. பிரபல டாக்டரின் யோசனையின்படி ஒரு மாதத்திற்கு முன்பு அவளை பெங்களூருக்கு அழைத்து வந்து ஒரு நல்ல நர்ஸிங் ஹோமில் அனுமதித்தான். அவளைப் பிரத்யேகமாக கவனிக்க ஏற்பாடு செய்தான். அவளுடன் எப்பொழுதும் துணையாக இருக்க ஒரு நர்ஸையும் அமர்த்தினான். அவள் பூரண குணமடைவதற்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யத் தயாராக இருந்தான்.

சிவானந்தம் பெங்களூருக்கு வந்த ஒரு மாத காலத்திற்குள் அவன் கையிலிருந்த பணமெல்லாம் செலவழிந்து விட்டது. மேலே என்ன செய்வது என்று

கவலை கொள்ள ஆரம்பித்தான். பணம் சம்பாதிப்பதையே கண்ணும் கருத்துமாகக் கொண்டிருந்தகந்தசாமி, சிவானந்தத்தின் நெருக்கடியை 'உணர்ந்து' பெங்களூரிலேயே ஒரு குத்து சண்டை விழாவை ஏற்பாடு செய்தார். அதன் விளைவாகத்தான் சிவானந்தம் பாஸ்கரனை எதிர்த்து நிற்க நேர்ந்தது.

மரதகம் தன் கணவரைக் கண்டவுடன், ''நேற்று குத்துச் சண்டையில் உங்களுக்கு அடிபட்டதாமே? எங்கே அடிபட்டது?'' என்று கேட்ட வண்ணம் அவன் முகத்தைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

உடல்நலன் குன்றி இருக்கும் அவளிடம் உண்மையை உரைக்க அவன் விரும்பவில்லை. ''அதெல்லாம் ஒன்றுமில்லை. லேசாக அடிப்பட்டது. குத்து வாங்கி வாங்கி, என் முகம்தான் மறத்துப்போய் விட்டதே'' என்று வறட்சியாகச் சிரித்தான் அவன்,

''நீங்கள் எதற்காக இப்படி சண்டைபோட வேண்டும்? நீங்கள் இப்படி இருப்பது எனக்குப்பிடிக்கவில்லை. என் உடம்பு என்னவோ குணமாகப் போவதில்லை. பேசாமல் பட்டணம் போய் விடலாம், இருப்பதை வைத்துக் கொண்டு அறை வயிறுவது சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம். அதிகம் சம்பாதிக்க வேண்டும் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தை இப்பொழுதே விட்டு விடுங்கள்'' என்று அவனைக் கெஞ்சுவது போல் பார்த்துக் கூறினாள், அவளுடைய உடல்நிலையையும், குரலில் இருந்த தழுதழுப்பையும் கண்டு சிவானந்தத்தின் உள்ளம் நெகிழ்ந்தது, ''மரகதம் நீ உன் உடம்பைப் பார்த்துக் கொள். என்னைப்பற்றி கவலைப் படாதே! அடுத்த முறை பாஸ்கரனைத் தோற்கடித்து விட்டால் போதும், அதுதான் என் கடைசி சண்டை. அதற்குப் பிறகு உன் இஷ்டம் போல் இருந்துவிடு



கிறேன்'' என்ருன் இவ் வார்த்தைகளினுல் ஆறுதல் அடைந்தவள்போல் சிவானந்தத் கண்டு புன் முறுவல் செய்தாள் அந்த சமயத்தில் அவளைக் கவனிக்க டாக்டர் வந்து சேர்ந் தார். மரகதத்தின் உடலைப் பரி சோதித்து விட்டுக் கிளம்பினுர். சிவானந்தம் டாக்டரின் பின்னு லேயே சென்ருன்,

''மிஸ்டர் சிவானந்தம். மரகதத் தின் உடம்பு முன்னை விடக் கொஞ் சம் தேவலை என்று சொல்லலாம். ஆனுல், விரைவில் குணமாக வேண்டுமென்ருல் சில மருந்துகள் வாங்கியாக வேண்டும். அதை விடாமல் இரண்டு வாரம் உபயோ கித்தால் நல்ல குணம் தெரியும். மருந்துகளுக்கு இருநூறு ரூபா யுக்கு மேல் செலவாகாது'' என்று மருந்துகளை எழுதிக் கொடுத்தார் டாக்டர்.

நர்ஸிங்ஹோமிற்கு வாடகைப் பணம் பாக்கி இருந்தது. அவன் வசித்துவந்த ஹோட்டலுக்கு வேறு பணம் கொடுத்தாக வேண் டும். அத்துடன் மருந்துக்குப் பணம் வேண்டும், என்ன செய்வ தென்று புரியாமல் தலையைக் குனிந்தவண்ணம் யோசித்தவாறு நடந்தான் சிவானந்தம்.

அப்பெழுது அவன் மனதில் பெரும் போராட்டம் மூண்டது. தன் கண் முக்கியமா? மனைவியின் உடல் நிலை முக்கியமா? கண்ணைக் காப்பாற்றுவதா? மனைவியைக் காப்பாற்றுவதா? — இவ்வாறு பல கேள்விகள் அவன் மனதில் எழுந்தன. யோசித்தான், வெகு நேரம் யோசித்தான் கடைசியில் ஒரு வழி தெரிந்து விட்டது. பாஸ் கரன் எவ்வாறு சண்டை செய் கிருன் என்று அவனுக்குத் தெரிந் திருந்தது. அவனை ஜெயிக்க வேண் டும் என்கிற அவசியமில்லை. கடைசிவரை எப்படியாவது கண் ணைக் காப்பாற்றிக் கொண்டு விட லாம். தன்புகழ்தான் மறையும். ஆனுல் ஒப்பந்தப்படி பணம் வந்து விடப் போகிறது. இதனுல் கண் ணும் காப்பாற்றப்படுகிறது. மனை வியின் உடலும் குணமாகிறது. தன் மனைவியின் நலனுக்காக தன் புகழை அர்ப்பணிக்கத் துணிந்த சிவானந்தம் நேராக கந்தசாமி யின் வீட்டை நோக்கி நடந்தான்.

''ஒப்பந்தப்படி சண்டையிட நான் தயாராக இருக்கிறேன். எனக்கு பூரா பணமும் கொடுத்து விட வேண்டும் அத்துடன் இது தான் என் கடைசி சண்டை'' என்று கூறும் சிவானந்தத்தைக் கண்டு ஒரு கணம் அதிசயத்து நின்ருர், கண்டிராக்டர் கந்தசாமி. கந்தசாமி யிடமிருந்து பணத்தை வாங்கிக் கொண்டு டாக்டர் குறிப் பிட்டிருந்த மருந்துகளை வாங்கிக் கொண்டுபோய்க் கொடுத்த பிறகு தான் அவன் மனது ஓரளவு நிம் மதி அடைந்தது. தனக்கிருந்த கடனையும் ஓரளவு தீர்த்துவிட்டான் அவன்.

3

வாரம் ஒன்று கடந்தது. கந்த சாமி 'சிவானந்தத்தின் சவால்' 'ரோஷமான குத்துச் சண்டை' என்பது போன்ற தலையங்கங் களில் மறுவாரம் நடக்கப்போகும் குத்துச் சண்டையைப் பற்றி பிர மாதமாக விளம்பரம் செய்ய ஆரம் பித்தார். ஒவ்வொரு விளம்பரத்தி லும் சிவானந்தத்தின் வீரதீரப் பிரதாபங்களை எல்லாம் பத்தி பத் தியாக வெளியிட்டார். 'பாக்ஸர் சிவானந்தத்தின் கடைசி சண்டை' என்று விளம்பரம் செய்து பிர மாதப்படுத்தினுர் கந்தசாமி.

குறிப்பிட்ட தினத்தன்று மாலை சிவானந்தம்—பாஸ்கரன் குத்துச் சண்டையைக் காண ஏராளமான கூட்டம் கூடி இருந்தது, கந்த சாமிக்கு முதல் முறையை விட இப்பொழுது இரண்டு மடங்கு வசூலாகி இருந்தது. மேடையைச் சுற்றி இருந்த ஜனத்திரள் குத்துச் சண்டையைப் பார்க்க மிகுந்த ஆவ லுடன் இருந்தனர். மணி அடிக்கப் பட்டது. குத்துச் சண்டை ஆரம்ப மாகியது. சிவானந்தம் தன் கண் ணைப் பாதுகாத்த வண்ணம் சாமர்த்தியமாகச் சண்டை செய் தான். இந்த முறை அவன் அத் தனை திறமையை உபயோகிக்க

வில்லை என்றுதான் கூறவேண்டும். ஆயினும் முதல் ரௌண்டிலேயே தோல்வி அடைந்தான் பாஸ்கரன்.

ஜனத்திரள் சிவானந்தத்தைப் பாராட்டி கரகோஷம் செய்தது, ஜனங்கள் எல்லோரும் சிவானந்தத்தை உற்சாகப்படுத்த ஆரம்பித்து விட்டனர். இரண்டாவது ரௌண்டு மூன்ருவது ரௌண்டு — பாஸ்கரன் தோல்வி அடைந்தான்! ஜனத்திரளின் உற்சாகமொழிகள் வானைப்பிளந்தன. சிவானந்தம் இதைக் கண்டு பெரிதும் மனம் மகிழ்ந்தான். முன்பு இருந்த நல்ல பெயரைத் திருப்பிப் பெற்று விடப் போகிரேம். என்ற மகிழ்ச்சியில் தன்னை மறந்தான் சிவானந்தம். வன் திட்டத்தையும் மறந்தான். தனக்கு வரப்போகும் புகழ் மாலைக்கு எதிரில் தன் மனைவி, தன் எதிர்காலம், தன் வாழ்க்கை எல்லாமே திறமையாகத்தோன்றியது. உண்மை வீரத்துடன் மேலே சண்டை செய்ய ஆரம்பித்தான். பாஸ்கரனும் உக்கிரம் கொண்டவன் போல் ஆவேசத்துடன் சண்டையிட்டான். கடைசி ரௌண்டு, நடந்துகொண்டிருந்தது. சிவானந்தத்திற்குப் பாயிண்டுகள் ஏறிவிட்டன. குத்துச் சண்டை முடிய இன்னும் இருபது விஞடிகளே இருந்தன. மகிழ்ச்சியினுல் உள்ளம் பொங்க மற்ருெரு பாயிண்டு எடுக்க கையை ஓங்கினுன், பாஸ்கரன் பளீரென்று முகத்தில் குத்தி விட்டான், சிவானந்தத்தின் பார்வை சட்டென்று மறைந்தது. முன்பு காயப்பட்டிருந்த அதே இடத்திலிருந்து ரத்தம் பீறிட்டது. இரு கையினுலும் முகத்தை மூடிக் கொண்டான் அவன். அடுத்தகணம் மணி அடிக்கப்பட்டது. 'சிவானந்தத்திற்கு வெற்றி' என்ற ஜனங்கள் செய்த கரகோஷம் அவன் காதில் விழுந்தது. அடுத்த விஞடி முன்பு போலவே தலை சுற்றியது. கீழே விழுந்து மூர்ச்சையானுன் சிவானந்தம்.

சிவானந்தத்தின் வெற்றி காட்டு தீ போல் எங்கும் பரவிவிட்டது. அதை கேள்வியுற்ற மரகதம் பூரித்துப் போனுள். அதே சமயத்தில் தன் கணவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்து இருக்கிருர்கள் என்று அறிந்தபோது புழுபோல் துடித்தாள் அவள். ஆஸ்பத்திரியில் கண்களில் கட்டுடன் படுத்திருக்கும் தன் கணவரைக் கண்டபோது அவள் உள்ளத் துடிப்பு பன்மடங்காகியது.

"யாரது? மரகதமா?" என்று அவள் கையை வருடிய வண்ணம் கேட்டான் சிவானந்தம். "ஆமாம்! நான்தான். நான் அன்றைக்கே சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. இனிமேல் சண்டைபோடுவதை நிறுத்தி விடுங்கள். என் உடம்பு குணமாகிவிட்டது. நான் இப்பொழுது எவ்வளவு நன்ருய் இருக்கிறேன் என்று பாருங்கள்! இனி இந்தத் தொழிலே வேண்டாம். இருப்பதைக் கொண்டு சுகமாக இருப்போம்" என்ருள். சிவானந்தம் அவளைப் பார்த்து ஒரு வறண்ட சிரிப்பு சிரித்தான்.

"மரகதம்! நீ கவலைப்படாதே! இதுதான் என்னுடைய கடைசி சண்டை இனிமேல் என்னுல் சண்டையிட முடியாது. ஏனென்ருல் என் பார்வை போய்விட்டது.... உன் சுகத்திற்காகத்தான் இந்தக் கடைசி சண்டை செய்தேன்.... நீ சுகமாக இருந்தால் போதும்", அதற்குமேல் அவனுல் பேச முடியவில்லை. மன வேதனையினுலும் துயரத்தினுலும் அவனுடைய குரல் தழதழத்தது. தன் கணவரின் வார்த்தைகளைக் கேட்டவுடன் மரகதத்தின் அடி வயிற்றிலிருந்து எரிமலைபோல் துக்கம் பீறிட்டெழுந்தது.

"உங்களுக்குக் கண் போய்விட்டதா? இனிமேல் நீங்கள் என்னைப் பார்க்க முடியாதா? ஐயோ" என்று அலறிய வண்ணம் அவனுடைய மார்பின் மீது முகத்தைப் பொத்திக் கொண்டு 'ஹோ' வென்று அழுதாள். அடுத்த கணம் அவளுடைய விசிப்புக் குரல்தான் எங்கும் எதிரொலித்தது. அவளைத் தேற்றுவதுபோல் அவளுடைய தலையை வருடினுன் சிவானந்தம்.

உமா
சந்தா விபரம்

வருட சந்தா

இந்தியா, இலங்கை	ரூ.	3
வெளி நாடுகள்	ரூ.	4

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

★

உமா
4/32, தாதா முத்தியப்பன் தெரு
சென்னை-1.

நீரிழிவு

ஏழு நாட்களில்
குணமாகும்

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் **நீரிழிவு (DIABETES)** என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள் சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். அதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறு நீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்கு பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் **இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.**

50 வில்லைகள் கொண்ட
புட்டி 1-க்கு ரூ. 6-12-0

[பாக்கிங் தபால் செலவும் இனம்]

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (U. M.)
தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா.

தாயுள்ளம்

பிரம்மம்

காலட்சேப சிம்மம் கங்காதர பாகவதர் தமது வாக்கு சாதுர்யம் முழுவதையும் உபயோகித்து சிறுத்தொண்ட நாயனார் புராணத்தை பக்த கோடிகளுக்கு சொல்லிக்கொண்டிருந்தார்....

பிள்ளைக் கனியமுது படைக்கும்படி கேட்டு, பக்தரான சிறுத்தொண்டரை சோதனை செய்து ஆட்கொண்ட சிவபெருமானின் கருணைத் திருவிளையாடலை விளக்கிக் கூறிய கங்காதர பாகவதர் கடைசியாக மேற்படி கதையின் தத்துவத்தை விளக்கத் தொடங்கினார்.

''இதை எதற்காகச் சொல்கிறேனென்றால், குழந்தைதான் வீட்டிற்கு லக்ஷணம். குழந்தையில்லாத வீட்டிலே களையிருக்காது. அதிதிகள் அன்னம் புசிக்க மாட்டார்கள். மகாகவி ஒரு ஸ்லோகத்திலே சொல்லியிருக்கிறார், 'ஆலக்ஷ்ய தந்த முகுளான்—அநிமித்த ஹாஸைஹி....' அதாவது பாதி தெரிந்தும் தெரியாமலும், சில முளைத்தும் முளைக்காமலும் இருக்கும்படியான அந்தச் சிறிய முத்துப் பற்களை வெளியில் காட்டிக்கொண்டு, அகாரணமாகச் சிரித்தபடி, தளர்நடை நடந்து தள்ளாடி வந்து, வீதியிலே மண்ணிலும் புழுதியிலும் துளைத்து விளையாடிய தன் அழுக்குப் படிந்த சின்னஞ் சிறிய பஞ்சுக் கைகளை அகல விரித்துக்கொண்டு, ஆவலாக வந்து, 'அப்பா!' என்று மழலை மொழி பேசித் தன் தந்தையின் கால்களை இறுகக் கட்டியணைத்து, அவரது வெளுத்த உடைகளை அழுக்குப் படுத்தும் அந்தக் குழந்தையை எடுத்து உச்சி முகர்ந்து முத்தமிட்டு மெய்மறத்தலைக் காட்டிலும் பேரின்பமில்லை, இந்த இல்லறத்திலே!......''

''அபாரம். அற்புதம்! பாகவதரின் காலக்ஷேப பாணியே அலாதி!'' என்று குதூகலித்தனர் கூடியிருந்தவர்கள்.

ஏதோ கொஞ்ச நேரம் சத்கலா காலக்ஷேபம் கேட்டு மன அமைதி பெற வந்த சங்கரனுக்கு தலைவலி போய் திருகுவலி வந்தது போலாகி, பாகவதரின் காலக்ஷேபத் திறமையும், விஷயமும் அவனை வசிகரித்த போதிலும், அவர் அன்று கூறிய வியாக்கியானங்கள் அவன் வேதனையைக் கிளறிவிட்டன.

2

திருப்பரங்குன்றம் சாமிநாத சர்மாவுக்கு ஆசைக்கொரு பெண்ணும், ஆதரவுக்கொரு ஆணுமாக லக்ஷ்மியும், சங்கரனும் இரண்டே சந்தானங்கள். சங்கரன் மதுரை கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தபோதே லக்ஷ்மிக்கு மணமாகி, அவள் தன் கணவனுடன் பட்டணத்துக்குப் போய்விட்டாள். சங்கரன் படிப்பு முடிந்து உத்தியோகம் தேடியபோது, சாமிநாத சர்மாவின் நண்பரொருவர் சங்கரனுக்குத் தன் பெண் பார்வதியைக் கொடுத்து, சென்னையிலிருந்த தனது வர்த்தக ஸ்தாபனத்தின் நிர்வாகத்தையும் மாப்பிள்ளையிடம் ஒப்படைத்தார்.

பார்வதியும் சங்கரனும் சென்னைக்குத் தனிக் குடித்தனம் வைக்க வந்தபோது, லக்ஷ்மியின் வேண்டுகோளின் பேரில், சங்கரன் அவள் வீட்டிலேயே இருக்கச் சம்மதித்தான். உயர்தரப் பள்ளி உபாத்தியாயராக இருந்துகொண்டு, வைதீக காரியங்களுக்கு 'வாத்தியாராக'வும் தொழில் நடத்தி வந்

தார் லக்ஷ்மியின் கணவரான ராம கிருஷ்ண சாஸ்திரிகள்.

பொருளாதார நிலையை ஒப்பிடும்போது சங்கரன் சாஸ்திரிகளைவிட மிக நல்ல நிலையிலிருந்தான், தகப்பனர், மாமனர் இருவரின் ஆதரவும் அவனுக்கு நிறைய இருந்தது. கை நிறைய சம்பளமும் வந்தது. சொல்லப்போனுல் சங்கரனின் செல்வ நிலையையும், பார்வதியின் உடலுழைப்பையும் தனக்குப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்தோடுதான் லக்ஷ்மி அவர்களைத் தன் வீட்டோடு வைத்துக் கொண்டாள்.

பார்வதி வந்து சேர்ந்த வேளை என்றுதான் சொல்ல வேண்டும். லக்ஷ்மிக்குத் தலைச்சன் பிள்ளை ஒன்றும், அடுத்த வருஷமே பெண் குழந்தை ஒன்றும் பிறந்தன. பிரசவம், பத்தியம் எல்லாவற்றிற்கும் பார்வதிதான் கூடமாட இருந்து லக்ஷ்மிக்கு உதவினுள். லக்ஷ்மியின் குழந்தைகளும் பார்வதியிடம் உயிரையே வைத்திருந்தன. எப்பொழுது பார்த்தாலும் 'அத்தை, அத்தை' என்று அழைத்துக்கொண்டு பார்வதியையே சுற்றி வந்து கொண்டிருந்தன.

3

பார்வதியின் பண்பும், பரிவும் கலந்த உபசரணைகளும், அன்பும், அனுசரணையும் கலந்த உதவிகளும் லக்ஷ்மியின் மனதை மட்டிலும் தொட முடியவில்லை. தனக்கென உழைக்கவே பார்வதி உடம்பெடுத்ததாகக் கருதினுள் லக்ஷ்மி. அதுவுமல்லாமல் கல்யாணமாகி மூன்று வருஷங்களாகியும் பார்வதி தாய்மையை அடையாத காரணத்தால் லக்ஷ்மிக்கு அவளைக் கண்டால் இளப்பமாக இருந்தது.

லக்ஷ்மியே பார்வதியைப் பற்றிக் கேவலமாகவும், இழிவாகவும் பேச ஆரம்பிக்கவே, அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் ஒரு தினுசாகப் பார்த்து, பார்வதியைக் கண்டும் காணுமலும் ஏசத் தொடங்கினர்.

கல்யாணமான நான்காவது வருஷத்தில் பார்வதியைப் பற்றி, "அவளுடைய வாலிப வனப்பு குறைந்துவிடுமே என்று குழந்தை பெறாமல் இருக்கிறாள்!" என்பதாகப் பேச்சு அடிபட்டது. ஐந்தாவது வருஷத்தில், "அவள் செய்த பாவம், பிள்ளைப் பேறில்லை" என்று விளக்கம் வந்தது. ஆறாவது வருஷத்தில் ஸ்திரீகள் மகாநாடு நடந்தபோது, "பார்வதி ஒரு மலடி" என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

குழந்தையில்லையே என்ற குறை அன்றுவரை அவ்வளவாகத் தெரியவில்லை பார்வதிக்கு. ஆனால் மலடி என்று தன்னைப் பிறர் பழிப்பதை மட்டும் அவளுடைய பெண்ணுள்ளத்தால் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை.

தனக்குக் குழந்தை பிறக்காது என்று பார்வதி நினைக்கவில்லை. குழந்தைகள் வேண்டும் என்றும் அவள் விரும்பினதில்லை. கணவனின் அன்பையும், லக்ஷ்மியின் இரு குழந்தைகளின் பாசத்தையுமே அவள் தனது ஜீவிய சார்த்தகமாக எண்ணிக் கொண்டிருந்தாள். அப்படியிருக்கையில் மற்ற பெண்கள் தன்னை ஒரு மலடி என்று முடிவு கட்டியபோது மட்டும் அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. தலையணையில் முகம் புதைத்து கோவென்று கதறிவிட்டாள்.

லக்ஷ்மியின் மூத்த குழந்தை ராஜுவும், சின்னவளான ரமணியும் அத்தை அழுததையே பார்க்காதவர்கள். எப்போதும் தங்களுடன் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கும் அத்தை இன்று மட்டும் ஏன் அழுகிறாள் என்று யோசித்தபோது அவைகளின் பச்சையுள்ளத்திலே துக்கம் படர்ந்தது.

"ஏன் அழறே அத்தே?" என்று கம்மிய குரலில் கேட்டான் ராஜு.

"நீ அழுதா நானும் அழுவேன்!" என்றாள் ரமணி, விம்மியபடியே.

குழந்தைகளின் கள்ளங்கமற்ற இந்தக் கேள்விகளைக் கேட்டதும் பார்வதியின் துக்கம் மறைந்துவிட்டது. பழையபடி சிரித்தாற்போல நடித்து, கண்களைத் துடைத்துக் கொண்டே, "நான் அழல்லையடி கண்மணி! கண்ணிலே தூசு விழுந்துட்டுது" என்று குழந்தைகளை வாரியணைத்து முத்தமிட்டு மெய் மறந்தாள் பார்வதி!

"டேய் ராஜு! அடியே ரமணி!! அங்கே என்ன செய்கிறீர்கள்? வாடா இங்கே! சாதம் ஆறிப் போறது" என்று கத்தினாள் லக்ஷ்மி.

"நான் வரல்லே போ!" என்றான் ராஜு.

"அத்தை கிட்டயே சாதம் சாப்பிட்டுடறோம், அம்மா, நாங்க வரல்லே! ஏண்டா ராஜு" என்றாள் ரமணி.

"அப்படியா சங்கதி! இருவரேன்!" என்று ஆத்திரமாக வந்து குழந்தைகளை இழுத்துக் கொண்டு போய் முதுகில் நாலு அறைகள் போட்டாள் லக்ஷ்மி.

யௌவனப் பிராயத்தில் மனிதன் ஸ்திரீயைத் தன் சரீர சுகத்திற்காக மட்டும் விரும்புகிருன். ஆனல் வயோதிகத்தில் அவனுக்கு மனச் சாந்தியளிப்பது ஸ்திரீயின் சக வாசமேயாகும். எனவே, ஒரு யுவனைப் போலவே ஒரு வயோதிகனுங் கூட இளம் பெண்களைத் தன்னுடன் நட்பு கொள்ளச் செய்ய ஆசைப்படுகிருன்.

—எஸ்ஸெஸ்.

"அக்கா! அக்கா! அதுகளை ஏன் அடிக்கிறீங்க? உங்களுக்குக் கோபம் வந்தா குழந்தைகள்தானு அகப்பட்டார்கள்?" என்ருள் பார்வதி.

"போதுண்டியம்மா! போதும்! நீ குடுக்கற செல்லத்தாலேதான் அதுகள் குட்டிச்சுவராப் போறது. என் குழந்தைகளை வளர்த்துக் கொள்ள எனக்குத் தெரியும். மருமகளை அடைந்தவளுக்கு மலடி பிரசவம் பார்த்தாளாம்!" என்று நையாண்டி செய்தாள் லக்ஷ்மி.

பார்வதி இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு வந்து, தன் படுக்கையில் விழுந்தாள். இந்த சுடுசொல்லின் வேகத்தை அவளால் தாங்க முடியவில்லை.

4

"அம்மா பிச்சை போடுங்கம்மா! உங்க பிள்ளை குட்டிங்கல்லாம் நல்லாயிருக்குமம்மா! பத்தும் பெத்த பத்தினியே! உன் தங்கக் கையாலே கொஞ்சம் பழைய சோறு இருந்தாப் போடேன்!" என்று வாசலில் நின்று கத்தினுன் ஒரு பிச்சைக்காரன். உள்ளேயிருந்து ஒரு பதிலும் வராமல் போகவே அவன் பாட ஆரம்பித்துவிட்டான்: "மலடி வயிற்று மகன் போலே, ஒரு புதையலெடுத்த தனம் போலே....!

காலக்ஷேபத்திலிருந்து, சிறுத்தொண்டர் புராணத்தைக் கேட்க சகிக்காமல் எழுந்துவிட்ட சங்கரன் அப்போதுதான் தன் வீட்டின் வாசற்படியில் காலை வைத்தான். பிச்சைக்காரனின் பாட்டைக் கேட்டதும் அவனுக்கு உடம்பெல்லாம் பற்றிக்கொண்டு வந்தது.

"பிச்சையில்லே, ஒண்ணுமில்லே போடா!" என்று அவன் மீது எரிந்து விழுந்துவிட்டு உள்ளே நுழைந்தான் சங்கரன்.

பார்வதி விம்மிக் கொண்டிருந்தாள்.

"சேச்சே! எனக்கு எல்லாமிருந்தும் மனதுக்கு மட்டும் அமைதியில்லே. பேசாமே சந்நியாசம் வாங்கிட்டுக் கௌம்பிடப் போறேன்!" என்று சலித்துக் கொண்டான் சங்கரன்.

"சந்நியாசம் வாங்கினு குழந்தை பிறந்திடுமா? இரண்டாம் கல்யாணம் பண்ணிக்குங்கோ!" என்று அழுகையின் நடுவே கூறினுள் பார்வதி.

"அது ஒண்ணுதான் பாக்கி!" என்று, சமையற்கட்டை நோக்கிப் போனுன் சங்கரன். பார்வதியும் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனைப் பின்தொடர்ந்தாள். ஒரு வாய் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டாள் பார்வதி. அவளுக்குத் தூக்கம் எப்படி வரும்? படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள். ராஜுவும், ரமணியும் தன் மீது வைத்திருக்கும் அன்பையும், நம்பிக்கையையும் நினைத்தபோது அவளுக்கு ஆனந்தமாக இருந்தது. "இந்தக் குழந்தைகளிருக்கும் போது எனக்கென்ன குறை? ஊராரின் வம்புக்காக நான் ஏன் பயப்பட வேண்டும்? இனிமேல் யார் என்ன சொன்னுலும் நான் கவலைப் படப் போவதில்லை!" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள் பார்வதி.

5

பார்வதியின் அறைக் கதவுக்கு வெளியே இரண்டொரு விக்கலின்

ஒலி கேட்டது. பயந்துபோய் கதவைத் திறந்து பார்த்தாள் பார்வதி.

ரமணி கண்களைக் கசக்கிக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள்.

பார்வதிக்கு ஏனோ திடீரென்று கோபம் வந்தது. "இங்கே ஏண்டி வந்தே! உங்கம்மா என்னைத் தானே திட்டறு! போடீ! போய் உங்கம்மா கிட்டயே படுத்துக்கோ!" என்று படபடத்தாள் பார்வதி.

குழந்தை கிறீச்சிட விரும்பினாள். ஆனால் பயம் ஒரு பக்கம்; பிரமிப்பு ஒரு பக்கம். பலமாக அழுதால் அம்மா எழுந்துவந்து அடிப்பாளே என்று பயம். என்றைக்குமில்லாமல் அதிசயமாக அத்தை இன்று கோபித்துக்கொண்டு விட்டாளே என்று பிரமிப்பு.

பொங்கிவரும் அழுகையை அடக்கிக் கொண்டே மௌனமாகத் திரும்பினாள் குழந்தை.

பார்வதியினால் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஆனாலும் மனதைக் கல்லாக்கிக் கொண்டு திரும்பி வந்து படுத்தாள்.

லக்ஷ்மி தன் அறையிலிருந்து கத்தினாள்.

"அத்தை அத்தைன்னு ஓடினயே! அடிச்சு வெரட்டிட்டா பார்த்தயா? அப்படித் தான் வேணும் உனக்கு........அழாதேடீ கண்ணே...பிள்ளை குட்டி பெத்திருந்தாலல்லவோ உன் அருமை அவளுக்குத் தெரியப் போகிறது!"

இந்தக் கடைசி வாக்கியம் பார்வதியின் நெஞ்சைப் பிளந்து விடும் போல இருந்தது. சற்று முன்பு தான் அவள் தனக்குத் தானே செய்துகொண்ட தீர்மானமும் நினைவுக்கு வந்தது. தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

6

ஏறக்குறைய தினசரி இத்தகைய சம்பவங்கள் நடக்க ஆரம்பித்துச் சில மாதங்கள் கழித்து பார்வதிக்கு ஏனோ உடம்பு ஒரு மாதிரியாக இருந்தது. அதைத் தொடர்ந்து அவளைப்பற்றிக் கிளம்பிய ஒரு வதந்தி சங்கரனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

'பார்வதி உண்டாகியிருக்கிறாள்' என்று எல்லோரும் பேசிக்கொண்டனர். ஆனால் லக்ஷ்மிக்கு மட்டும் ஒரு சந்தேகம்.

ஆறேழு வருஷங்களாக ஆகாதவளுக்கு இப்போது மட்டில் என்ன வந்துவிட்டது? ராமேஸ்வரம் போனாளா? அரசமரப் பிரதக்ஷிணம் வந்து, நாகப் பிரதிஷ்டை செய்தாளா? விரதாதி அனுஷ்டானங்கள் இருந்தாளா?

ஒன்றுமேயில்லாதபோது திடீரென்று எப்படி உண்டாக முடியும்?

தன் சந்தேகத்தைச் சிறுகச் சிறுக சங்கரனிடமே தெரிவித்தாள் லக்ஷ்மி "ஆமாண்டா! தன் அவப்பெயரைப் போக்கிக் கொள்ளத்தான் அவள் இப்படி நடிக்கிறாள். நீ வேண்டுமானால் ஒரு லேடி டாக்டரை அழைத்துவந்து காட்டு!" என்றாள் லக்ஷ்மி.

சங்கரன் திகைத்தான். பார்வதியோடு அவன் வாழ்ந்த இந்த ஆறேழு வருஷங்களில் அவள் பொய் சொல்லுவாள் என்றோ, தன்னை ஏமாற்றுவாள் என்றோ அவன் நம்பவில்லை. எதற்கும் ஒரு டாக்டரை அழைத்து வந்து பார்த்து விடலாமே என்று தான் தோன்றியது அவனுக்கு.

மறுநாள் பார்வதிக்குத் தெரியாமலேயே ஒரு லேடி டாக்டரை வீட்டுக்கு அனுப்பினான் சங்கரன். லேடி டாக்டர் பார்வதியின் அறையில் நுழைந்ததும், பின்னாலேயே வந்து மறைவாக நின்றுகொண்டான் சங்கரன்.

வீட்டு வேலைகளைப் போட்டது போட்டபடி விட்டுவிட்டு, அவசரமாக வந்து நின்று லேடி டாக்டரின் பேச்சை மறைவாக நின்று ஒட்டுக் கேட்டாள் லக்ஷ்மியும்.

பார்வதியைப் பரிசோதித்தபடியே, "நீங்கள் இன்னும் ஆறு மாதத்திலே தாய் ஆகப் போகிறீர்கள்" என்று புன்னகையுடன் கூறினாள் லேடி டாக்டர்.

சங்கரனுக்கு இதைக் கேட்டதும் மனதிலுள்ள ஒரு பாரம் நீங்கியது போலிருந்தது.

லக்ஷ்மி தனக்கு வந்த இருமலை அடக்கிக் கொண்டாள்.

"டாக்டர்! உங்ககிட்டே சொல்றதுக்கு நான் ஏன் பயப்படணும். எனக்குக் குழந்தைகளே வேண்டாம்" என்றாள் பார்வதி.

லக்ஷ்மிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

சங்கரனுக்கு ஆத்திரமாக வந்தது. பார்வதியைக் கொன்றுவிடலாமா என்று நினைத்தான்.

"அடீ பயித்தியமே. குழந்தை வேண்டாமா? நீ என்ன இன்னும் சின்னப் பொண்ணா? சீ! வாயை அலம்பிக்கோ. இப்படியெல்லாம் பேசினா எனக்குக் கோபம் வரும்".

"அதுக்கில்லே டாக்டர். எனக்குன்னு ஒரு குழந்தை பிறந்துட்டா ராஜு, ரமணி மேலே எனக்கிருக்கிற பாசமும், வாஞ்சையும் கொறஞ்சு போயிடுமோன்னு பயப்படறேன்" என்றாள் பார்வதி.

சங்கரன் கண்கள் ஆனந்தக் கண்ணீரால் நிரம்பின. தன் பார்வதிக்கு நிகர் அவளேதான் என்று அவன் மனம் பெருமைப் பட்டது.

லக்ஷ்மியின் கண்களும் திறந்தன. உடனே அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே ஓடி வந்து, பார்வதியை அன்போடு அணைத்து முத்தமிட்டாள் லக்ஷ்மி.

சோக நாடகம்!

"சமுதாயத்தின் கட்டுப்பாடுகளை மட்டுமல்ல புனிதமான எந்தத் தொடர்பு களை வேண்டுமானாலும் அவளுக்காகத் துடைத்தெறிந்து விடுகிறேன்" என்று சொல்ல அவன் உள்ளம் துடித்தது. ஆனால் அவன் பலவீனம் அவனைத் தடுத்துவிட்டது. அதன் விளைவுதான் இந்த சோகநாடகம்!

இது ஒரு காதல் கதை அல்ல. உணர்ச்சிகளின் மொழி பெயர்ப்பான அந்தக் கற்பனைக் கதைகளுடன், என் இதய வீணையின் மெல்லிய இந்த சோக நாதத்தை ஒன்று சேர்த்து விடாதீர்கள். இது என் வேண்டுகோள். ஒளி மங்கிய என் ஜீவச்சுடர் ஒரு நிமிஷமாவது பிரகாசிக்கட்டும்.

அது நிகழ்ந்தது பத்து வருஷங்களுக்கு முன். ஆயினும் அதன் சோகச் சின்னங்கள் இன்றும் என் உள்ளத்திலே பசுமையாக நிலைத்து நிற்கின்றன.

எங்கள் ஊர் கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்தேன். எனக்கு அது முதல் வருஷம். அப்பொழுதுதான் அந்தக் கதை ஆரம்பமாயிற்று. இல்லை, உயர்தரப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும் போதே அந்தக் கதையின் ஆரம்பத்திற்கு நான் தயாராக இருந்தேன் என்று சொல்லுவதுதான் சரி. இளமைப் பருவத்திலேயே வாலிபனாகி விட்டேன் என்கிற எண்ணம் என் இதயத்தில் இடம் பெற்றிருந்தது. இதற்குப் பெருங் காரணம் சூழ்நிலைதான். நான் பேசிப் பழகியது எல்லாமே முதிர்ந்தவர்களோடு. பருவம் தலை தூக்குவதற்கு முன்பே என் இதயத்தில் தளிர் விட்ட அன்பு, படருவதற்கு எதையோ தேடித் துடித்துக் கொண்டிருந்தது.

ஐநூறுக்கதிகமான ஆண்களும் பெண்களும், மாணவ மாணவிகள் மனம்விட்டுப் பழகியும் மகிழ்ந்தும் கல்வி கற்றுவரும் அந்தக் கல்லூரியில் ஒருவன் தலைவனாக வர அதிகமான முயற்சிகள் அவசியப்படவில்லை. ஓரிரு சொற்பொழிவுகள், சிறிது இலக்கியச் சேவை, அரசியல் அல்லது ஆடல் பாடல் இவைகள் இருந்தாலே போதும். அங்கே அவன் தனி அரசன்தான். அப்படிப்பட்ட அரச பதவிதான் என்னை அவளோடு இணைத்தது. அல்லது அதற்கும் அப்பாற்பட்ட ஜீவாதாரத்தின் அடிப்படையான அந்த உணர்ச்சிகளாகவும் இருக்கலாம். அழகிய அந்த உருவமும், அன்பு கனியும் பார்வையும் அவளுக்கு மட்டும் தனியாகக் கிடைத்தவை என்று அப்பொழுது நான் எண்ணவேயில்லை.

ஆம், அவள் என் உபாத்தியாயினி. என்னைவிடப் பெரியவள் கூட. எங்களுடைய நம்பிக்கைகள், கொள்கைகள் எல்லாமே மாறுபட்டவை; முரணானவை.

பச்சைக்குழந்தையின் பரிசுத்தத் தன்மையோடு என் வகுப்பிற்குள் நுழைந்த முதல் நாளில் இருந்தே நான் ஹஸீனாவை உன்னிப்பாகக் கவனித்து வந்தேன். சிந்தனையைச் சிறை பிடித்து வைக்கும் ஓர் ஆகர்ஷண சக்தி, என்னை மட்டும் அவளோடு சேர்ந்து இழையும்படி, அங்கே, அவளிடத்தில் சைகை காட்டுவதாக ஒரு பிரமை ஏனோ எனக்கேற்பட்டது. அந்த காந்த

டி. சீதாதேவி

நாகரிகம் புதிது புதிதான மூட நம்பிக்கைகளையும், விதம் விதமான பூசாரிகளையும் சிருஷ்டிக்கிறது.

நாகரிகத்தின் சில கலாசாரங்களை விட, பழமையின் ஆசாரங்கள் சில எவ்வளவோ உயர்ந்தவை என்பதில் சந்தேகமே வேண்டியதில்லை.

நாகரிகம் நோய்களைப் பரப்புகிறது. அறியாமை நோய்களை வளர்த்தது முன்பு; நாகரிகப் பழக்க வழக்கங்கள் அத் திருப்பணியைச் செய்கின்றன இப்போது.

—ஞானப்பிரகாசம்.

சக்தியின் முன்னிலையில் நான் எதிர்ப்படும் போதெல்லாம் எரிந்து சாம்பலாகிக்கொண்டே வந்தேன்.

நாங்கள் சந்திக்கும் போதெல்லாம் குடும்ப விஷயங்களைப் பற்றித்தான் அதிகமாக ஒருவரையொருவர் கேட்டுத் தெரிந்து கொள்வோம். சம்பாஷணை தனிப்பட்ட முறையில் எங்கள் இருவரையும் தடவிக்கொண்டு முன்னேறினால் அது திடீரென்று இடையே முறிந்துவிடும். அந்த நிகழ்ச்சிகளின் உண்மையான கருத்துக்களை நான் இப்போது நன்ருக உணருகிறேன்.

ஒரு நாள்; அந்த நாள் எதென்று எனக்கு இன்னும் நினைவிலில்லை. ஆனல் அந்த நிகழ்ச்சி மட்டும் என் நெஞ்சத்தைவிட்டு இன்னும் நீங்கவில்லை. அதுதான் ஆரம்பம். மனத்திற்குப் புத்துணர்ச்சி ஊட்டும் மாலை; லக்ஷியமில்லாமல் சிறிது நடந்துவிட்டு நான் திரும்பி வந்து கொண்டிருந்தேன். கல்லூரியின் மேற்குத் திசையில் நீண்டு செல்லும் ஒற்றையடிப் பாதை. அதன் கடைசி, பெண்கள் தங்கும் ஹாஸ்டல். அதை ஒட்டி ஹாஸ்டலின் பின்புறம் விசாலமான வெளியிடம். மாலையில் மாணவிகள் காற்ருட அங்குதான் வந்து பேசிக் கொண்டிருப்பார்கள். நான் அந்த இடத்திற்கு வந்தவுடன் அகாரணமாக, ஆனல் ஆவல் துடிப்பினல் ஒருமுறை திரும்பிப் பார்த்தேன்.

அதோ! அவள் அங்கே நின்று கொண்டிருந்தாள். நான் அதிர்ச்சி அடைந்தவனைப் போல் சற்று தயங்கினேன். நான் அந்த வழியாகச் செல்வதைப் பார்த்து விட்டு, திரும்பிவரும் என் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருள் என்பதை இல்லை என்று முடிவுகட்ட முடியுமா? அவளைப் பொருத்தவரை பதட்டமோ, படபடப்போ காணப்படவில்லை—அல்லது வெளிக்குக் காட்டிக்கொள்ள வில்லை!

"நான் திரும்புவதற்குள் மறுபடியும் எங்கே போனீர்?" என்ருள் தவழும் புன்னகையுடன்.

'ஒருவரைப் பார்க்கச் சென்றிருந்தேன்' என்றேன் நான்.

'பார்த்தீர்களா?'

'ஆம்!'

'நீங்கள்............?' என்று இழுத்தேன். அதற்குள் என் கேள்வியைப் புரிந்துகொண்டு "நானும் ஒருவரைப் பார்க்கத்தான் நின்று கொண்டிருக்கிறேன்" என்ருள்.

'பார்த்தீர்களா?'

'ஆம்!'

நாங்கள் இருவரும் திடீரென்று சிரித்துவிட்டோம். அவள் இதற்கு முன்பும் பின்பும் இவ்வளவு குதூகலத்தோடு குழைந்து சிரித்ததை நான் கண்டதே இல்லை. காற்றின் கைவேலைகளால் கலைந்த மயிர் அவள் கன்னத்தைத் தடவி விளையாடியது. அதை ஒரு கரத்தால் ஒதுக்கிவிட்டுக் கொண்டு சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். அந்த நிலையில் ஹஸீனவின் அழகை நான் மற்ருெரு கோணத்திலிருந்து பார்த்து ரசித்தேன். மறுபடியும் பேச வேண்டும் என்ற துடிப்பு. ஒருக் கணம் யோசித்துப் பார்த்தேன். அதற்குள் "வரட்டுமா?" என்று

விடை பெற்றுக்கொண்டு அவள் ஹாஸ்டலை நோக்கி நடந்தாள்.

இரண்டாம் வருஷத்தின் இறுதி நாட்கள். எங்கள் இருவருக் கிடையே துளிர்த்த அன்பு — கனியாத அந்தக் காதல் கடிதங்களால் இணைய முயற்சித்துக் கொண்டிருந்தது. விடுமுறை நாட்களை முன்னிட்டு நான் வீட்டிற்கு வந்தேன். ஊரிலிருந்து கொண்டு புதுவருட ஆரம்பத்தின் குதூகலத்தைத் தெரிவிக்க அவளுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அது காதல் கடிதமல்ல! தன்னையும் மறந்து, இன்பபோதையிலே இளைப்பாறிக் கொண்டு, எதிர்காலத்தைப் பற்றி சுந்தரமயமான கற்பனைக் காவியங்களைச் சிருஷ்டித்த உமர்கயாமின் 'ரூபாயியத்' என்ற காவியத்திலிருந்து மொழி பெயர்க்கப் பட்ட ஒரு பாடல், அவளுக்கு அன்பளிப்பாக எழுதி அனுப்பினேன். எனக்கு பதில் கிடைத்தது; ஒரு நீண்ட கடிதம்!

நான் கடிதம் எழுதியதற்கு நன்றியை மகிழ்ச்சியோடு தெரிவிப்பதாகவும், உமர்கயாமின் தத்துவங்களில் தனக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை என்றும் எழுதியிருந்தாள். 'வாழ்க்கையிலே எதிர்பாராத முறையில் ஏற்படும் எதிர்த் தாக்குதலைக் கண்டு நான் மிகவும் பயப்படுகிறேன்' இதை அவள் முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தாள்.

விடுமுறை கழிந்து கல்லூரி மீண்டும் ஆரம்பம் ஆயிற்று. நாங்கள் மறுபடியும் சந்தித்தோம். கடிதங்களைப் ற்றி நானே அவளோ ஒன்றுமே சர்ச்சை செய்யவில்லை. நான் மீண்டும் எழுதினேன். அவள் பதில் அனுப்பினாள். அந்த நிலை நீண்டுகொண்டே இருந்தது. ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிக் கொள்வதைவிட கடிதங்களால் எண்ணங்களுக்கு வர்ணம் தீட்டுவதைத்தான் நான் வெகுவாக விரும்பினேன். அவளும் அதைத் தான் எதிர்பார்த்திருப்பாள் அல்லது இஷ்டப்பட்டிருப்பாள்.

ஒரு மாணவனுக்கும் உபாத்தியாயினிக்கும் இப்படி பேசி முடிப்பதற்கு என்ன இருக்கிறது என்று கேட்கலாம். நான் இதையே என்னிடம் எத்தனையோ முறைகள் கேட்டுவிட்டேன். நாங்கள் மறுபடியும் மறுபடியும் சந்தித்தோம். சம்பாஷணையில் நேரத்தைக் கடத்தினோம். ஆனால் ஒருவரையொருவர் புரிந்து கொண்டோமா?

தனக்கு ஒரு வாழ்க்கைப் பங்காளி கிடைத்துவிட்டான், என்ற எண்ணத்தாலோ அல்லது இன்பத்தாலோ, ஹஸீனா தன் ஜீவியக்கதைகளை யெல்லாம் என்னிடம் சொன்னாள். அவைகளை எதற்கு என்று நான் எண்ணவில்லை. இல்லை அவைகளைக் கேட்டு ரஸிப்பதற்கு, ஆனந்தப்படுவதற்கு, அனுபவிப்பதற்கு இஷ்டப்படவில்லை என்றுதான் என்னால் சொல்லமுடியுமா?

இரண்டு வருஷங்கள் கழிந்துவிட்டன. என உணர்ச்சிகள் உள்ளக் கோயிலிலே சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவளைப் பற்றிய எண்ணங்கள் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தன. காணாத போது துடித்துக் கொண்டிருந்த நான், அவளைக் காணும் சந்தர்ப்பங்களில் கற்சிலையாக மாறுவதை உணர்ந்தேன். ஹஸீனாவிடம் மாறுதல்கள் தென்படவில்லை யென்றாலும் காவியமயமான அவள் கண்களிலே ஏக்கத்தின் சாயல் படர்ந்திருந்தது.

அந்த வருடம், அதாவது மூன்றாவது வருடம் அவளுக்கு டில்லி சர்வகலாசாலையில் வேலை கிடைக்கவே, நம் நாட்டுத் தலைநகரில் சென்று தங்கினாள் ஹஸீனா. அந்த வருடத்தில் கணக்கற்ற கடிதங்கள் எங்கள் இருவருக்கிடையே கைமாற்றப்பட்டன. நான் சற்றும் எதிர்பாராத வேளையில் எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. பெற்றோர்களையும், தனக்குப் பிரியமானவர்களையும் பிரிந்து எங்கோ தொலைவில் இருக்கும் இந்த நகரத்தில் வசிப்பது சிறிது கஷ்டமாக இருந்தாலும், வாழ்க்கை முன்னேற்றத்

திற்குப் பல வழிகள் காணப்படுகின்றன வென்றும், இன்னும் ஏதேதோ அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தாள்.

என் பதில் கடிதம் அவளுக்குக் கிடைப்பதற்கு முன் அவளிடமிருந்து எனக்கு இன்னும் ஒரு கடிதம் வந்தது. அவள் கண்டுகளித்த இரண்டு சினிமாப் படங்களின் விமர்சனம்தான் அது. களிப்புக் கண்களிலே காதலின் தீபக்சுடரேற்ற, ஜூலியட் வசிக்கும் மாளிகையின் உப்பரிகைக்கெதிராக நிற்கும் ரோமியோவின் இதய தாபத்தையும், பாலைவனத்திலே லைலாவை நினைந்து கண்ணீர் வடித்துக்கொண்டு அலையும் மஜ்னுவின் சோக கானத்தையும் உள்ளத்தில் ஊடுறுவிப் பாயுமளவிற்கு எடுத்துரைத்துவிட்டு, துன்பத்தின் எல்லையிலே நின்று துடித்துக்கொண்டிருக்கும் அந்தக் கதைகளை ஆவலோடு சுவைக்கும் நாம், ஏன் அந்த வாழ்க்கையை அணுகத் தயங்கவேண்டும் என்பதுபோல கேள்விக் குறி போட்டிருந்தாள். கடிதங்கள் ஓர் புதிய சரித்திரத்தின் முன்னுரையாக அமையப் போவதை நான் உணர்ந்தேன். உலக இலக்கியங்களிலே துன்பத்தின் தனி நகலாகத் துடித்த அந்த இரண்டு கதா பாத்திரங்களை அவள் ஏன் என் முன்னிலைக்கு இழுத்துக்கொண்டு வந்தாள்? காதலைப் பற்றி அவளுடைய முடிவான எண்ணம் என்ன என்பதைத் தெளிவாக விளக்கா விட்டாலும், கனியும் உள்ளத்தோடு கலங்குபவர்களைக் கண்டு அவள் இரக்கப்படுகிறாள் என்பதுதானே அதன் பொருள்.

விஷயத்திற்குப் புறம்பான வெளியிடத்தில் நின்று அவள் இப்படி விளையாட்டுக் காட்டுவதை நான் விரும்பவில்லை. எண்ணங்களின் பாரத்தால் குவிந்து கிடக்கும் இதயத் தாமரையை மலர்விக்க வேண்டும், அதில்தான் மனிதனின் மகத்தான வாழ்க்கை அடங்கி கிடக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி, உன்பதில் தேவை என்கிற கோரிக்கையோடு அவளுக்கு நான் நான்கு கடிதங்கள் எழுதினேன். எனக்கு பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் கொடுத்தது அந்தக் கடிதங்களுக்குப்

பதில் கிடைத்தபோதுதான். நான் சுட்டிக் காட்டிய விஷயங்களுக்கு அவள் வரவே இல்லை.

விடுமுறை நாட்களில் அவள் வீட்டிற்கு வருவாள் என்றுதான் நான் எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அவள் வட இந்தியாவின் சரித்திரப் புகழ்பெற்ற இடங்களைப் பார்க்க ஒரு சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டு விட்டாள்.

அன்று என் வாழ்விலேயே ஒரு பொன்னாள். நான் மகிழ்ச்சியோடு கல்லூரி வாழ்கையிலிருந்து விடுதலை அடைந்தேன். அன்று தான் கான் காத்துக்கொண்டிருந்த கடிதமும் அவளிடமிருந்து வந்தது. அடுத்த வெள்ளிக்கிழமை அவள் ஊருக்கு வருவதாகவும் ஞாயிற்றுக்கிழமை அவளைச் சந்திக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தாள்.

ஞாயிற்றுக்கிழமை விவரிக்க முடியாத எண்ணக் குவியல்களை உள்ளத்திலே தாங்கிக் கொண்டு நான் அவளைக் காண ஓடினேன். அவளும் என்னைத்தான் ஆவலோடு அங்கே எதிர்பார்த்துக் கொண்டு நின்றிருக்க வேண்டும். தேயாத புன்னகையோடு அவள் என்னை வரவேற்றாள். அவள் தந்தை ஏதோ வேலையாக வெளியே சென்றிருந்தார். தம்பியும் தங்கையும் வெளி முற்றத்திலே விளையாடிக் கொண்டிருந்தவர்கள் என்னைக் கண்டவுடன் வீட்டிற்குள் ஓடிவிட்டனர். அவளுக்கு அன்பூட்டி வளர்த்த தாய் இல்லை; காலமாகிவிட்டார்.

நாங்கள் சாதாரணமான விஷயங்களைப் பற்றித்தான் நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தோம். பிறகு நேரம் சென்றதே தெரியவில்லையே' என்றாள் ஏக்கத்தோடு. ஏதோ சொல்வதற்கு அவள் துள்ளம் துடிப்பதை நான் உணர்ந்தேன். அதை வெளியிடுவதற்கு என்னிடமிருந்து சில கேள்விகளை அவள் எதிர்பார்க்கிறாள் என்பது தான் உண்மை.

டில்லியிலிருந்து திடீரென்று புறப்படுவதற்கான விசேஷ காரணத்தை நான் குறிப்பாகக் கேட்டேன். பெற்றோரையும் உறவினர்களையும் காண வேண்டும் என்பதைவிட இன்னும் முக்கியமாக என்ன இருக்க முடியும் என்று அவள் என்னையே திருப்பிக் கேட்டாள். அந்த சம்பாஷனை அப்படி விரசமாகப் போய்க்கொண்டிருப்பது எனக்கு வேலையாக இருந்தது.

"இனி என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டாள் ஹஸீனா.

"என்ன செய்வது, வாழ்க்கைக்கு வர்ணம் தீட்டுவது நம் திறமையைப் பொருத்தது தானே?" என்றேன். அசிரத்தையாக வாழ்க்கையைப் பற்றி எதற்காக அப்படி திடீரென்று ஓர் அபிப்பிராயத்தை வெளியிட்டேன் என்று எனக்கே புரியவில்லை.

"மற்றவர்களுக்கு அதில் ஒன்றும் செய்வதற்கில்லையா?"

"இருக்கலாம். ஆனால் அது முழு மனத்தோடு முதலில் முன் வருவதைப் பொருத்திருக்கிறது" பிறகு நாங்கள் இருவரும் வெகு நேரம் பேசவேயில்லை.

"வாழ்க்கை என்றால், என்ன என்று எண்ணுகிறீர்கள்?" என்று மறுபடியும் பேச்சைத் துவக்கினாள் ஹஸீனா.

"தனியாக இருக்கும்போது அடைய முடியாததும் ஒன்றுபடும் போது ஆனந்திப்பதும்தான் வாழ்க்கை", என் உள்ளத்திலே வேரூன்றிக் கிடந்த காதல் உணர்ச்சிதான் என்னை இவ்வளவு தூரம் பேசத் தூண்டியது.

"அப்படியானால் ஆனந்தத்திற்காக சமூகத்தின் எந்தக் கட்டுப்பாடுகளையும் அறை கூவி அழைக்க முடியும் என்று சொல்கிறீர்கள்?" — அவள் எதற்காக, உறுதியான ஒரு பதிலை என்னிடமிருந்து எதிர்பார்க்கிறாள்

என்பதை நான் நன்ருகப் புரிந்து கொண்டேன்.

"சமுதாயத்தின் கட்டுப்பாடு களை மட்டுமல்ல, புனிதமான எந்தத் தொடர்புகளை வேண்டுமாஞலும் துடைத்தெறிந்து விடுவேன்" என்று சொல்ல என் உள்ளம் துடித்தது. ஆனல் என் பலவீனம் என்னைத் தடுத்துவிட்டது. அவள் மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டாள். நான் மௌனமாகத்தான் இருந்தேன். என் இதயத்தின் அடித்தளத்திலே உறைந்து கிடந்த தாழ்வு மனப்பான்மை என் உள்ளத்தை அந்த வேளையில் ஆதிக்கம் செலுத்தியிருக்க வேண்டும். சஞ்சல மனப்பான்மை பருவ பலஹீனத்தின் உதவியால் புதிய உணர்ச்சிக்கு சமாதி கட்டிக் கொண்டிருந்தது. நான் ஹஸீஞவின் முன்னிலையில் மறுபடியும் ஒரு மாணவனக மாறிவிட்டேன். அவள் விழிகள் என் கண்களை ஊடுருவிக் கொண்டிருந்தன. 'உன் உள்ளத்தில் எனக்கிடமில்லையா?' என்ற ஏக்கம் அதில் பிரதிபலிப்பதைக் கண்டேன். நான் பேசும் சக்தியை இழந்து விட்டிருந்தேன்.

மாலை இருள் எங்களைச் சூழ விரைந்து கொண்டிருந்தது. ஹஸீஞ எனக்கு விடை கொடுத்தாள். புன்னகையோடு "சரி போய் வாருங்கள்" என்ருள். இதழ்க் கடையிலே புன்னகை; கடைக்கண்ணிலே தேங்கிய நீர்த்திரை. நான் வெடிக்கும் உள்ளத்தோடு வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தேன்.

அந்த நிகழ்ச்சிக்குப் பின் நாட்களும், மாதங்களும் வருடங்களும் சென்று மறைந்தன. கல்லூரியை விட்டு வெளியேறிய நான் பம்பாய், டில்லி, ஆக்ரா, கல்கத்தா, பாட்ஞ என்னும் இடங்களில் உத்தியோக வேட்டையாடி அலேந்தேன். ஒரே சிந்தனையுடன் ஒரே உருவத்தின் நிழலை உள்ளத்திலே தாங்கிக்கொண்டு.

ஹஸீஞவின் மீது எனக்குள்ள அந்த அன்பைக் காப்பாற்ற, நான் கண்ணிருந்தும் ஓர் கபோதியாக வாழ்க்கை நடத்தினேன். அது வெறும் காதல் தொடர்பல்ல. இன்னும் மேலான ஒரு சக்தி குடிகொண்டிருந்தது. அடுத்தும் அகன்றும் இருந்த எங்களை இணைத்துக் கொண்டிருந்தது. மெல்லிய நூலிழையிலே பறக்கும் காற்ருடியைப்போல் எப்போதாவது சில சமயங்களில் எங்களுக்கிடையே நடமாடும் கடிதங்கள்தான். ஒருவரையொருவர் மறந்துவிடவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காக மட்டும்தான் அந்தக் கடிதங்கள் பயன்பட்டன.

பாட்ஞவில் ஒரு பத்திரிகை ஆபீஸில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது பாகிஸ்தான் பார்லிமெண்டரி ஸ்பீக்கருக்கு சுருக்கெழுத்து - டைப்பிங் தெரிந்த ஒரு செக்ரட்டரி தேவை என்ற விளம்பரம் காணவே அதற்கு விண்ணப்பம் எழுதிவிட்டு பதிலுக்குக் காத்திருந்தேன். இதற்கிடையில் ஹஸீஞ சென்னை கல்லூரி ஒன்றில் சரித்திர ஆசிரியையாக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தாள்.

பாகிஸ்தானிலிருந்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்த எனக்கு எதிர்பாராத விதமாக ஹஸீஞவிடமிருந்து கடிதம் வந்து சேர்ந்தது. அதை உடனே பிரித்து என்ன எழுதியிருக்கிருள் என்பதை அறிந்துகொள்ள ஆவல் இருந்தது. ஆனல் துணிவு ஏற்படவில்லை. ஆகவே எடுத்து சட்டைப்பையில் போட்டுக்கொண்டு சினிமா பார்க்கச் சென்றேன். முதல் காட்சியில் நேரத்தைக் கடத்திவிட்டு களைப்போடு என் அறையில் வந்து படுத்துக் கண்ணயர்ந்து விட்டேன். காலையில் காரியாலயத்திற்குப் போகும் போது டவுன் பஸ்ஸிலிருந்து கொண்டுதான் அந்தக் கடிதத்தைப் பிரித்தேன். உடல்நிலை மோசமாக இருப்பதால் வேலையை ராஜிஞமா செய்துவிட்டு ஊருக்குப் போவதாக எழுதியிருந்தாள். "இந்த முறை நீங்கள் ஊருக்கு வருவதாக

இருந்தால் ஒரு தடவை என்னை சந்திப்பீர்கள் என்று நம்புகிறேன்'' என்று முடிக்கப்பட்டிருந்த அந்தக் கடிதத்தின் முக்கியக் குறிப்பு மேலே எழுதப்பட்டதுதான்.

அன்று நான் காரியாலயத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தபோது, என் சிந்தனை தெற்கு முனையை நோக்கிப் பாய்ந்துகொண்டிருக்கும் ரயில் வண்டியுடன் போட்டியிட்டுக்கொண்டிருந்தது. என் அறையின் முன் நான் நின்றுகொண்டிருப்பதை உணர்ந்தேன்.

என்னைப் பொருத்தவரை எல்லாம் அணைந்துகொண்டிருக்கும் இந்த நாளில் ஒரே ஒருமுறை உங்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை. நீங்கள் வரமாட்டீர்களா? நான் உங்களுக்காகக் காத்திருக்கிறேன்—ஹஸீனு'' லெட்டர் பாக்ஸை திறந்து நான் படித்த முதல் கடிதம் இதுதான்.

திடீரென்று நான் பலமற்ற வனுகி விட்டேன். ஆர்பரித்துப் பொங்கும் அன்பின் ஆழி அலைகள் பலமாக என்னை மோதிக்கொண்டிருந்தன. ''இறைவா என் ஹஸீனுவைக் காப்பாற்ற மாட்டாயா?''



''நான் இன்றே வீட்டிற்குப் புறப்படுகிறேன். 'உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதால் உடனே வீட்டிற்குப் போங்கள்' என்று டாக்டர் கூறிவிட்டார். பாதி இரவில் கண் விழித்துக்கொண்டு தான் இந்தக் கடிதம் எழுதுகிறேன். நான் எழுதிக்கொண்டிருக்கும்போது இரண்டு தடவை எனக்குப் பின்னுல் நீங்கள் வந்து நின்றது போலவும், சூடேறிய உங்கள் மூச்சு என் கழுத்தைத் தடவிச் சென்றது போலவும் எனக்குப் பிரமை ஏற்பட்டது.

என்று நான் என்னையும் மறந்து கதறிவிட்டேன்.

பாட்னுவில் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்ட வேலையை விட்டு, அந்தப் புராதன நகரைவிட்டு, தெற்கே சென்னையை நோக்கி சென்று கொண்டிருக்கும் புகை வண்டியில் ஒரு நாள் ஊருக்குப் புறப்பட்டேன்.

ஞாயிற்றுக்கிழமை மாலை சொல்லத் தெரியாத உணர்ச்சிகளோடு நான் ஹஸீனுவின் வீட்டிற்குள் புகுந்தேன். பதினறு வயதிருக்

கும். பருவப் பூரிப்பு அழகுக் கோலமிட, அங்கங்களின் அசைவிலே வசீகரத்தை அணைத்துக் கொண்டிருக்கும் ஒரு யுவதி கதவைத் திறந்து விட்டு, நாணத்தோடு மறைந்து கொண்டாள். ஹஸீனுவின் தங்கை. எனக்கும் ஹஸீனுவிற்கும் இடையே சென்ற கால வளர்ச்சிக்கு, அவள் ஒரு கண்ணுடியாகத் திகழ்ந்தாள். அலிகார் சர்வகலாசாலையில் படித்துக் கொண்டிருக்கும் அவள் தம்பி, அப்பொழுது டாக்டர் வீட்டிற்குச் சென்றிருந்தான்.

ஆடம்பரமற்ற ஒரு சிறு அறை. சுவரோரத்தில் ஒரு கட்டில். வெண்மையான மெத்தையிலே நீல நிற பெட்ஷீட் விரித்திருந்தது. கட்டிலுக்கு எதிர்ப்புறம் ஒரு மேஜையும் இரண்டு நாற்காலிகளும் கிடந்தன. வெப்பத்தால் வாடிப் போன பூங்கொடியைப் போல் அங்கே ஹஸீனு துவண்டு கிடந்தாள். கலங்கிக் கிடந்த என் உள்ளம் கண்ணீர்த் திரையைக் கிழித்துக் கொட்டிவிட்டது. கண்ணீர் அவள் கன்னத்தில் விழவே மெதுவாகக் கண் திறந்தாள். அந்த நிலையிலும் தேயாத புன்னகை அவளை விட்டு மறையவில்லை. கண் கொட்டாது என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள், அந்தப் பார்வை 'காலமெல்லாம் உங்களுக்காகக் காத்திருந்தேன். ஏன் நீங்கள் இவ்வளவு தரமதித்து வந்தீர்கள்' என்று சொல்லாமல் சொல்லி என்னை சித்திரவதை செய்தது. எப்படியோ 'ஹஸீனு' என்று நான் ஒரு முறை அவளை அழைத்து விட்டேன். அவள் கன்னங்களில் குபீரென்று ரத்தம் பாய்ந்தது. கண்களிலே நீல் ஒளி கனலாக எரிந்தது. ''இப்பொழுது தான் அப்படி அழைக்கத் துணிவு வந்ததா?'' என்று கேட்டாள். அதற்குள் துக்கத்தால் அவள் தொண்டை அடைத்துக் கொண்டது. நீண்ட நேரத்திற்குப் பிறகு ''மீண்டும் பாட்னுவிற்குப் போகப் போகிறீர்களா?'' என்ருள்.

என்னுல் பேச முடியவில்லை. இல்லை யென்று தலையசைத்தேன். விரிந்த என் மார்பையும் பலம் பொருந்திய என் கைகளையும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தாள். பிறகு மிகவும் மெல்லிய குரலில் 'பரஸ்பரம் அடங்காத ஆவேசத்துடன் நேசிக்கும் இரண்டு ஜீவன்கள் இதுவரை அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வெவ்வேறு திசையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. வாழ்க்கை எவ்வளவு விசித்திரமானது !'' என்ருள் ஏக்கத்தோடு. என்னுல் பொறுக்க முடியவில்லை. நான் அழுது கொண்டிருந்தேன். ஹஸீனு அன்போடு என் கன்னத்தில் வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு விடை பெற்றுக் கொண்டு அவள் வீட்டை விட்டு வேளியேறினேன். அதுதான் எங்கள் கடைசி சந்திப்பு.

வெள்ளிக்கிழமை காலை பத்து மணி இருக்கும். நான் வெளிக்கிளம்பத் தயாராக நின்றுக் கொண்டு இருந்தேன். ஹஸீனுவின் வீட்டு வேலைகாரன் வந்து என்னை அவசரமாக அழைத்துக் கொண்டு போனுன். நான் அந்த அறைக்குள் நுழையும்போது டாக்டர் தலைகுனிந்து கொண்டு வெளியே வந்தார். மரணத்தின் கோரமான இருள் படர்ந்திருந்த அந்த அறையிலே நிசப்தம் நிலவியிருந்தது. இதயத் துடிப்பின் ஓசை கூட எதிரொலித்துக் கொண்டிருந்த அந்த இடத்தில், இதயத் துடிப்பில்லாத என் ஹஸீனு மட்டும் தேயாத புன்னகையோடு கண் மூடிக் கிடந்தாள்.

இதுவரை எங்கெல்லாமோ உருண்டோடியது என் ஜீவிய ரதம். சென்றதை எண்ணிப் பெருமைப்படவோ, நாளை நிகழப் போவதைப் பார்த்து இறுமாப்பு கொள்ளவோ ஒன்றுமே இல்லை. நான் வாழ்ந்த வழியைத் திரும்பிப் பார்த்தால் அது வரண்ட பாலைவனம்; சஞ்சலம் படர்ந்த நிலப் பரப்பு. அதில் கண்ணீர்த் துளிகள் ததும்பும் சில சோகச் சின்னங்கள். இதுதான் என் வாழ்க்கையா?

★ அவன் ஒரு கைதி! ஆனால் அதற்காக அவன் வருந்தவில்லை. மாறாக மகிழ்ச்சியே அடைந்தான். ஏனெனில் கைதியாவதற்கு முன்பு வாழ்க்கையே அவனுக்குச் சிறைச்சாலையாக இருந்தது! அருமையான மனோதத்துவ சித்திரம்; அற்புதமான எழுத்தோவியம்!..........

வாழ்க்கை-ஒரு சிறை..?

பகல் முழுவதும் பவனி வந்த கதிரவன் தனது பிரிவின் சாயையை உலகில் பரவவிட்டு மேற்கு வானில் மறைந்துகொண்டிருந்தான். 'கையெழுத்து மறையும் சமயம்' என்று பழக்கத்தில் சொல்லும் வார்த்தைப்படி இயற்கை மிளிர்ந்தது. கையில் பிரித்து வைத்துப் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு மெதுவாக எழுந்து வந்து தனது மெலிந்த கரங்களால் சாளரத்தின் கம்பிகளைப் பற்றியவாறு நின்று சிறைச்சாலைக்கு வெளியே தன்னுடைய பார்வையை மிதக்கவிட்டான் கைதி பிரபாகரன்.

"ஆ....! நானும் இந்தச் சிறைச்சாலையில் ஒரு கைதியாக வாழ்க்கையைத் தொடங்கி எத்தனை நாட்களை-மாதங்கள் கடத்திவிட்டேன்! இன்னும் அதைப் போன்று இரண்டு பங்கு காலத்தையும் கழித்தாலல்லவா நான் தண்டனையனுபவிக்க வேண்டிய கெடுவுநாள் தீரப்போகிறது!...." என்பதை எண்ணியபோது அவனுடைய கண்களில் துளிர்த்து நின்ற கண்ணீர் முத்துக்கள் அவனது ஒட்டி உலர்ந்த கன்னங்களின் வழியாக உருண்டோடின.

"பிரபாகர்!.... பிரபாகர்!..." என்ற குரல் கேட்டுச் சுற்று முற்றும் பார்த்தான் பிரபாகரன். ஆனால் உயிருள்ள உரு ஒன்றும் அச்சமயம் அங்கு காணப்படவில்லை. மீண்டும் அதே குரல்,

"இந்தக் குறுகிய கால சிறைச்சாலை வாழ்க்கையைக் கண்டா நீ ஆச்சரியமுற்று அஞ்சி நடுங்குகிறாய்?.... இப்போது உலகமறிந்த ஒரு கைதியாக நீ வாழ்க்கை நடத்துகிறாய்! ஆனால் இதற்கு முன்பு? உன்னுடைய முப்பத்து மூன்று வருட வாழ்க்கையின் ஏடுகளைப் புரட்டிப் பார்!.... ஒரு நாளாவது, ஒரு நிமிடமாவது நீ சுதந்திரம் என்ற அரும்பதத்தின் அருமையை அனுபவித்திருக்கிறாயா? இப்போதாவது நீ பெரிய குற்றம் ஒன்றைச் செய்தவனாகக் கருதப்பட்டுள்ள ஒரு குற்றவாளி. அப்போது நீ குற்றம் ஒன்றையும் செய்யாமலேயே ஒரு கைதியைப் போன்றே வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் நெட்டித் தள்ளியிருக்கும் ஒரு கைதி!...." குரலின் நாத அலைகள் அமுங்கி மடிந்து அங்கு அமைதி நிலவியவுடன் பிரபாகரன் தன் நினைவுக்கு வந்தான்.

வேறு யாரும் தனக்கு அந்த வார்த்தைகளைக் கூறவில்லை. தன்னுடைய மனச்சாட்சி, உள்ளுணர்வுதான் தனக்கு அந்த வார்த்தைகளைக் கூறி, தன்னுடைய கடந்த கால நினைவுகளைத் தூண்டி, அந்த பயங்கர உண்மையை அறிவுறுத்தியது என்பதையறிந்தபோது அவனுடைய முகத்தில் ஏக்கத்துடன் கூடிய சோகப் புன்னகை பளிச்சிட்டு மறைந்தது. "ஆம்!.... நான் ஒரு வாழ்க்கையின் கைதி!" என்று அவனது உலர்ந்த உதடுகள் ஒரு முறை ஒலியின்றி அசைந்தன. அவனுடைய மனம் வெகு வேகமாக இறந்த

கே. ஆர். கௌஸல்யா

காலத்தை நோக்கிப் பறந்தது. பிரபாகரனது குழந்தைப் பிராயத்தில்........

*　　*　　*

ரமணீயமான மாலை நேரத்தில், தம்முடைய பங்களாவின் விஸ்தாரமான தோட்டத்திலமர்ந்து உல்லாசமாக சம்பாஷித்துக் கொண்டிருப்பார்கள் ஸ்ரீதரனும் மனோரமாவும். அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் அழகிய வெல்வெட் சட்டையும், நிஜாரும் அணிந்து கள்ளம் கபடற்ற அழகிய முகத்தில் துரு துருவென்றலையும் விழிகளுடன், தன்னுடைய சின்னஞ்சிறு விளையாட்டுத் தோழனுகிய நாய்க்குட்டி ஒன்றுடன், ஓடியாடி விளையாடிக் கொண்டிருப்பான் நான்கு வயது பாலகன் பிரபாகரன். முன்னால் ஓடுவதும், பிறகு பின்னால் திரும்பி அவனிடமே ஓடி வந்து தாவிக்குதித்து மகிழ்ச்சியுடன் துள்ளிக் குரைத்துக் குழைந்து விளையாடும் அந்த நாய்க்குட்டியை மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு அன்புடன் கட்டித் தழுவிக்கொண்டு அதனுடைய பஞ்சு போன்ற மிருதுவான தலையை ஆசையுடன் தடவிக் கோடுப்பான் பிரபாகரன்.

அந்த அணைப்பில் அவனுடைய பிஞ்சு நெஞ்சு அடையும் மகிழ்ச்சியைக்கண்டு தாமும் மகிழ்ந்தவாறு அமர்ந்திருந்த ஸ்ரீதரனின் முகபாவம் திடீரென்று மாறுதலடைந்துவிடும். "மனோ!.... போதும்!.... போதும்!.... போய்க் குழந்தையை எடுத்துக் கொண்டு வா!.... அதிகமா ஓடி விளையாடினு அப்புறம் குழந்தை ரொம்ப களைச்சுப் போயிடும்.... உடம்பு அலண்டுவிடும்!...." என்று படபடப்புடன் கூறுவார் அவர். மனோரமா தாவிச் சென்று குழந்தை பிரபாகரனை வாரி அணைத்து எடுத்துக்கொண்டு வந்து தன்னுடைய மடியின்மேல் அமர்த்திக் கொள்ளுவாள். பாதி விளையாட்டில் பலவந்தமாகத் தன்னைப் பிடித்திழுத்துக்கொண்டு வந்து விடவே தான் மட்டும் தனியே ஓடியாடும் நாய்க்குட்டியை ஏக்கத்துடன் கூடிய பார்வையுடன் பார்த்தவாறு, தன்னுடைய பெற்றோரின் அணைப்பினின்றும் திமிறிச் செல்ல இயலாமல் திண்டாடுவான் பிரபாகரன். "தினமும் இது போல் என்னைச் சுவாரஸ்யமான பாதி விளையாட்டில் பிடித்து இழுத்து இவர்கள் சிறைப் பிடித்துக் கொண்டு விடுகின்றார்களே!.... என்று தன் மன உணர்ச்சியை அது சமயம் வார்த்தைகளில் கொட்டித் தெரிவிக்கத் தெரியாதே தவிர, பிரபாகரனது ஏக்கத்துடன் கூடிய பார்வை அதை நன்கு வெளிப்படுத்தும்.

அழகிய வெள்ளிக் கிண்ணத்தில் பாலமுதம் பிசைந்து வைப்பாள் மனோரமா தன் அருமை பாலகன் பிரபாகரனுக்கு. "அம்மா! நிலா பார்க்கணும்! மாடிக்கு வா!...." என்று தன் மழலை மொழிகளில் கொஞ்சிக் கொண்டே, காலில் அணிந்திருக்கும் தண்டையொலிக்க, பாலமுதத்தோடு வெள்ளிக் கிண்ணத்தைத் தூக்கிக் கொண்டு தளிர்நடை போட்டுக் கொண்டே முன்னே செல்லுவான் பிரபாகரன். சமயம் பார்த்து எங்கிருந்தோ வந்துவிடுவார் தந்தை ஸ்ரீதரன். அவனுடைய கரை புரண்டோடும் மகிழ்ச்சியை அணை போட்டுத் தடுக்க!... "என்ன மனோ! குழந்தை கிண்ணத்தையும் போட்டுக்கொண்டு விழுந்துவிடப் போகிருன்!.... நீ இடுப்பில் எடுத்துக் கொண்டு போ!" என்பார்.

பட்டுப்போல் காய்ந்து கொண்டிருக்கும் நிலவொளியில் கிண்ணத்திலுள்ள பாலமுதத்தைத் தன் கரங்களால் அளைந்து, தான் ஒரு வாய் சாப்பிடுவதும், தனக்கெதிரே வாலைக் குழைத்துக் கொண்டு தன்னைச் சுற்றிச் சுற்றி ஓடும் தன் விளையாட்டுத் தோழன் ஜிம்மிக்கு ஒரு வாய் போடுவதுமாக, சந்தோஷத்தால் குழந்தை பிரபாகரன் ஆர்ப்பரிக்கும் வேளையிலே, "இந்தா பிரபாகர்!.... நீ சாப்பிடாமே இப்படியே எல்லா

சாதத்தையும், நாய்க்கே போட்டுண்டிருந்தா உனக்கு வயிறு நிரம்புமா!'' என்று அவன் தாய் அன்புடன் கடிந்துகொண்டு அவன் கையிலுள்ள கிண்ணத்தைப் பிடுங்கித் தன் கையால் அவனுக்கு ஊட்ட ஆரம்பிப்பாள். வாலை ஆட்டிக் கொண்டுத் தன்னை நோக்கி எழும்பிக் குதிக்கும் தன் தோழனை வருத்தத்தால் சாம்பிய முகத்துடன் நோக்குவான் பிரபாகரன்.

இவ்வாறு இன்பம் கொழிக்கும் செல்வ நிலையில் வளர்ந்துவந்த போதிலும்கூட தன்னிச்சையாக ஓடியாட விழையும் தன் குழந்தை மனப்பான்மையைப் பலவந்தமாக அடக்கித் தங்களுடைய **அன்புச் சிறைக்குள் ஒரு கைதி**'யாகத் தன்னை அடைத்து வாட்டுகின்றார்களே என்று ஏங்கி வெம்பி வாடும் அவனுடைய பிஞ்சு நெஞ்சு.

பிரபாகரனுக்கு வயது பத்து. முதல் பாரத்தில் படித்துக் கொண்டிருந்தான் அவன். திடீரென்று ஒரு நாள் 'வியாதி' வந்து படுக்கையில் படுத்துவிட்டாள் மனோரமா. வியாதி இன்னதென்று புரிபடாமலே அவளுடைய வைத்தியம் ஸ்ரீதரனின் திரண்ட செல்வத்தைச் சூரிய உஷ்ணத்தில் வைக்கப்பட்ட பனிக்கட்டியைப் போல் கிறுகிறு வென்று கரைத்துவிட்டது. அதுவரை காத்திருந்தது போல் மனோரமாவின் உடலைப் பிடித்து ஆட்டி வைத்துக் கொண்டிருந்த வியாதி அவளைப் பலி கொண்டது.

ஸ்ரீதரனும், பிரபாகரனும் அழுதனர், அலறினர், கதறினர். பித்துப் பிடித்தவர் போல் வளைய வந்து கொண்டிருந்த ஸ்ரீதரனின் மனப்புண் காலச் சக்கரத்தின் சுழற்சியின் வேகத்தில் சிறுகச் சிறுக ஆறிக் கொண்டே வந்தது. அவருடைய இளம் மனைவி மனோரமாவின் பிரிவால் அவர் உள்ளத்தில் படிந்துவிட்ட மனக்குறையைப் போக்க அவருடைய இரண்டாம் தாரமாக வந்து வாய்த்தாள் கிரிஜா. ஸ்ரீதரனுடன் அவள் குடித்தனம் செய்ய வந்த சில காலத்திற்குள்ளாகவே, தன்னிச்சையாக ஓடியாடி வளைய வர தனக்குச் சுதந்திரமளிக்கமாட்டார்களா நம் பெற்றோர்கள் என்று குழந்தைப் பருவத்தில் அவர்களுடைய அன்புச் சிறைக்குள் ஒரு கைதியாக இருந்த பிரபாகரனுக்கு அப்படிப்பட்ட அடிமை வாழ்க்கையினின்றும் விடுதலை கிடைத்துவிட்டது. அதே சமயத்தில் ''இனி நீ என்னுடைய கொடுமையும், கட்டுப்பாடும் நிறைந்த சிறைக்குள் அடைந்து கிடக்க வேண்டிய ஒரு கைதி!...'' என்று தன்னுடைய அதிகாரம் என்னும் விலங்கை அவன் கரங்களில் மாட்டினாள் கிரிஜா. இப்போது ஓடியாடி இஷ்டப்படித் தன் உடலை இயக்கப் பிரபாகரனுக்கு வேண்டிய சுதந்திரம் இருந்தது. அவனைக் கட்டிப் பிடித்து மடி மேல் வைத்துக் கொண்டு சீராட்ட அப்போது யாரும் இல்லை.

பள்ளிக்குப் போய்விட்டு மாலை வீட்டுக்கு வந்தவுடன் கையில் கனமான குடத்தை எடுத்துக் கொண்டு ஓடுவான் பிரபாகரன் கிணற்றடிக்கு! கரகர வென்று கையில் உராய்ந்து வேதனைப்படுத்தும் பருமனான கயிற்றால் அந்தக் கனமான குடத்தைக் கட்டிவிட்டு இழுக்க முடியாமல் இழுத்துக் குடம் குடமாகப் பெரிய தொட்டிகள் நிறையத் தண்ணீர் நிரப்பிவிட்டுத் தன் கைகளைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொள்ளுவான் பிரபாகரன்.

அவனுடைய கண்ணீரைக் கண்ணால் பார்க்க அங்கே மனோரமா இல்லை. அவனுடைய கண்ணீரைத் துடைக்கும் அவளுடைய அன்புக் கரத்தை என்றோ ஒடித்துவிட்டான் காலன். ஆனால் அதற்குப் பதில் மற்றொரு ஆத்மா மனோரமாவுக்குச் சமதையாகப் பிரபாகரனின் மீது தன் உயிரையே வைத்திருந்த ஒரு ஆத்மா — அப்போது அங்கே இருக்கத்தான் இருந்தது. அது கிரிஜாவின் விஷ நாக்குக்குப் பயந்து அஞ்சி பிரபாகரனின் கஷ்டங்களைப் பார்த்துக் கொண்டே

கண்ணிருந்தும் குருடனாக ஒரு நடை பிணமாக வளைய வந்து கொண்டிருந்தது. அந்த ஆத்மா தான் ஸ்ரீதரன். நாளுக்கு நாள் இதே துயரத்திலேயே கேவலமாகி உளுத்துக் கொண்டு வந்த அவருடைய இதயம் தன்னுடைய துடிப்பை நிறுத்த சமயம் பார்த்துக் கொண்டிருந்தது.

பிரபாகரன் ஸ்கூல் பைனலை முடித்துவிட்டான்; இனி அந்த அடிமைப் பறவைக்குத் தானாகவே பறந்து திரிந்து ஆகாரம் தேடித் தன் வயிற்றை நிரப்பிக் கொள்ள இறக்கை முளைத்து விட்டது என்பதையறிந்த சில நாட்களுக்கெல்லாம் நிம்மதியுடன் கண்ணை மூடிவிட்டார் ஸ்ரீதரன்.

ஸ்ரீதரனுடைய அந்திமக் கிரியைகளெல்லாம் ஒரு வழியாக நடந்து முடியும் வரை பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்திருந்த பிரபாகரன் தன் தந்தையின் ஆஸ்தி என்று காலணா எடுத்துக் கொள்ளாமல், 'மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்' என்ற நம்பிக்கையில், அவ்வளவு நாட்களாக அடைந்துகிடந்த கொடுமைச் சிறையினின்றும் தனக்கு விடுதலை கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் ஒரு நாள் வீட்டைவிட்டுக் கிளம்பிவிட்டான்.

'எத்தனையோ மைல்கள் விஸ்தீரணமுள்ள இந்த சென்னைப் பட்டினத்தில் இந்த ஏழைக்கு—அனாதைக்கு, வேலை கொடுத்து ஆதரிக்கிறேன் என்று சொல்லிக் கை கொடுக்கும் ஒரு புண்ணியவான் இல்லாமலா போய்விடுவார்?....' என்று கையில் ஸர்டிபிகேட்டைத் தூக்கிக் கொண்டு மழையில் நனைந்து—காற்றில் உலர்ந்து, கானலென்றும் பாராமல் கால் கடுப்பதையும் பொருட் படுத்தாமல் பிரபாகரன் அலைந்து திரிந்த தெருக்கள் எத்தனையோ! நம்பிக்கையுடன் ஏறி நிராசையுடன் இறங்கிய அலுவலகங்கள் எத்தனை யெத்தனையோ!

இதனிடையில் தான் அப்போது பிரசித்தமான பெயருடன் விளங்கி வந்த நெசவுத் தொழிற் சாலையொன்றின் அதிகாரியான ஜகதீசனைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது பிரபாகரனுக்கு. முதல் பார்வையிலேயே பிரபாகரனின்

கல்வியறிவு – தன்னலமின்றி நேர்மையுடன் உழைக்கும் திறன், அடக்க சுபாவம் முதலியவற்றைப் பறை சாற்றிக் கொண்டிருந்த பிரபாகரனின் முகம் ஜகதீசனைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. இச்சமயம் தன்னுடைய தொழிற்சாலையில் காலியாக இருந்த வேலை ஒன்றில் நல்ல சம்பளத்தில் அவனை உடனே அமர்த்திவிட்டார். அவன் அந்த வேலையிலமர்ந்த வேளையின் மகிமை என்று தான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால், 'உனக்கு என் பெண் ஸரஸாவை விவாகம் செய்து கொடுத்து என்னுடைய பங்களாவிலேயே வைத்துக்கொள்ள விரும்புகிறேன். உன்னுடைய குணமும், அறிவும்தான் என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. நீ என் அந்தஸ்துக்கு ஏற்ற மாப்பிள்ளையாக இல்லையே என்று நான் கவலைப்படவில்லை' என்று ஜகதீசனின் மூலம் பிரபாகரனைப் பற்றிக் கேள்விப்பட்ட அவருடைய நண்பர், பிரபல மோட்டார் கம்பெனியொன்றின் மானேஜர் சங்கரன் வலுவில் அவனைத் தேடிக்கொண்டு வருவாரா?.... ஒரு சுப முகூர்த்தத்தில் ஸரஸாவுக்கும், பிரபாகரனுக்கும் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது. அதுவரை ஹோட்டல் ஒன்றில் அறை யெடுத்துக்கொண்டு சங்கட வாழ்க்கை நடத்தி வந்த பிரபாகரன் தன்னுடைய மாமனர் வீட்டோடு வந்துவிட்டான்.

'அதிர்ஷ்டம் என்னைத் தேடிக் கொண்டு வருகிறது. கஷ்டப்படுகிறவர்கள் எத்தனை நாளைக்குத் தான் கஷ்டப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்?...நான் இதுகாறும் அனுபவித்து வந்த துன்பச் சிறையினின்றும் எனக்கு விடுதலை கிடைத்துவிட்டது' என்று எண்ணிப் பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தான் பிரபாகரன். 'பைத்தியக்காரா!...உன்னுடைய துன்பத்தின் மற்றொரு சகாப்தம் இனிமேல் தான் தொடங்கப் போகிறது என்பதை யறியாமல் இப்படிப் பொங்கி மகிழ்கிறாயே!.... என்று அவனை நோக்கி, மனிதனுடைய எண்ணங்களுக்கும் அதற்கேற்ப அவன் போடும் திட்டங்களுக்கும் அப்பாற்பட்டதாக நின்று அவனை ஆட்டிவைக்கும் பேராற்றல் படைத்த விதி சிரித்துக் கொண்டிருந்தது என்பதை அப்போது அவன் உணரவில்லை.

* * *

பிரபாகரன் ஸரஸாவின் கைத்தலம் பற்றி அவளுடன் வாழ்க்கை நடத்த ஆரம்பித்த புதிதில் அவனுக்கு அந்த வீட்டில் கிடைத்த கௌரவமும், நடந்த உபசாரங்களும் அவனை மகிழ்ச்சியில் திக்குமுக்காட வைத்தன. 'இவ்வளவு செல்வம் கொழித்து இன்பம் பொங்கி நிற்கும் இந்த வீட்டில் இந்த ஏழை மாப்பிள்ளைக்கு எத்தகைய மதிப்பு!....'' என்று பெருமை கொண்டான்.

ஸரஸாவுக்கு மூத்த சகோதரிகள் இருவர். ஒருத்தி பம்பாயிலும், மற்றொருத்தி மைசூரிலும் இருந்தனர். அவர்களுக்கு விவாகம் செய்து வைத்தபோது அந்த மாப்பிள்ளைகளையும் தம் வீட்டோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் சங்கரன் ஆசைப்பட்டார். ஆனால் அவர்கள் அமர்ந்திருந்த உயர்ந்த வேலையில் அவர்களுக்குக் கிடைத்த நிறைந்த சம்பாத்தியத்திற்கும், அவர்களுக்கிருந்த ஏராளமான ஆஸ்திபாஸ்திகளுக்கும் தாம் தனியாகக் கௌரவமாகக் குடித்தனம் நடத்திக் கொண்டு என்றோ ஒரு நாள் அபூர்வமாக 'மாப்பிள்ளை' என்ற ஹோதாவுடன் வருவதை விட்டு மாமனார் வீட்டோடு வந்துவிட்டால் நாளடைவில் மரியாதை கெட்டு அவர்களுடைய வீட்டு வேலைக்காரப் பையனுக்குச் சமமாய் கேவலமாகிவிடுவோம் என்ற அபிப்பிராயத்தினால் அவர்கள் மறுத்துவிட்டனர் என்பதையறிந்தபோது பிரபாகரன் அவர்களை 'வரட்டு ஜம்பம் கொண்டாடுபவர்கள்; இவ்வளவு பெரிய செல்வந்தரான மாமனாருடைய வீட்டில் பெருமையுடன் உலாவ அவர்கள் கொடுத்து வைக்கவில்லை. நான் தான் அதிர்ஷ்டசாலி' என்று நினைத்தான். அவனுடைய அந்த பூரிப்பும், மகிழ்ச்சியும் மாரிக்காலத்தில் மாயத்தோற்றம் காட்டி மயக்கிப் பின்பு விரைவிலேயே மறைந்து விடும் வானவில் போன்று நிலையற்றது என்பதை அப்போது அவன் கண்டானா!....

மாதம் பிறந்ததும் அவன் சம்பாதிக்கும் சம்பளம் முழுவதும் அவனுடைய மாமனார் பெட்டிக்குப் போய்விடும். அவனுடைய தினசரி செலவுகளுக்கு அவன் கை மனைவி ஸரஸாவின் முன் நீள வேண்டும். அதுமட்டுமா?....அவனுடைய அபிப்பிராயம் எதுவுமே முதலில் ஸரஸாவிடம்தான் பிரேரிக்கப்பட வேண்டும். அது அவளுக்குச் சரியென்று தோன்றிய பிறகு தான் வீட்டில் வெளியிடப்படும். நாள் செல்லச் செல்ல, அங்கங்கே மறைவில் பதுங்கிக் கிடக்கும் கொடிய விலங்குகள் நிறைந்த ஒரு திக்குத் தெரியாத காட்டில், தான் வந்து அகப்பட்டுக் கொண்டுவிட்டது போன்ற ஒரு பிரமை ஏற்பட ஆரம்பித்தது பிரபாகரனுக்கு. மற்ற மாப்பிள்ளைகள் வந்திருக்கும் சமயங்களில் அந்தப் பிரமை அவனை அதிகமாகப் பிடித்து விரட்டத் தொடங்கியது. அந்த சமயங்களிலெல்லாம் அவனுடைய மாமனார், மனைவி முதலியவர்களுக்கு அவன் ஒரு சிற்றாளாக ஆகிவிடுவான்.

தன்னுடைய சகோதரிகளின் கணவன்மார்கள் இப்படி அபூர்வமாக வந்து போகவே தன்னைவிட அவர்கள் எத்தனை சலுகை கொண்டாடுகிறார்கள் பிறந்தகத்தில்!.... அவர்களுக்கு எவ்வளவு ராஜோபசாரம் நடக்கிறது? அம்மாதிரி தானும் கௌரவம் கொண்டாட தன் கணவனுக்கு என்ன அந்தஸ்து இருக்கிறது? நாமும் அம்மாதிரி வெளியே ஒரு அடி ஒதுங்கி வாழலாமென்றால் தன் கணவன் சம்பாதிக்கும் சொற்பவருவாயில் இப்போதிருக்கும் ஒரு செல்வாக்குடனே, ஆடம்பரத்துடனே வாழ முடியாது. அப்பாவுக்கு ஏன் அப்போது புத்தி கெட்டுவிட்டது? என்று எண்ணி மனம் புழுங்க ஆரம்பித்த ஸரஸா நாளடைவில் தன் கணவனை ஒரு துரும்புக்குச் சமமாக மதிக்கலானாள். அவனை ஒரு பொம்மையாக்கி அதை இஷ்டப்படி ஆட்டிவைக்கும் அதிகாரியாக அவள் ஆனாள்.

திடீரென்று ஒருநாள் கடுமையான குளிர் காய்ச்சல் வந்துவிட்டது பிரபாகரனுக்கு. ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டுப் படுக்கையில் கிடந்த அவனை அந்த வீட்டில் எல்லோரும் பயமும், அருவருப்பும் பிரதிபலிக்கும் முகபாவத்துடன் பார்க்க ஆரம்பித்தனர். பிரபாகரனின் மனக்கண்முன் அவனுடைய தாய் மனோரமாவும், தந்தை ஸ்ரீதரனும் மறைவாக எங்கோ நின்று அவனுடைய அவலப்பிழைப்பைக் கண்டு கண்ணீர் வடிப்பது போன்ற ஓர் மாயத்தோற்றம் தோன்றும். நெஞ்சு உலர, நாக்கு ஒட்டிக்கொள்ள, துவண்ட கீரைத் தண்டைப்போல், கண்ணீர் வடித்தவாறு அவன் படுத்திருக்கும் போது, ஸரஸா மட்டும் ஆகாரம், மருந்து கொடுக்கும் வேளைகளில் வந்து—அவன் கரத்தால் தாலி கட்டிக் கொண்ட தோஷம்—ஏதோ கடனுக்குச் சிசுருஷைகள் செய்து விட்டுப் போவாள்.

மெலிந்த உடலுடன், ஒட்டிய கன்னங்களுடன், குழிவிழுந்த கண்களுடன் அவன் வியாதியினின்று மீண்டு எழுந்தபோது 'விடுதலை வேண்டும்!........விடுதலை வேண்டும்!....' என்று ஓலமிட ஆரம்பித்தது அவன் உள்ளம்.

'சிறை போன்ற இந்த வாழ்க்கையினின்றும் வெளியேறி சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கப் போ!.... பணத்திமிர் பிடித்த உன் மாமனார், மாமியார், மனைவி முதலிய கழுகுக் கூட்டங்களிடையே வழி தவறி வந்து அகப்பட்டுக் கொண்ட பறவைபோல் நீ நடத்தி வந்த வாழ்க்கை போதும்?...என்று அவனை உந்தித் தள்ள ஆரம்பித்தது, அவனை அவ்வளவு நாட்களாக ஆட்டிவைத்த வியாதியினின்றும் அவன் மீண்டு எழுந்தபோது அவனுடைய புதிய ரத்த ஓட்டத்தினின்றும் பீறிட்டுக் கிளம்பிய ஒரு சக்தி!

அன்றுதான் தன்னை அதுகாறும் வாட்டி வதைத்த வியாதியினின்றும் மீண்டு எழுந்து ஆபீஸுக்குச் சென்றான் பிரபாகரன். இளைத்து, உருமாறி, விகாரமாகிவிட்டிருந்த அவனுடைய தோற்றம் எல்லோருக்கும் அவன்பால் மட்டற்ற அனுதாபத்தைத்தான் தோற்றுவித்தது.

அன்று மாலை. வேலை முடிந்து மணியாகிவிட்ட பிறகும் வீட்டுக்குச் செல்ல மனமின்றி அவனுடைய ஆசனத்திலேயே உட்கார்ந்திருந்தான் பிரபாகரன். "பிரபா

எப்படி இருக்க முடியும்?

கார் ஓட்டிக் கொண்டிருந்த ஒரு மைனரை நிறுத்தி "லைசென்ஸ் எங்கே?....'' என்று கேட்டார் போலீஸ் அதிகாரி.

"லைசென்ஸா? அது எப்படி என்னிடம் இருக்க முடியும்? அதைத்தான் உங்கள் அதிகாரிகள் போன வருஷமே என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டுவிட்டார்களே'' என்றார் மைனர்.

கர்!....மணியாகிறதே! வீட்டுக்குப் போகவில்லையா'' என்ற குரலுடன் தன் தோள்களின் மேல் ஆதரவுடன் வந்து படிந்த கரம் பிரபாகரனின் உடலைச் சிலிர்க்க வைத்தது. ''யார்?....'' என்று திடுக்கிட்டுத் திரும்பிய அவன் முன் ஆபீஸில் அவனுடன் வேலை பார்க்கும் சுகுமார் நின்று கொண்டிருந்தான்.

''போக வேண்டும்!....'' என்று பதிலளித்த அவனுடைய தொண்டையில் அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியாதபடி தாங்க முடியாத துக்கம் ஒரு பெரிய கல்லைப்போல் வந்து அடைத்துக் கொண்டது. 'இன்னும் இன்றைக்கெல்லாம் அன்ன ஆகாரமின்றி நான் இங்கேயே கிடந்தால் தான் வீட்டுக்கு வரவில்லையே என்று கவலையுடன் என்னை எதிர்பார்ப்பவர்கள் யார் இருக்கிறார்கள்?....' என்று எண்ணிய பிரபாகரனுக்குக் கண்களில் லேசாக நீர்த்திரையிட்டது. அவனுடைய கலக்கத்தையோ, மனத் துயரத்தையோ பற்றி ஒன்றுமே யறியாத சுகுமார், ''பிரபாகர்!.... உங்களிடம் ஒரு முக்கியமான உதவி கேட்க வந்திருக்கிறேன்....'' என்று கூறி முடிக்காமல் இழுத்தான். ''என்னிடமா?....'' என்றான் பிரபாகரன் வியப்புடன்.

மெள்ள சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் குரலை சற்றுத் தாழ்த்திக் கொண்டான் சுகுமார்.

''பிரபாகர்!.... எனக்குக் கொஞ்ச நாட்களாக மூளையே குழம்பிப் பைத்தியம் பிடித்துவிடும்போல் இருக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு என்னுடைய சகோதரிக்கு விவாகம் நடந்தது. என் கையிலிருந்த கொஞ்சம் தொகையையும், கிராமத்திலிருந்த எங்கள் நிலத்தை அடகு வைத்துக்கொஞ்சம் பணம் வாங்கி அதையும் சேர்த்து எப்படியோ கல்யாணத்தை நடத்தி விட்டேன். இப்போது அவளைப் புக்ககத்திற்கு அனுப்புவதற்கும், அடகு வைத்த நிலத்தை மீட்பதற்கும் கையில் பணமில்லையே என்று கவலையாக இருக்கிறது. எங்களுடைய பணமுடைக்காகப் பார்த்துக்கொண்டு எத்தனை நாளைக்கு என் சகோதரியைக் கணவனுடன் குடித்தனம் செய்ய அனுப்பாமல் பிறந்தகத்திலேயே வைத்துக்கொண்டு இருப்பது என்று நானும், என் தாயாரும் இரவு பகலாக வருத்தப்பட்டு மனம் கலங்கிக் கொண்டிருக்கிறோம். இதனிடையில் என் தாயாருக்கு உடம்பு சரியில்லாமலிருப்பதாகக் கடிதம் வந்திருக்கிறது. வைத்தியத்திற்குக் கூடப் பணமில்லாமல் தவிக்கிறார்களாம். நீங்கள் தயவுசெய்து உங்கள் மாமனாரிடமிருந்து கேட்டு ஒரு ஆயிரத்தைந்நூறு ரூபாய் கடன் வாங்கிக் கொடுத்தீர்களானல் என்னுடைய சகோதரியைப் புக்ககம் அனுப்பி ஒரு பளு தீர்ந்துவிட்ட பிறகு எப்படியோ வயிற்றை வாயைக் கட்டி மாதாமாதம் சிரமப்பட்டு சம்பளத்தில் மிச்சம் பிடித்துச் சேர்த்துக் கொடுத்துக் கடனை தீர்த்துவிடுகிறேன். 'கெஞ்சும் குரலில் பிரபாகரனின் கைகளை அன்புடன் பற்றிக் கண்களில் கண்ணீர் மல்கக் கேட்டான் சுகுமார்.

அதுவரை தலையைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த பிரபாகரன் நிமிர்ந்து சுகுமாரின் முகத்தை ஏறிட்டு நோக்கினன். அவன் முகத்தில் அவ்வளவு நேரமும் குடிகொண்டிருந்த துயரமும், சோகமும் எங்கோ மறைந்துவிட்டன.

''சுகுமார்!.... இதற்காகவா இப்படி மனம் சோர்ந்துவிட்டாய்?.... உன்னுடன் இவ்வளவு நாட்களாகப் பழகிய அத்தியந்த சிநேகிதனை நான் உனக்காக இது கூடவா செய்யமாட்டேன்? உனக்கு என்றைக்குப் பணம் தேவை?'' அவன் குரல் அவனுக்கே புதிதாய் ஒலித்தது.

''இன்னும் இரண்டு நாட்களில் கொடுத்தால்கூட ரொம்ப உதவியாக இருக்கும்...''

''ரொம்ப சரி! வீட்டுக்குக் கிளம்பலாமா?'' பிரபாகரன் தான்

உட்கார்ந்திருந்த ஆசனத்தினின்றும் உற்சாகமாக எழுந்தான்.

*   *   *

அன்று காலை முன்புற ஹாலில் சோபாவில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு அன்றைய தினசரியைப் புரட்டிக்கொண்டிருந்த சங்கரன் தம்முடைய பங்களா கேட்டைத் தாண்டி உள்ளே நுழைந்த போலீஸ் 'ஜீப்'பைக் கண்டு வியப்பும், திகிலும் அடைந்தவராய் ஸ்தம்பித்துவிட்டார். 'டக்'கென்ற பெருஞ் சப்தத்துடன் வந்து நின்ற அந்த போலீஸ் ஜீப்பிலிருந்து ஸப் இன்ஸ்பெக்டர் இரண்டு கான்ஸ்டபிள்கள் பின்தொடர உள்ளே பிரவேசித்தார்.

''மிஸ்டர் பிரபாகரன் எங்கே?'' என்று அவர் இடிமுழக்கக் குரலில் கேட்டபோது சங்கரன் அரண்டுவிட்டார்.

''எதற்கு?'' என்று திக்கித் திணறக் கேட்டார் அவர்.

''அவரைக் கைது செய்யவேண்டும்.... ஆபீஸ் பணம் ரூபாய் ஆயிரத்து ஐநூறு அவருடைய கையெழுத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது'' என்று ஸப் இன்ஸ்பெக்டர் கூறியபோது சங்கரனுக்குக் கண்கள் இருண்டுக்கொண்டு வருவது போலவும், உலகமே தலைகீழாய்ச் சுழலுவது போன்றும் பிரமை ஏற்பட்டது.

''இருக்காது... ஒருநாளும் இருக்காது. நீங்கள் ஆள் மாறாட்டமாக வந்துவிட்டீர்கள்'' என்று அவர் நடுங்கும் குரலில் நாத்தழுதழுக்கக் கூறிக்கொண்டிருந்தபோது, ''இல்லை.... அவர்கள் ஆள் மாறாட்டமாக வந்துவிடவில்லை. இதோ இருக்கிறேன் குற்றவாளி'' என்று குரல் கொடுத்தவாறு உள்ளிருந்து வந்த பிரபாகரன், ''நீங்கள் தாராளமாக என்னைக் கைது செய்யலாம்...'' என்று கூறித் தன் இரு கரங்களையும் அவர்களுக்கு முன்பாக நீட்டினான். அவனுடைய இந்தத் திடீர்ச்செயல் அங்கிருந்த எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துத் திணற வைத்தது. ''ஐயோ!.... உங்களுக்கென்ன பைத்தியமா?'' என்று உரத்த குரலில் கிறீச்சிட்டாள் ஸரஸா. சங்கரன் திக்பிரமை பிடித்தவராய் நின்றுகொண்டிருந்தார்.

''ம்... விலங்கு மாட்டுங்கள்'' என்று மீண்டும் ஒலித்த பிரபாகரனின் குரல் அங்கு நிலவியிருந்த நிசப்தத்தைக் கலைத்தது. அவனுடைய முகத்தில் பரிதாபமோ, தனக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையைப் பற்றிய ஏக்கமோ ஒரு சிறிதும் இல்லாததைக் கண்ட இரு கான்ஸ்டபிள்களும் வியப்பும், திகைப்பும் மேலோங்க மிரள மிரள விழித்தவர்களாக அவனுடைய கரங்களில் விலங்கு மாட்டினர்.

''அப்பா!... அப்பா!... என்ன நீங்கள் சும்மா பார்த்துக்கொண்டு நிற்கிறீர்களே. நிரபராதியான அவர் கையில் அவர்கள் விலங்கு மாட்டுகிறார்களே!'' என்று அலறினாள் ஸரஸா.

''ஸரஸா! நான் நிரபராதியல்ல. குற்றவாளிதான். என்னுடைய சொந்த செலவுக்குப் பணம் தேவையாக இருந்தது. அதற்காக ஆபீஸ் பணம் ஆயிரத்தைந்நூறை எடுத்துக்கொண்டேன்...'' என்று கம்பீரமாக மொழிந்த பிரபாகரனைத் தன் அலறலை நிறுத்திவிட்டு வெறுப்பும், கோபமும் பொங்கப் பார்த்தாள் ஸரஸா. அதற்குள் ஸப் இன்ஸ்பெக்டரின் உத்தரவின் மேல் பிரபாகரன் அழைத்துச் செல்லப்பட்டான்.

''ஸரஸா இப்போது பிரபாகரன் சிறைச்சாலைக்குச் செல்லுகிறானே என்று நான் கவலைப்படவில்லை. அவனுக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும். பெரிய சத்தியசந்தன் போல் 'நான்தான் குற்றவாளி' என்று சொல்லிக்கொண்டு வந்துவிட்டானே! இவ்வளவு செல்வ நிலையில் அவனை நான் புரளவிட்டுக் கொண்டிருக்கும் போது அவனுக்கு ஆபீஸ்

பணத்தைக் கையாளும் அவசியம் எதற்கு ஏற்படவேண்டும்! இப்போது இவனுல் நமக்கிருக்கும் அந்தஸ்திற்கும், ஹோதாவுக்கும் எவ்வளவு அவமானம் ஏற்பட்டு மதிப்புக் குறைவு உண்டாகிவிட்டது தெரியுமா? அதை நினைத்தால்தான் என் மனம் கலங்குகிறது.... தொலையட்டும்'' என்று வெறுப்புடன் தன் மகளிடம் சங்கரன் கூறிய வார்த்தைகளும் அதற்கு. ''நன்ருகச் சிறைவாசம் அனுபவித்துவிட்டு வரட்டும்! அப்போதுதான் தெரியும் இங்கு இத்தனை நாட்களாக நன்ருகச் சாப்பிட்டுச் சாப்பிட்டுத் தூங்கிய தன் மகிமை...'' என்று தயை, அன்பு முதலியவற்றைத்துடைத்துவிட்டு ஸரஸா கூறிய பதிலும் லேசாக மிதந்து வந்து பிரபாகரனின் செவிகளில் விழுந்தன.

அவனைப்பின்தொடர்ந்து அழுது கொண்டு யாரும் ஓடிவரவில்லை. அதற்குப் பதிலாக, பிரபாகரன் ஏற்றப்பட்டவுடன் 'விர்'ரென்று பெருஞ் சப்தத்துடன் கிளம்பிய போலீஸ் ஜீப் எழுப்பிய புழுதிப் படலத்தில் பின்புறம் திரும்பிப் பார்த்த பிரபாகரனுக்கு அவனுடைய தாய் மனோரமா கண்ணீரும் கம்பலையுமாக, ''பிரபாகரா!.... பிரபாகரா!....'' என்று அரற்றிக்கொண்டு அவனைத்தேடிக் கொண்டு 'ஜீப்'பைத் துரத்தியவாறே ஓடிவருவது போன்ற மாயத் தோற்றம் தென்பட்டது. பிரபாகரனின் கண்களில் கண்ணீர் சுரந்து நின்றது.

''ம்.... சிறைவாசம் பயங்கரமானதா? முன்பு நான் அனுபவித்து வந்த நரக வாழ்வை விட இந்த சிறை வாழ்வு மிகவும் உயர்ந்ததல்லவா. முள்ளை முள்ளால் வாங்குவதைப் போல் நான் இதுகாறும் அனுபவித்து வந்த சிறை வாழ்க்கையினின்றும் விடுதலை பெறுவதற்காக நானே வலுவில் ஏற்றுக் கொண்டதுதான் இந்தச் சிறை வாழ்க்கை! என்று தனக்குத் தானே முனகிக்கொண்டான் பிரபாகரன்.

பிரபாகரனுக்கு மூன்று வருட சிறைவாசம் தண்டனையாக விதிக்கப்பட்டது. ஏற்கனவே வாழ்க்கையில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துத் தளர்ந்திருந்த பிரபாகரனின் தேகம் சிறை வாழ்க்கையில் பின்னும் தேய்வுற்றுச் சுக்காக உலர்ந்தது. உடலின் ஒரு மூலையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் உயிருக்காக வேண்டா வெறுப்பாக ஒவ்வொரு வேளைச் சோற்றையும் விழுங்குவது; நாட்டின் நலனுக்காகப் போராடி இரத்தம் சிந்தி சாயுஜ்யப் பதவி எய்திய தியாகிகளின் – புண்ணியாத்மாக்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பது; மிகுதியுள்ள நேரத்தில் என்றென்ருே நடந்து காலம் விழுங்கிக்கொண்டிருக்கும் தன் துயர வாழ்க்கையின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் பற்றிய நினைவுகளில் சிந்தனைப் புரவியை ஓடவிட்டுப் பெருமூச்செறிந்து கண்ணீர் வடிப்பது ஆகியவை பிரபாகரனின் அன்ருட வேலைகளாகி விட்டன.

'டங்' 'டங்'கென்று இரவின் நிசப்தத்தை–நீண்ட மௌனத்தைக் கலைத்துக்கொண்டு சிறைக் கடிகாரம் இரண்டு முறை அடித்து ஓய்ந்தது. 'கொர்' 'கொர்' என்று விடாமல் கேட்டுக்கொண்டிருந்த குறட்டை சப்தம் அவனுடைய அறையிலிருந்த மற்றக் கைதிகளெல்லோரும் ஆழ்ந்த நித்திரையிலிருப்பதை அறிவித்தது. அறையின் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக்கொண்டு நீண்ட நேரமாக கடந்தகால தன் வாழ்வைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து கிடந்த பிரபாகரனை அசதி கீழே தள்ளியது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஆழ்ந்த சிந்தனையின் அலுப்பில் அவனுடைய கண்கள் இரண்டும் தாமாக மூடிக்கொண்டன.

''ஏது?....ரொம்ப நல்லத் தூக்கமோ?'' என்ருன் ஒரு கைதி.

''பாவம்!... ராத்திரியெல்லாம் தூங்காம இப்படியும், அப்படியும் உலாத்திக்கிட்டு இருந்தாரு!....

விடியற் காலம் சித்தே கண்ண சந்துட்டார் போலிருக்கு....'' என்ருன் மற்ருெருவன்.

பிரபாகரன் பதில் பேசாமல் மௌனமாக எழுந்து உட்கார்ந்தான். 'டக்' 'டக்' என்று பூட்டைத் திறந்துகொண்டு சிறைச் சாலை அதிகாரி உள்ளே நுழைந்தார். கைதிகள் பயபக்தியுடன் எழுந்து நின்றனர். நேரே பிரபாகரனை நோக்கி நடந்து வந்த அவர், ''பிரபாகர்!....இன்று உனக்கு விடுதலை!... இந்தியா குடியரசு நாடாக மாறிய இந்தப் புனித நாளில்—இந்திய நாட்டுச் சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இத்தகைய ஒரு நன்னளில் சிறைக் கைதிகளில் சிலருக்கு அவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டிய காலத்துக்குச் சற்று முன்னதாகவே விடுதலை யளிக்குமாறு அரசாங்கத்தார் உத்தரவு பிறப்பித்திருக்கிருர்கள். உன்னுடைய அடக்கமான சுபாவமும், சிறைச் சாலையில் நீ இவ்வளவு நாட்களாக நடத்தி வந்த அமரிக்கையான—புனிதமான—வாழ்க்கையும் எங்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. அதனுல் நீ தண்டனையனுபவிக்க வேண்டிய காலம் இன்னும் இருந்த போதிலும், உனக்கு விடுதலை யளித்துவிட்டோம்...நீ இனி சுதந்திரப் பிராணி.... எங்கு வேண்டுமானுலும் செல்லலாம்....'' என்று பிரபாகரனின் முதுகில் தட்டி அவர் கூறி முடித்தவுடன் பிரபாகரன் அவருடைய முகத்தைப் பரிதாபமாக ஏறிட்டு நோக்கினுன்—தன் கண்களை, காதுகளை—எதையுமே நம்பாதவன் போன்று.

''எனக்கா விடுதலை!....எனக்கா விடுதலை!.... 'நீ இனி ஒரு சுதந்திரப் பிராணி' என்ற வார்த்தையை நான் கேட்டது நிஜம் தானு!... அப்பா!.... அடிமை, அடிமை என்று அடிமை வாழ்க்கை நடத்தி எனக்குப் புளித்துவிட்டது ஸார்....'' என்று வரண்ட சிரிப்புடன் பைத்தியம் பிடித்தவன் போல் திரும்பத் திரும்பக் கூறிய

கர்ப்பத் தடை....!!

''எவனும் படித்துக் கவிஞனுவதில்லை; கவிஞன் பிறக்கிருன்'' என்ருர் ஒரு கவிஞர்.

அருகிலிருந்த ஒரு நண்பர் தணிவான குரலில் ''உண்மை தான். இதனுல் தான் கர்ப்பத் தடை வேண்டுமென்று நான் சொல்லுகிறேன்'' என்ருர்.

வாறு சிறை அதிகாரியின் பின்னுலேயே, அவ்வளவு நாட்களாக அடைந்து கிடந்த அறையைவிட்டு வெளியே வந்தான் பிரபாகரன்.

சிறைச் சாலையின் தாழ்வாரத்தருகில் அவன் நடந்து வந்து கொண்டிருந்தபோது, ''அண்ணு!.. அண்ணு!....'' என்று கத்திக் கொண்டே ஓடிவந்த ஒரு உருவம் பிரபாகரனின் கால்களைக் கட்டிக் கொண்டது. ''பிரபாகர்!...நீ என் சகோதரன் என்று இத்தனை நாட்களாக எனக்குத் தெரியாமற் போய்விட்டதே!.... நீ கொடுத்த பணத்துடன் ஊருக்குப்போய் என் தங்கையைப் புக்ககத்தில் கொண்டுவிட்டு அம்மாவுக்கு உடம்பைத் தேற்றி எல்லா வேலைகளையும் சரிவர முடித்துவிட்டேன். அன்று ஒரு நாள், ''உன் நிலைமைக்கு மனமிரங்கி, உன்னை நம்பி இவ்வளவு பணம் கொடுத்த புண்ணியவான் யார்?....'' என்று என் தாயார் கேட்டாள். உன் பெயரையும், நீ என்னிடம் கூறியிருந்த உன் ஆதிகால வாழ்க்கை வரலாற்றையும் கூறினேன். 'ஐயோ!....அவன் உன் சகோதரன்!.... நான்தான் அவனைப் படாத பாடெல்லாம் படுத்தி விட்டை விட்டே துரத்திவிட்ட பாவி! உனக்கு உன் அப்பா இறந்தபோது இரண்டு வயது. உன் தங்கை என் வயிற்றில் எட்டு மாதக் குழந்தை. அவனிடம் நான் கொண்டிருந்த வெறுப்பினுலும், அலக்ஷ்ய பாவத்

தினுலும் இத்தனை நாட்களாக அவனைப் பற்றி உன்னிடம் நான் மூச்சுக்கூட விடாமல் இருந்தேன். உடனே ஓடி அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு அவனை அழைத்துவா!....' என்று கூறி விம்மி விம்மி அழுதாள். "அண்ணு!....நான் சென்னை திரும்பிவந்த பிறகு தான் கேட்ட செய்தி ஆபீஸ் பணம் ரூபாய் ஆயிரத்தை நூறை எடுத்த குற்றத்திற்காக நீ சிறைக்குச் சென்றிருக்கிருய் என்ற செய்தி என்னைத் தாங்க முடியாத திகிலி லும், வருத்தத்திலும் தத்தளிக்க வைத்தது. நீ அந்த விதமாக எனக்குப் பணத்தைக் கொடுத் திருப்பாய் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. ஆனல் அதிர்ஷ்டவசமாக, இன்று குடியா சுத் திருநாளாதலால் சிறைக் கைதிகளில் சிலருக்கு அரசாங்கத் தாரின் உத்தரவின் மேல் முன்ன தாகவே விடுதலை கிடைக்கப் போகிறது. அவர்களில் நீயும் ஒரு வன் என்ற செய்தி என் காதில் விழுந்து ஓடோடிவந்தேன். இத் தனை மாத காலம் அநியாயமாக நீ சிறை வாழ்க்கை அனுபவித்து இப்படி உருத் தெரியாமல் மாறி விட்டாயே!.... அண்ணு!.... நீ ஒரு தியாகி....வாழ்க்கையில் ஒரு விநாடிகூட மகிழ்ச்சி என்பதையே அனுபவித்தறியாத உன்னை இனி மேலாவது நிம்மதியுடன் கூடிய வாழ்க்கையை நடத்தச் செய்ய நான் இருக்கிறேன். என்னுடன் கூட நீ இனி ஒரு சுதந்திரப் புருஷ ஞக இருந்து உன் காலத்தைக் கழிக்கலாம்...." என்று மூச்சு விடாமல் கூறி முடித்த சுகுமார், நெஞ்சு வெடித்துவிடும் போல் கதறினன். செயலற்று, திக் பிரமையடைந்து சிலையாய் நின்றி ருந்த பிரபாகரனின் விழிகள் ஆச் சரியத்தால் அகல விரிந்தன.

"சுகுமார்! எழுந்திரு!... இவ் வளவு நாட்களாக யாரோ ஒருவ னுக்கு—நம்மிடம் 'உதவி' என்று கோரி வந்த—நாம் எல்லோரும் பாரதமாதாவின் புதல்வர்கள் என்ற முறையில் என்னுடைய சகோதரனை ஒருவனுக்கு உதவி செய்தேன் என்ற மனத் திருப்தி யுடன் இருந்தேன். இப்போது அவன் என்னுடைய சொந்த சகோதரனே என்பதை யறிந்த வுடன் அந்த மகிழ்ச்சி பன்மடங் காகப் பெருகிவிட்டது" என்று தன்னுடைய சுருங்கியிருந்த கண் களில் பூரிப்பின் சாயலை மிதக்க விட்டவாறு தன் சகோதரனை அன் புடன் எழுப்பி நிறுத்தினன் பிரபா கரன். பின்பு அவன் இரு கரங்களை யும் பற்றி, "சுகுமார்! எங்கே மீண்டும் ஒருமுறை சொல்!.... நான் இனி ஒரு சுதந்திர ஆத்மா என்று! என் காது குளிரக் கேட் கிறேன். என் வாழ்நாட்களிலேயே சற்று முன்பு சிறைச்சாலை அதி காரி — இப்போது நீ சொல்ல — இரண்டாவது முறையாகக் கேட் கிறேன் இத்தகைய ஆதரவுடன் கூடிய கனிவு மொழியை!" என்று கெஞ்சும் குரலில் கேட்ட பிரபா கரனின் விழிகளினின்றும் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகி யது. அடுத்த நிமிடம் அவன் உடல் நிற்க இயலாமல் தள்ளாடி தடு மாறி, மடாரென்று கீழே சாய்ந் தது. அவனைத் தன்மேல் தாங்கி மெதுவாகக் கீழே கிடத்திவிட்டு வேகமாக ஓடி சோடா பாட்டி லுடன் திரும்பிவந்த சுகுமார், "அண்ணு! இதைக் குடி!" என்று துக்கம் நெஞ்சையடைக்கத் தழு தழுத்த குரலில் கூறி சோடாபாட் டிலைத் சகோதரனின் வாயருகில் கொண்டு போனன்.

மெல்லக் கண்ணைத் திறந்து பார்த்த பிரபாகரன் எங்கோ வெறித்து நோக்கியவாறே "அதோ! அதோ! சுதந்திரக் கோயிலின் வாயிற்படி!.... சுகு மார்! நான் போகிறேன்" என்று ஹீனஸ்வரத்தில் முனகினன். அடுத்த கணமே அவன் கண்கள் உள்ளுக்குச் செருகின. சுகுமார் தாங்கிக்கொண்டிருந்த அவன் தலை கீழே தொங்கிவிட்டது.

"அண்ணு! என்று வீறிட்டலறிய சுகுமாரின் குரல் அந்த சிறைச் சாலைக் கட்டிடத்தையே கிடுகிடுக்க வைத்தது.

மெய்க்காப்பாளன்!

சோழமன்னர் விஜயாலயன் திடீரென்று அன்றைக்கு மந்திராலோசனை சபையைக் கூட்டினார். அதற்குக் காரணம் இருந்தது. அரண்மனையில் வேலை செய்துவந்த மெய்க்காப்பாளர் பட்டியலில் வளவன் என்ற மெய்க் காப்பாளனுக்கு முதுமை வந்துவிட்டதால், அந்தப்பதவிக்கு வேறு தேர்ந்த ஒருவனை நியமனம் செய்யவே அந்தரங்கக் கூட்டம் கூடியது.

ஒரு நாழிகைப் பொழுதுக்குப் பிறகு மன்னர் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

சோழநாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் செய்தி பறையறிவிக்கப்பட வேண்டுமென்றும், மெய்க்காப்பாளனைத் தேர்ந்தெடுக்க நடத்தப்படும் பரீட்சையில் யார் வெற்றி பெறுகிறானோ அவனுக்கே மெய்க்காப்பாளன் பதவி கிடைக்குமென்றும் விவரித்தார் அரசர்.

"அதுவே சரி!" என்றது மந்திராலோசனை மண்டபம்!

* * *

சோழநாட்டின் தலைமையான முக்கூடல் அது. அங்கு பறைஒலி விண்ணைச் சாடியது:

"இதனால் சோழதேசத்து மகாஜனங்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், நம் மன்னர் பிரான் அவர்களுடைய மேன்மையான அரசாணைப் பிரகாரம் வருகிற ஞாயிற்றுக்கிழமை தினத்தில் மெய்க்காப்பாளர் தேர்தலுக்குப் போட்டியொன்று அரண்மனை அரசமண்டபத்தில் நடத்தப்படும். போட்டியில் திறமையுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்........!"

* * *

அது காவேரிக் கரையின் ஓரம். அங்கு சிறுகச் சிறுக கும்பல் சேர்ந்தது. அன்றுதான் ஞாயிற்றுக்கிழமை. சோழவள நாட்டின் அரசமெய்க்காப்பாளர் போட்டித் தேர்வு நாள் அன்றல்லவா?

பிரதாபஹுதனேகா என்ற ஒரு யோகி மண்ணில் தன் தலையை மட்டும் ஒன்பது மணி நேரத்திற்குப் புதைத்துக் கொண்டிருந்தார்.

லிங்கன், வேலன், சுந்தன் மூவரும் அப்பகுதியில் நல்ல பலசாலிகள் என்று பெயர். மூவரும் அப்பொழுது விதவிதமான ஆடையலங்காரத்துடன் தோன்றினார்கள். போட்டியில் வெற்றி யாருக்குக் கிட்டுமோ என்ற பீதி அவர்களின் முகமண்டலங்களை வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

"மெய்க்காப்பாளன் பதவி எனக்குத்தான்!" என்றான் ஒருவன்; இரண்டாமவன் தனக்குத்தான் என்று முழங்கினான்; மூன்றாவது ஆள் தனக்கே உரியது பதவி என்று முரசு கொட்டினான்.

இப்படி இந்த மூன்று ஆண் சிங்கங்களும் வீரகர்ஜனை புரிந்த வண்ணம் நடந்தார்கள் அரண்மனையை நோக்கி.

வழியில் காவேரி குறுக்கிட்டது.

கரையின் விளிம்பில் கால் எடுத்து வைத்தார்கள்.

"அண்ணே" என்று யாரோ ஒரு இளைஞன் கூப்பிட்டான்.

"அண்ணே, நீங்களும் அரண்மனைக்குத்தான் போகிறீர்களா? மெய்க்காப்பாளன் போட்டியில் கலந்து கொள்ளத்தானே.... நான் கூட அதற்குத்தான் ஓட்டமாக ஓடிவருகிறேன்...எனக்கு மட்டும் இந்த வேலை கிடைத்துவிட்டால், அப்புறம் என் அம்மா எத்தனை சந்தோஷப்படுவாள். தெரியுமா?....... பிரகதீசுவரர்சுவாமிதான் கருணை பொழிய வேண்டும்...!" என்றான் நாலாவது இளைஞனான மாணிக்கம்.

மூன்று புலிகளும் அவ்விளைஞனையே விழித்துப் பார்த்தார்கள்; 'இவனுக்காவது மெய்க்காப்பாளன் வேலை கிடைக்கவாவது' என்ற அர்த்தத்தில் கேலிப் புன்னகை புரிந்தார்கள். மாணிக்கத்தைச் சட்டை செய்யாமல், மூவரும் நடையைக் கட்டிவிட்டார்கள். இளைஞனுக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது.

அப்பொழுது ஆற்றின் நடுவிலிருந்து ஒரு குரல் எதிரொலித்து வந்தது. யாரோ ஒரு கிழவன் வண்டியில் நடு ஆற்றில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தபடி, "ஐயாமார்களே, என்னைக் காப்பாற்றுங்கள்... அண்ணன்மார்களே, என் உயிரைக் காப்பாற்ற



கேவலம், ஒரு உருளைக் கிழங்கு உலகப் பிரசித்தி வாய்ந்ததாக ஆவதென்றால், நீங்கள் மூக்கில் மேல் விரலை வைத்து ஆச்சரியப்படத்தான் செய்வீர்கள்! ஏன் தெரியுமா? அந்த உருளைக்கிழங்கின் எடை 96 பவுண்ட் 10 அவுன்ஸ்!

மாட்டீர்களா?.... ஐயோ, தண்ணீரில் மூழ்கப் போகிறேனே....!'' என்று கூப்பாடு போட்டான்.

மூன்று பீமன்களும் திரும்பிப் பார்த்தார்கள்; 'பூ' என்று உதறிவிட்டு நடந்தார்கள்: மெய்க்காப்பாளன் பதவி அவர்களை 'வா, வா!' என்று அழைத்தது.

இளைஞன் மாணிக்கம் திரும்பினான். நட்டாற்றில் உயிருடன் ஊசலாடிக் கொண்டிருந்த கிழவனின் அபயஓலம் அவனுடைய கண்களில் கண்ணீரை வரவழைத்தது. முண்டாசை வரிந்து கட்டிக் கொண்டு ஆற்றின் குறுக்கே நீந்தினான். வண்டியுடன் கிழவனை உயிருடன் காப்பாற்றி விட்டான் மாணிக்கம் !

கிழவன் நன்றி சொல்லி, அந்த மாணிக்கத்தைத் தோளுடன் அணைத்துக் கொண்டான்.

“தாத்தா, மனிதர்களாகப் பிறந்ததற்கு இம்மாதிரி ஆபத்துக் காலங்களில் உதவி, ஒத்தாசை செய்யாவிட்டால்; அப்புறம் மனிதப் பிறவிக்கு அர்த்தமே கிடையாது. என் பெற்றோர்கள் விட்டுச்சென்ற சொத்து இம்மாதிரி உபதேச மொழிகள்தாம். நான் போய்வருகிறேன்........''

* * *

கொலு மண்டபத்தில் மெய்க்காப்பாளன் போட்டி நடந்தது. போட்டியில் கலந்து கொண்டவர்கள் ஆவலோடு முடிவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தோடு கூட்டமாக அந்த மூன்று புலிகளும் இருந்தார்கள்; கூட அந்தப் பட்டிக்காட்டு இளைஞனான மாணிக்கமும் நின்றான் !

ராஜநிருபர் வந்து, மன்னரின் ஓலையை வாசித்தார் :

“இன்று நடந்த மெய்க்காப்பாளர் பதவி பொறுப்பு நிறைந்தது; அன்புள்ளம்; கடமையுணர்ச்சி எல்லாம் நிரம்பப்பெற வேண்டியது. மெய்க்காப்பாளர் பதவிக்குரிய எல்லா நற்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்ற மாணிக்கம் என்ற யுவனுக்கே மெய்க்காப்பாளன் பதவியைக் கொடுப்பதாக மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்........! ''

மாணிக்கம் ஆனந்தக் கூத்தாடினான். “மன்னர் பிரான் வாழ்க !... மன்னர் பிரான் வாழ்க....! '' என்று தன்னை மறந்து வாழ்த்தினான்.

அப்போது, அவன் ஆற்றில் உதவி செய்த கிழவன் விசையுடன் வந்தான். “தம்பி, நீ வெற்றிபெற்று விட்டாயல்லவா ? மெத்த மகிழ்ச்சி.... எல்லாம் அவன் செயல் !...'' என்று ஆசி கூறினான்.

லிங்கன், வேலன், சுந்தன் ஆகிய மூன்று வீரப்புலிகளும் ஏமாற்றம் சூழ சிலைபோல நின்றார்கள். பீமன் போலிருக்கும் தங்களை

விட்டு, யாரோ பட்டிக்காட்டானுக்கு மெய்க்காப்பாளன் வேலை கிடைத்திருக்கிறதே என்று அதிசயப்பட்டார்கள்; ஆத்திரப்பட்டார்கள்.

''மன்னர்பிரான் அவர்களைக் கண்டு என் நன்றியை எங்கள் குடும்பத்தின் சார்பில் தெரிவிக்க வேண்டும்....'' என்று கூட்டத்தை நெரித்துக் கொண்டு ஓடினான் இளைஞன் மாணிக்கம்.

''தம்பி நில்! மன்னனைப் பார்க்க வேண்டுமா? இதோபார்....'' என்று சொல்லிய அந்தக் கிழவன், தன் வேஷத்தைக் கலைத்தான்.

மன்னன் விஜயாலயன் தோன்றினான்! ''ஆ!'' என்றான் வாலிபன்!

''தம்பி! அதோபார், அந்த மூன்று பேர்களும் பார்க்க பீமன் சூரன் மாதிரி தோன்றுகிறார்கள். உடல் வளர்ந்திருக்கிறது; ஆனால் அவர்களுக்கு உள்ளம் வளரவில்லையே, பாவம்! நான் காலையில் ஆற்றில் அகப்பட்டுக் கொண்ட கிழவனாக நடித்தது கூட வெறும் நாடகம்; என் சோதனையில் அவர்கள் மூவரும் தோற்றார்கள். உதவி கோரிய போது, ஆபத்துக்கு உதவாமல் 'பூ' என்று அலட்சியமாகப் போய் விட்டார்கள், இப்படிப்பட்டவர்களா. என் நாட்டைக் காக்கப் போவார்கள்? என் சோதனையில் முழுவெற்றி பெற்றவன் நீ ஒருவனே! எனக்கு ஆபத்துக்கு உதவினாய் உன் உயிரைக் கூடக் கருதாமல். இப்படிப்பட்ட உள்ளம் தான் மெய்க்காப்பாளனுக்குத் தேவையான முக்கிய பண்பு ஆகும். அதனால்தான் வெற்றி உனக்குக் கிடைத்திருக்கிறது.... நாட்டின் நன்மைக்கு உன் கருத்து முழுவதையும் பயன்படுத்திப் பணிசெய். பிறந்த பொன் நாடு பெற்ற தாய் போல. நாட்டின் பெருவாழ்வுதான் உன் வாழ்வின் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஆகும்... உணக்கு நல்லாயுள்தர இறைவனை இறைஞ்சுகிறேம்'' என்று வாழ்த்தினர் மன்னர்.

மெய்க்காப்பாளன் மாணிக்கம் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்!

அந்த மூன்று சிங்கங்களும் தம் குற்றங்களை உணர்ந்து, மன்னனிடம் மண்டியிட்டு வணங்கி மன்னிப்புக் கோரினார்கள்!

சென்ற இதழ் விடை:

எண்ணெயையும் தண்ணீரையும் ஒன்று சேர்த்துவிடலாம், கொஞ்சம் 'சோப்'பைக் கொண்டு, என்கிறாள் எங்கள் பாப்பா உமா!

சரியான விடை அனுப்பிய கீழ்க்கண்டவர்களுக்கு 'உமா' செப்டம்பர் மாத இதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

பெயர்கள்:

கா. சி. சாகுல் ஹமீது,
நாவினிப்பட்டி (அஞ்சல்)
மதுரை மாவட்டம்.

என். எம். என் சண்முகம்,
டிக்கோயா, இலங்கை.

கே. கருப்புசாமி, திருவிதாங்கூர்.

வி. சுந்தரம், கரூர்.

வெங்கட்ராமன்,
அமைந்தகரை, சென்னை 10.

எஸ். கோகிலா,
கொண்டித்தோப்பு,
சென்னை 1.

என். சந்தானம்
திருவிடைமருதூர்,
தஞ்சைமாவட்டம்.

கே. என். ஜெயராஜ்,
மேட்டுப்பாளையம்.

அதிசயம்!

ஜியாக்ஸிஸ் என்ற பிரபலமான ஓவியர், தான் வரைந்த சித்திரத்தைப் பார்த்துச் சிரித்துச் சிரித்தே தன் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி யிட்டுக் கொண்டார்!

*

ஒரு வருஷத்திலே பரிபூரணமான மாதம் என்ன வகையில் இருக்க வேண்டும் தெரியுமா? அந்த மாதம் ஞாயிற்றுக்கிழமையில் தொடங்கி, சனிக்கிழமையன்று முடிந்தாக வேண்டும்!

*

நாள் முழுவதும் அசராமல் மழை பெய்து கொண்டிருக்கும் இடம் தென் அமெரிக்காவில் இருக்கின்றது. பிரேஸிலின் கரையில் பரனு ஆற்றின் பகுதியில் தான் இந்த இடம் இருக்கிறது. காலத்தைக் கணக்கிட்டுக் கூற முடியாத நாளிலிருந்து இந்தப் பகுதியில் விடாமல் தினமும் 24 மணி நேரமும் மழை பொழிகிறது!

*

பாடிமீர் நகரிலுள்ள போமன் என்பவருடைய முதல் அலாரம் கடிகாரம் கடந்த 300 வருஷங்களாக நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கிறது!

சிம்பான்ஜீ என்ற குரங்கு தென் பெண்டிலே நாட்டில் ஒரு சிகரெட் பிடித்த குற்றத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டு சிறைத் தண்டனையும் பெற்றது!

*

நேபிள்ஸ் நாட்டைச் சேர்ந்த கிளப்பிமா என்பவனுக்கு இரண்டு தனித்தனியான இருதயங்கள் இருந்தன. அவனுடைய மரணத்துக்குப் பிறகு அவனுடைய இரட்டை இருதயங்களின் பரிசோதனைக்கென லண்டன் மருத்துவக் குழுவினர் 15,000 பவுன் கொடுத்தார்கள்.

*

1876-ல் மாடம் டி பிரெஸி என்னும் மாது தன்னுடைய திரண்ட செல்வமான 125,000 பிரான்குகளை பனி மனிதர்கட்கு ஆடை வாங்குவதற்கென விநியோகம் செய்தாள். அவள் ஒரு அரைப் பைத்தியம், பாவம்!

*

இந்த அதிசயமான சிவப்பு நெருப்பு மீன் பறக்கும். அத்தோடு காக்கை மாதிரி கத்தவும் செய்யும்!

*

நாலாம் ஹென்றியின் புதல்வனை நான்கு வயசுள்ள சிறுவன் பிரான்கிஸ் லாரீன் என்ற மூன்று வயசுச் சிறுமியைத் திருமணம் செய்து கொண்டான்!

*

பிரான்ஸிஸ் பார்டட் என்ற குருடன் ஒரு பெரிய வீட்டைக் கட்டினான்; அந்த வீட்டுக்கு மூன்றடுக்கு மாடிகளும் ஏழு அறைகளும் மற்ற வசதிகளும் இருந்தன. வீட்டை முழுதும் கட்டியவன் அவன் ஒருவனேதான்! அவன் நகை வியாபாரி; ஐம்பதாவது வயதில் அவன் பார்வை பூராவையும் இழந்தான். அறுபத்து மூன்றாவது வயதில் அவன் அந்த வீட்டை நிர்மாணித்தான். வீட்டின் அமைப்புப் படம், வீட்டின் நிர்மாணத்திற்கான ஆக்க வேலைகள் முதலியன யாவற்றையும் தன் உள்ளத்தில் கணக்கிட்டுக் கொண்ட பிறகு, கச்சிதமாக வேலைகளைத் தொடங்கினான். அவ்வப்போது வீட்டின் அமைப்பு நிலை, செலவு விபரம் முதலியன எல்லாம் அவன் மனத் திரையில் உருவாகி நின்றது. தரையில் நிற்பது மாதிரி கண் இழந்த கிழவன் கூரை உச்சியில் அனாயாசமாக வேலை பார்த்தான்; ஏணிகளில் தாவினான்; மரங்களை அறுத்தான்—எல்லாம் அவனுடைய தீர்க்கமான உள்ளுணர்வு என்ற கண்களின் வாயிலாகத்தான்! அவன் கட்டியவீடு இப்போது பொருட் காட்சி சாலையாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குருடனின் அபாரத் திறன், அபரிமிதமான தைரியம், மனோதிடம் முதலியவற்றிற்கு எடுத்துக்காட்டாக அந்த வீடு என்றென்றும் நிலைத்து நிற்கும் அல்லவா!



பிரஸிடெண்ட் ஸ்னோ

உங்கள் அபிமான
சினிமா நட்சத்திரம்
ராகினி கூறுவதாவது:
"நான் தினசரி
பிரஸிடெண்ட் ஸ்னோவை
உபயோகித்து வருகிறேன்.

அதன் மணமும் தரமும் எனக்குத்
திருப்தி அளிக்கிறது

**பிரசிடெண்ட் ஸ்னோ முகத்திற்கு அழகையும்,
வசீகரத்தையும் தருகிறது."**

தயாரிப்பாளர்கள் :

RATHOD TRADING CO., MADRAS-1.

Estd: 1939

(Regd No.122117)

எப்பொழுதும் உபயோகியுங்கள்

"ராதாஸ்"

உயர்தர குளுகோஸ் பெஷல் பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்தது, அசல்-
வெண்ணெயினால் செய்யப்பட்டவை, இத்
துடன் ரொட்டி - பண் - பேன்சி
கேக்ஸ் அப்போதுக்கப்போது -
புதியதாகவே கிடைக்கும்.

ராதா பிஸ்கட் பாக்டரி

நெ: 161. தங்கசாலைத் தெரு.
மதராஸ்-1. Prop: T.P.G.SWAMY

OUR MOTTO IS SMALL PROFITS WITH GREAT CARE
ORDERS WILL BE EXECUTED

Radha Biscuit Factory

161, MINT STREET, :: G. T. MADRAS-1.

28-8-54 அன்று மகத்தான ஆரம்பம்

நவாப் ராஜமாணிக்கத்தின்

மிகச்சிறந்த நாடகம்

பக்த ராமதாஸ்

தேனும்பேட்டை

காங்கிரஸ் மைதானத்தில்

When **ASTHMA**
attack is imminent
use

MULTIMIX

Indo-French Pharmaceutical Co.,

P. B No. 1542. MADRAS-1.

சமரசம்

பஸ் வந்து லஸ்ஸில் நின்றது. சிலர் இறங்கினர்; சிலர் ஏறினர். ஏறினவர்களில் சுமார் நாற்பத்தைந்து வயதுடைய ஒருவர் நாசூக்காக வெள்ளை உடை தரித்திருந்தார். பார்ப்பதற்குப் பெரிய மனிதர் போலவும் உல்லாசப் பிரியர் போலவும் தென்பட்டார். ஆனால் முகத்திலே கவலைக் குறிகள் கோடிட்டிருந்தன. பார்வையிலே விரக்தியும் ஆயாசமும் வெளிப்பட்டன. அவர் பெயர் கோபாலசாமி.

அவர் பின்னே பஸ்ஸில் ஒரு பெண் ஏறினாள். வயசு பதினெட்டு இருக்கும். அழகின் இருப்பிடமாக விளங்கினாள். அடக்கத்தின் அவதாரமாகத் தோன்றினாள். புத்திசாலித்தனத்தின் புகலிடமாகக் காட்சி அளித்தாள். வாயல் புடவையும் ரவிக்கையும் அணிந்திருந்தாள். மெல்லிய பொற்சங்கிலி, ஒரு ஜதை பொன் வளையல், கம்மல், மூக்குப் பொட்டு இவையே அவள் ஆபரணம். ஆடை ஆபரணங்களின் ஆதரவு தேவையற்றதாகப் பிரகாசித்தது அவள் மேனி எழில்.

கோபாலசாமி சற்று முன்னே சென்று அங்கே காலியாக இருந்த இடத்திலே அமர்ந்து கொண்டார். அந்தப் பெண், பெண்களுக்கு என்று ஒதுக்கப்பெற்றிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள். பஸ் புறப்பட்டது.

கண்டக்டர் எல்லோருக்கும் டிக்கட் கொடுத்துக்கொண்டிருந்தான். கோபாலசாமி பர்ஸைத் திறந்து ஒரு ரூபாய் நோட்டை எடுத்தார்.

"பெரிய மனிசனா வெளங்கரும் போலே இருக்கு. ஆமாம். பின்னே, ஊரிலே இருக்கறவனெயெல்லாம் ஏமாத்திகிட்டே போனா பெரிய மனிசனாகத் தடை என்ன?"

கோபாலசாமி திரும்பிப் பார்த்தார். தனக்குப் பின்புறத்தில் உள்ள ஆசனத்தில் வேங்கடசாமி அமர்ந்திருப்பதைக் கண்டார். அவர் புருவங்கள் நெற்றிக்கு ஏறின.

"என்னா பாக்கறே? ஏதுடா, இன்னெக்கி இவங்கிட்டே மாட்டிகிட்டோமேன்னு முளிக்கிறியா?"

இப்போது பஸ்ஸில் உள்ள பிரயாணிகள் யாவருமே வேங்கடசாமியின் பக்கம் பார்வையைச் செலுத்தினர். அவன் குரலின் கனமும் வார்த்தைகளின் அழுத்தமும் அனைவர் கவனத்தையும் இழுத்துக் கொண்டன, தோற்றமோ யாரையும் வைத்த கண்ணை எடுக்கவில்லை.

ஆறடி உயரம், இரண்டாள் பருமன், சிவந்த பெரிய விழிகள், நீண்டு அமர்ந்த மீசை. முன்னால் சரிந்த தொந்தி, இடையில் சாயவேட்டி. உடலில் பச்சைவர்ணச் சட்டை, தலையில் சாயவேட்டி, முண்டாசு, கைகளில் ஓர் அங்குலம் அகலமுள்ள தங்கக் காப்பு. வயது ஐம்பது இருக்கும். மறுபடி வெங்கடசாமி பேசினார்.

"கடன் உடன் இல்லாதவன் கோவணத்தைக் கட்டிகிட்டுக் கூடத் தெருவோடே போகலாமே! ஊரைச் சுத்திக் கடன்; வெள்ளை யூஞ் சள்ளையுமாக் காருமேலே ஊரு சவாரி!— உம்.... கொடுக்க வேண்டிய கடனெக் கொடுக்க யோக்யதை இல்லே; வேசத்தெப் பார்ரா, வேசத்தை!..."

ஜனங்கள் கோபாலசாமியையும் வேங்கடசாமியையும் மாறி மாறிப் பார்க்கலானார்கள். கோபாலசாமி திணறினார். முன்புறத்தில் எல்லோரும்கூர்ந்து கவனிப்பதைக் கண்டு அந்தப் பெண்ணும் என்ன விசேஷம் என்று எட்டிப் பார்த்தாள்.

எல்லார்வி

ஒரு நாள் ஏங்கிட்டே வசமா மாட்டிக்கத்தான் போறே. நானும் ஒனக்கு சரியான பாடம் படிச்சுக் குடுக்கத்தான் போறேன்'' என்ற வேங்கடசாமியின் சொற்கள் பஸ் என்ஜினின் அலறல், பிரயாணிகளின் ஆரவாரம் அனைத்தையுந் தாண்டிக் கொண்டு கோபாலசாமியின் செவிக்கு எட்டிற்று. அந்தப் பெண்ணின செவிக்கு மட்டும் ஏன் எட்டாது?

பஸ் ஆந்திரமகில சபா அருகில் நின்றது, கண்டக்டர் அவசர அவசரமாக டிக்கட் கொடுத்துக் கொண்டிருந்தான். வெங்கடசாமி மேலும் என்னவோ பேச வாயெடுத்தார். அதை அறிந்த கோபாலசாமி சட்டென்று மணி பர்ஸைத் திறந்து இரண்டணுவை எடுத்து கண்டக்டரிடம் கொடுத்து விட்டு முன்புறமாக வேகமாய் சென்று இறங்கினுர். அந்தப் பெண் அவரையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தபடியால் அவர் கீழே இறங்கி ஜாடை செய்த உடனே அவளால் உணர முடிந்தது. அவளும் சட்டென்று பின்புறமாகக் கீழே இறங்கினுள். பஸ் புறப்பட்டது.

''போபோ. இன்னெக்கித் தப்பிச்சுப்போ. ஒரு நாள் இல்லாட்டி

பஸ் போய்விட்டது கோபாலசாமி மௌனமாகப் பிளாட்பாரத்தில் நடந்து கொண்டிருந்தார்.

''ஏன் அப்பா? ஏன் இறங்கி விட்டீர்கள்?''

''அடுத்த பஸ்ஸில் போய்க் கொள்ளலாம் சகுந்தலா''.

''ஒன்பது மணிக்கு முகூர்த்தம். இப்போதே ஒன்பதேகால் ஆகி விட்டது. இனிமேல் அடுத்த பஸ்ஸைப் பிடித்து....''

''அதனுல் பரவாயில்லை அம்மா''

''அது சரி. அதற்கும் நீங்கள் ஸ்டாப்பிங்கைக் கடந்து போய்க் கொண்டே இருக்கிறீர்களே!''

''சாயங்காலம் போவோமே சகுந்தலா''.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''எனக்கு உடம்பு சரியாக இல்லை. வீட்டுக்குப் போகலாம்''.

''அப்படியானுல் சரி. உம்.... வந்து.... ஏன் அப்பா, அந்தச் சாய வேட்டிக்காரர்.... நீங்கள் ஏன் அப்பா திடீரென்று பஸ்ஸைவிட்டு இறங்கிவிட்டீர்கள்? அவர் யார்? உங்களை ஏன் அவர்...''

''சகுந்தலா!........ கொஞ்சம் பேசாமல் வாயேன்''.

கோபாலசாமியின் குரலில் ஒலித்த வேதனை சகுந்தலாவின் வாயை அடைத்து விட்டது. ஆனால் அவள் உள்ளத்திலே எழுந்த சஞ்சலமோ!

தகப்பனும் பெண்ணும் வீட்டை அடைந்தனர். கோபால்சாமி மௌனமாகக் கட்டிலில் படுத்தார். சகுந்தலா கட்டிலின் அருகே தரையில் உட்கார்ந்தாள். சற்றுப் பொறுத்து எழுந்து சென்று சமையல் வேலையைத் தொடங்கினாள். கோபாலசாமி அழைத்தார்.

"நீ ஒன்றும் அலட்டிக் கொள்ளாதே அம்மா, ஓட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்துக் கொள்ளலாம். பேசாமல் இங்கே வந்து இப்படி உட்கார்" என்றார். சகுந்தலா அவ்வாறே வந்து அமர்ந்து கொண்டாள்.

"உனக்குப் பால்காரக் கிழவனை நினைவிருக்கா?"

"ரத்தினசாமியைத் தானே சொல்கிறீர்கள்?"

"ஆமாம். நீ பம்பாய் சென்ற சில நாட்களிலே அவன் காலமாகி விட்டான். அவனுக்கு ஒரு மகன்; வேங்கடசாமி என்று பெயர். சற்றுமுன் பஸ்ஸில் காட்சி அளித்தவன் அவன்தான்."

ஆப்டோன், லைன்,
கலர் பிளாக்குகள்,
ரப்பர் ஸ்டாம்புகள்,
எங்கிரேவிங் வேலைகள்,
செய்யப்படும்.

ஜீதா அண் கோ,
17, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, மதராஸ்-1.

சகுந்தலா, "அப்படியா?" என்று சர்வ சாதாரணமாகக் கேட்டாளே தவிர மேலே ஒன்றுமே கேட்கவில்லை. தகப்பனாரின் மன வேதனையைக் கிளற அவள் விரும்பவில்லை. அவராக ஏதாவது சொன்னால் அதை மட்டும் கேட்டுக் கொள்ளலாம் என்று இருந்தாள்.

"கிழவனுக்குப் பிறகு வேங்கடசாமி வந்து பால் ஊற்றத்தொடங்கினான். மிகவும் மரியாதையாகத்தான் பழகி வந்தான். பால் பணம் இருநூறு ரூபாய் கொடுபடாமல் தங்கிவிட்டது. அவனும் கூடிய வரையில் பொறுத்துத்தான் பார்த்தான்.... என்ன செய்கிறது! இன்று பஸ்ஸிலே கண்டதும் ஏசிப்பேச ஆரம்பித்துவிட்டான்.."

கோபாலசாமி நீளச் சொல்லிக் கொண்டே போனார். பத்மாவதி இறந்ததும், குழந்தைகள் தாய் மாமன் வீட்டை அடைந்ததும், அவர் உத்தியோகத்தை இழந்ததும் ஆகிய சம்பவங்களை உருக்கமாக அவர் சொல்லிக் கொண்டே வர, சகுந்தலா தாரையாகக் கண்ணீர் வடித்தபடி கேட்டுக் கொண்டே இருந்தாள்.

* * *

"யார் வீட்டிலே?"

"வா அம்மா, யார் வேணும் உனக்கு?"

"வேங்கடசாமி நாயக்கர் வீடு இதுதானே?

"ஆமாம்."

"அவரைத்தான் பார்க்க வேணும்."

"இப்படி குந்திக்க, வருவாரு".

கற்பகவல்லி உள்ளே சென்றாள். சற்றுப் பொறுத்து வேங்கடசாமி வெளியே வந்தார்.

"யாரம்மா நீ? என்னையா பாக்க வந்தே?"

"ஆமாம். இந்தாருங்க..."

சகுந்தலா பொற்சங்கிலியை நீட்டினாள். வேங்கடசாமி ஒன்றும் புரியாமல் திகைத்தார்.

"நான் கோபாலசாமியின் மகள். அவர் உங்களுக்குக் கொடுக்க வேண்டிய இருநூறு ரூபாய்க்கு இந்தச் சங்கிலியை எடுத்துக் கொள்ளுங்கள். சரியாக இருநூறு ரூபாய் விலைக்கு இருக்கிறது. விற்பனை செய்து பணமாகவே கொண்டு வந்திருப்பேன். யாருக்கும் பயனின்றிக் கூலி நஷ்டமாகுமே என்று அப்படியே கொண்டு வந்தேன். சந்தேகமிருந்தால் நீங்கள் நிறுத்துப் பார்த்துக் கொள்ளலாம்".

வேங்கடசாமி மீசையை வருடியபடி மேலுங் கீழுமாகத் தலையை ஆட்டிக்கொண்டார்.

"அப்படியா சங்கதி? காலையிலே அவரோடே பஸ்ஸிலேருந்து இறங்கிப் போனது நீதானா?... உம். சங்கிலியைக் கழுத்துலே போட்டுக்கம்மா போட்டுக்க. அத்தனை கிராதகன் இல்லே நான். வந்து..."

சகுந்தலா இடைமறித்துப் பேசினாள்.

"உங்கள் கருணை உள்ளத்தைக் காலையில் பஸ்ஸில் அறிந்துகொண்டேனே!"

"கோவிச்சுக்காதே பாப்பா. உனக்கு ஒண்ணுந் தெரியாது. பம்பாயிலேயோ எங்கேயோ தானே நீ இருந்தே? உங்கப்பா இங்கே நடந்துகிட்டதெல்லாம் நீ என்ன கண்டே? நானுகக்கொண்டு இம்மாந்தூரம் பொறுத்துக்கிட்டிருக்கேன்—"

"அப்படி என்ன செய்தார் அவர்? உங்களுடைய பால் பணத்தைக் கொடுக்கவில்லை. அது தானே?"

"படபடக்காதே தங்கச்சி. உங்கப்பா வேசம் போட்டு ஊரை ஏமாத்தினதை இந்த ஊரே சொல்லுமே! இவருக்குத்தான் பணத்துக்குத் திண்டாட்டமாச்சே, கோயில்லே இருக்கற கல்லுக்குக் கொடங் கொடமாப் பாலெ வாங்கி எதுக்கு ஊத்தணும்? நாலு பேர் பெரிய மனிசன், தருமவான், பக்திமான் இன்னெல்லாம் சொல்ல..."

"நிறுத்துங்கள்! என் தாய் போனாள். தம்பியும் சாகக் கிடந்தான். அவர் கடவுளுக்கு வேண்டிக் கொண்டார். பால் அபிஷேகஞ் செய்தார். அப்போது உத்தியோகம் இருந்தது; கொடுத்துவிடலாம் என்று வாங்கினர்; பிறகு உத்தியோகம் போய்விட்டது...."

"உனக்கு மேலே எனக்கும் பேசத் தெரியும் தாயே. கஷ்டம் வர்ரதுங்கறது யாருக்கும் சகசந்தான். ஆனால் யாராச்சும் நல்லதைச் சொன்னல் கேக்கலாமில்லே? விவரமாச் சொல்றேன் கேளு.

"நம்ம ரெண்டு குடும்பமும் உறவுள்ள குடும்பம். உங்கப்பா படிச்சாரு; வேலெமேலே இங்கே வந்தாரு. நாங்க ரொம்ப வருசமா இதே ஊர்லே பால் யாவாரம் பண்ணிக் கிட்டிருக்கோம். எங்க ஆயா சாகிற சமயத்துலே சொல்லிவிட்டுப் போச்சு; உறவு விட்டுப் போகாமெ ரெண்டு குடும்பமும்கொண்டு கொடுத்து சம்பந்தம் செய்துகிடணும்னு. அதை எண்ணி நான் உங்கப்பா கிட்டே கேட்டேன், உன் அக்காளெ எம்மவனுக்குக் கட்டிக்கிறேன்னு. அவரு ஆகாசம் பாத்தாரு. அவரு உத்தியோகஸ்தரு; நான் பால்காரன் தானே? மதிப்பில்லே. அவரு உத்தியோகம் பண்ணிக் கிளிச்சதென்ன? இதோ பாரு, இந்த ஊடு, அந்தத் தோட்டம், கொட்டில் நிறைய மாடு கன்னுவ, பத்தாயிரத்துக்கு மேலே ரொக்கம் — இம்பிட்டும் என்னுது, என் மவனுது. என்ன கெட்டுப் போச்சு? அது அவருக்குத் தெரியல்லே. அதுக்கேத்தாப்பலே அந்தக் குட்டியுந்தான் அல்பாயுசிலே பூடிச்சா. அப்பவும் நான் உடலே. சின்னப் பொண்ணையாவது குடுங்கன்னு கேட்டேன். உங்கப்பாருக்கு வந்ததே கோவம்! 'பெரிய மகளெக் கேட்டே; அது பூடிச்சு, சின்ன மகளையும் வாயிலே போட்டுக்கப் பாக்கறயா? உன் மகன் இருக்கற யோக்கிதைக்கு என் மகளெக் கொடுக்கறது தான் பாக்கி!...' இன்னெல்லாம் சத்தம் போட்டாரு. எனக்கு ரொம்பக் கோவம் வந்திடுச்சு...."

அரசியல், சமுதாயம், பொருளாதாரம் இவை மூன்றுக்கும் ஓர் வரம்பு உண்டு. அதுதான் சட்டம்.

சட்டம் மக்களுக்குத் தென்றலாக இருக்கவேண்டுமே தவிர தீயாக மாறி விடக்கூடாது. அப்படித் தீயாக மாறினல் மக்களின் கண்ணீர் கடலாக மாறிவிடும். காட்டுத் தீ கடலுடன் போட்டியிட்டு வென்றதாக, சரித்திரச் சான்றுகளில்லை.

—ம. வில்லி ராஜாமணி.

"சரி, இந்தக் கதையெல்லாம் எதற்கு? உங்களுக்குச் சேரவேண்டியதைப் பெற்றுக் கொள்ளுங்கள். வீணாக என் தகப்பனாரை நிந்திக்காதீர்கள். மனமறிந்து அவர் ஒரு தவறும் செய்யவில்லை. அது எனக்குத் தெரியும். அவர் செய்த பிழையெல்லாம் மனைவி மக்களை அன்பைப் பொழிந்து காப்பாற்றியதுதான். அவருடைய போதாத காலம் என்தாய் போனாள்; என் தமக்கை போனாள்; தம்பி தங்கை இருவரும் சாகக்கிடந்து பிழைத்தார்கள், வேலை போயிற்று. சிறு வயது முதல் நான் பம்பாயில் என் சின்னம்மாவிடம் இருந்து வளர்ந்ததால் இவ்விடத்துச் சங்கடங்களில் சிக்கிக் கொள்ளவில்லை. அவர் நொந்து கிடக்கிறார். நாளைக்கே அவருக்கு ஒரு வேலை கிடைத்துவிட்டால் கடனையெல்லாம் ஊதிவிடுவார். பொறுமையற்ற, பணம் படைத்த கர்விகள் மானியாகிய அவர் நிலையை அறிந்தும்—"

"நாக்கை அடக்கிப் பேசம்மா. கடனைக் கேட்கிறவன் பொல்லாதவனா? கர்வியோ? அந்த ரோஷம் உள்ளவங்க பைசா மாத்திக் கிழே வச்சுடணும்!"

"அதுதான் இதோ தருகிறேனே! நீங்கள்தான் பெற்றுக் கொள்ளாமல் என்ன என்னவோ பேசுகிறீர்கள்".

"உம்...சரி. என் கடனை இதில் தீர்த்து விடுவாய். என் மச்சான் மளிகைக் கடை கோவிந்தசாமி நாயகருக்கு நூத்தி இருவது தரணுமே! அது ?...."

"இதோ, வளையல்கள்!"

"ஒன்பதுமாச வாடகை பாக்கி ?"

"என் அப்பா குடியிருந்த வீடு உங்களதா ?"

"என் சிநேகிதரது. கிளப்பி விடுவேன்!"

"புண்ணியவானே! கிளப்பி விடுங்களேன்! என் சின்னம்மா கூடை நகை செய்து போட்டிருந்தார்கள். அவங்களுக்கு நான்தான் அபிமானப் பெண். வேறு குழந்தை இல்லை. என் அப்பா கிட்டே ஏதோ மனஸ்தாபம். நகைகளைக் கழற்றி வாங்கிக் கொண்டு என்னை அனுப்பினார்கள், அப்படியே, நகைகளோடு வந்திருந்தேனானால்....?"

"அத்தைக்கு மீசை முளைச்சா லல்ல, சித்தப்பா ?"

"இப்போதும் என்ன? என்னிடம் இருக்கிறதை யெல்லாம் ஒவ்வொரு கடனுக்காகக் கொடுத்து விடுகிறேன்—"

"ரூபாய் மூவாயிரம் வரைக்கும் இருக்கு கடன்!"

"இதோ பாருங்கள்! என்னையே யாருக்காவது அர்ப்பணித்தேனும்.... என் தந்தை பட்ட கடனை...." அவளுக்கு அழுகை பீறிட்டது.

"அதைத்தான் நானும் சொன்னேன் உங்க அப்பாருக்கு. இந்தப் பளுவை யெல்லாம் நான் ஏத்துக்கறேன், உங்க மகளை என் மவனுக்கு...."

"வயசானவர்களுக்கே புத்தி இப்படித்தான். கல்யாணம் என்பது கிள்ளுக் கீரையா? உங்கள் மகனை எங்கள் அப்பாவுக்குப் பிடிக்கல்லை...."

"அதுதான் ஏன் புடிக்கல்லேன்னு கேக்கறேன். அவன் என்ன, காலியா? தத்தாரியா? படிச்சவன்; பம்பாயிலே மோட்டார் கம்பெனியிலே முன்னூறு சம்பளம் வாங்கறவன். மவராசா மாதிரி இருப்பான். லச்சுமி காந்தன்ங்கறபேரு அவனுக்கே தகும். அப்படி இருக்க..."

'லக்ஷ்மீ....காந்தன் லக்ஷ்மீகாந்தன்! கலிலோ மோட்டார் ஒர்க்ஸா !....'

"உங்கள்....மகன்..."

"உம். இன்னமே அதைப் பேசி என்ன ?"

'ஏன்? ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் ?"

"காரியங் கை மிஞ்சிப் போச்சு!"

"என்ன ஆயிற்று ?"

"அவன் அங்கே, யாரோ ஒரு குட்டியின் வலையிலே சிக்கிட்டான். யாரோ படிச்ச பொண்ணும்! என்ன சாதியோ, என்ன கருமமோ! எல்லாம் உங்க அப்பாராலே வந்த வெனைதான்!"

"அந்தப் பெண்ணின் பேர் என்ன ?"

"ச....கு... ஏ கற்பகம்!... பய எழுதியிருந்தானே, அந்த பம்பாய்க்குட்டி பேர் என்ன ?"

"சகுந்தலைதான். ஏன்? இந்தத் தங்கச்சிக்கு அங்கே பழக்கமாமா, அந்தப் பொண்ணை ?"

"என்னவோ கேட்டுது, தெரிஞ்சா என்ன, தெரியாட்டி என்ன இப்போ!"

சகுந்தலாவின் உள்ளம் சந்தோஷத்தால் வெடித்து விடும்போல் இருந்தது. "அத்தை!" என்று கூப்பாடு போட்டுக் கொண்டே உள்ளே ஓடினாள். வெங்கடசாமி விழித்தார். அவர் இப்போது விழித்தது அதிசயமே அல்ல; என்று சொல்லும்படி இருந்தது, பின்னர் கோபாலசாமியும் லக்ஷ்மீகாந்தனும் விழித்த விழிப்பு!....

சென்னையில்
சிறந்து விளங்கும்
விநாயகர்
V. ARUMUGA CHETTY
சுருட்டுகள்
ஷெல்
பிராண்டு
TRADE MARK REGISTERED
PROPRIETOR: V. ARUMUGA CHETTY
மணிலா
சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி
18. அண்ணாபிள்ளை தெரு, சென்னை-1.

மதிப்புரை

"தங்கச் சங்கிலி": கடுகு சிறிதாக இருந்தாலும், காரம் போகாது. இஃது பண்டைய காலச் சொல் உவமை, என்பதைப்போல, கதை சிறிதாக இருந்தாலும் கருத்துக்கள் குன்ருதது என்பதைச் சற்றுத்—துணிவுடனே அழுத்தமாகக் கூறியிருக்கிருர். "தங்கச்சங்கிலி" ஆசிரியர். மகிழ்ச்சியடைகிருேம், இலக்கிய வளர்ச்சிக்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பெருமைப் படுகிருேம்.

அகில, உலக அரங்கின் கதாநாயகர்கள்தான் அரசியல், சமுதாயம் பொருளாதாரம். பண்டைய கால நிலைமைக்கும், இன்றைய விஞ்ஞான காலமாகக் கருதப்படும் 20-ம் நூற்ருண்டிலேயும், அரசியல், சமுதாயம் பொருளாதாரம் என்ற கதாநாயகர்கள் தங்களின் நடிப்பை ஒருவிதமான மாற்றமுமின்றி ஏதோ ஒரு சிலவற்றை மாத்திரம் மாற்றி யமைத்துக்கொண்டு மக்கள்தம் மத்தியிலே அனுதினம் நடித்துக்காட்டிக் கொண்டிருக்கிருர்களே ஏன்? ஏதாவது மாற்றம் இருக்க வேண்டாமா, என்ற கேள்விக்குறியிலே தான் "தங்கச் சங்கிலி" மின்னிக் கொண்டிருக்கிறது. "தங்கச் சங்கிலி" தன்னேடு 13 பேர்களைக் கதாநாயகர்களாகச் சேர்த்துக் கொண்டு தமிழகத்தில் நடமாடத் துணிந்திருக்கிறது மிகவும் பாராட்டத்தக்கது.

இன்ப நிலையத்தார் தங்கச் சங்கிலியை தேர்ந்தெடுத்து உருவாக்கி யிருக்கிருர்களென்ருல் உண்மையிலேயே அவர்கள் இலக்கியத் தாகம் தணியாத் தமிழகத் தூதுவர்களென்று நமது எண்ணம் புன்னகையோடும் பூரிப்போடும் மலருகிறது.

ஆசிரியர்: பெ. தூரன்; வெளியிடுவோர்: இன்ப நிலையம் மைலாப்பூர் சென்னை-4. விலை ரூ. 2.

சமையல் கலையும், ஆரோக்ய உணவும்: 'நோயற்றவாழ்வேகுறைவற்ற செல்வம்' என்ற பொன்மொழி நமக்குப் புதிதல்ல, நாம் அனைவரும் அறிந்ததே. இருப்பினும், நாம் அதை நடைமுறையில் கொணரும்போதுதான் பல சிக்கல்கள் நமக்குத் தோன்றுகின்றன. பசியை ஒரு விநாடியில் அடக்கி விடுவதற்காக, கண்ணில் கண்டதை ஒரு வரம்பற்று உண்டு விட்டால் பசி தீர்ந்துவிடும். ஆனல் அதே சமயத்தில் நாம் உட்கொண்ட பொருள் உடம்பிற்குத் தக்கதா, அதனல் என்ன உபயோகம், நல்லதா கெட்டதா என்று உணராது இருந்துவிட்டால் முடிவாக நிலமை ஆபத்தில் கொண்டு வந்து சேர்த்துவிடும். ஆரோக்ய உணவிற்கு வழி எங்கே இருக்கிறதென்று நோக்கும்போது, அது சமையல் கலையில்தான் இருக்கிறது. தமிழகத்தின் தலை எழுத்தே கலையாகத் தொன்றுதொட்டு வழங்கியிருக்கும்போது, சமையலையும் ஒரு கலையாக மாற்றியமைக்கத் தமிழகம் மறந்திருக்காது என்பது நமது உள உறுதி.

உலக வழக்கில் இருந்துவரும் ஒவ்வோர் கலைக்கும் தனித்தனி வரம்புச் சிறப்புகள் இருப்பதைப் போல, சமையல் கலைக்கும் ஒரு தனிப்பட்ட வரம்பு இருக்கத்தான் வேண்டும், என்று நாம் நினைவிற்குக் கொண்டுவருவதற்குச் சற்று முன்கூட்டியே திருமதி எஸ். கல்யாணி அவர்கள் 'சமையல் கலையும், ஆரோக்ய உணவும்' என்பது பற்றி மிகமிக எளிய நடையில் அழகுபட, பல அறிஞர்களின் ஆதாரங்களுடன் பக்கத்திற்குப் பக்கம் சமையல் கலையின் ஆராய்ச்சி நுணுக்கங்களைத் துறுவித் துறுவி நமக்கு எடுத்துக் காட்டி நமது மதிப்பை மனப்பூர்வமாகப் பெற்றிருக்கிருர்.

ஒவ்வோர் குடும்பத்தாரும் போற்றிப் படிக்க வேண்டிய நூல்.

ஆசிரியர்: எஸ். கல்யாணி வெளியிடுவோர்: இன்ப நிலையம் மைலாப்பூர், சென்னை-1.

ம. வில்லிராஜாமணி.

மஞ்சள் அறை: திரும்பத்திரும்ப சமூக நாவல்களையும், காதல் நாவல்களையும் படித்து அலுத்துச் சலித்துப்போன தமிழ்நாட்டு ரசிகர்களுக்கு, ஆர். எஸ். மணி அவர்களின் ரசமான துப்பறியும் 'மஞ்சள் அறை' நாவல் ஒரு விருந்து. விறுவிறுப்பான நடையும், நிகழ்ச்சிகளின் கோர்வையும் ஆசிரியரின் திறமையை எடுத்துக் காட்டுகிறது. ஒரு ஆணுக்குத் தன் சொந்த மனைவியின் மீது சந்தேகம் எழுமானால், அவனது வெறுப்புக்கும், கோபதாபங்களுக்கும் அப்பெண் ஆளாகுகிருள். ஆனல் இந்த சிறு நாவலில் வரும் கதாநாயகன் தன் மனைவிமீது சந்தேகித்து அவளை பச்சைக் கொலை செய்துவிடுகிருன். உண்மையறிந்த பிறகு மனமொடிந்து விடுகிருன். கொலையாளியைக் கண்டுபிடிக்க துப்பறியும் துரைசாமி மிகவும் சாதுர்யமாக கேஸை ஆராயப் பாடுபடுகிருர். ஆனல் தன்னுடனேயே அடிக்கடி குற்றவாளி சுற்றி வருவதை கடைசியில் அறிந்து வியக்கிருர். துப்பறியும் 'கேஸை' ஆராய்ந்து நிஜமான குற்றவாளியைக் கண்டுபிடிப்பது எவ்வளவு சிரமம் என்பதை ஆசிரியர், துரைசாமியின் மூலம் விளக்குகிருர்.

ஆசிரியர்: ஆர். எஸ். மணி; வெளியிடுவோர்: ஞானமணி பிரசுரம் சென்னை-17. விலை ரூ. 1-8-0.

சுடர்: இந்தியாவின் தலை நகரில் இருந்துகொண்டு தமிழகத்திற்குப் பெருமை தேடித்தரும் தில்லித் தமிழ்ச் சங்கத்தாரின் ஒரு கலைப் பொக்கிஷம் இது! பக்கத்துக்குப் பக்கம் கருத்தாழத்திலும் கண் கவர் வனப்பிலும் ஒப்பற்றதாக விளங்குகிறது. இவ்வளவு அற்புதமான மலரின் விலை ஒரு ரூபாய் என்பது கொள்ளை மலிவு.

கிடைக்குமிடம்: தில்லித் தமிழ். சங்கம், புது டெல்லி. விலை ரூ. 1.

உத்திரவாதமுள்ள பவுன்

வெள்ளி நகைகளுக்கு

ஜெயின் ஜுவல்லரி கம்பெனி

நெ. 1, நாகேஸ்வரராவ் ரோட்,

தியாகராயநகர், :: சென்னை - 17.

வார விடுமுறை வெள்ளிக்கிழமை.

பட உலகம்

ரத்தபாசம்—விமர்சனம் :

கடந்துபோன 25 ஆண்டுகளாக நாடக உலகிலே தனிச் சிறப்பியல்புகளோடு நடிப்புக்கலை மூலம் தமிழகத்தாரின், மொழி, கலை, தொழில், ஞானம், கல்வி போன்ற கலாச்சார நாகரீக வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்கியவர்கள் நமது மதிப்பிற்குரிய டி. கே. எஸ். சகோதரர்களென்றால் அது மிகையாகாது என்பது நமது உளத்துணிவு! நல்லறிஞர்கள் வகுத்துத் தந்த உரை நடைத்தொகுதிகளை ஒன்றுதிரட்டி, உருவமைத்து, இயல் இசை கூத்தென்ற முத்தமிழ் ரத்தினப் பேழையிலிட்டு உலகக் கண்ணோட்டத்தின் சிந்தனைப் பார்வைக்குத் தூதனுப்பி அதனால் மக்களின் மதிப்பையும், மங்காத புகழையும் அழியாத அருங்கலைகளில் ஒன்றான நடிப்புக் கலைக்கோர் இலக்கண வரம்பமைத்து இன்று மின்னும் பற்பல நடிப்புக் கலைஞர்களைத் தவழவிட்டு தாயகத்தின் கலைப் பணியாளராக மாற்றியதின் பெருமை, முத்தமிழ் கலாவித்வ ரத்ன, டி. கே. எஸ். சகோதரர்களைத்தான் சாரும் என்று நாம் மாத்திரம் கூறவில்லை. தமிழகமே அவர்களுக்கு எதிர்கால சாட்சி! மக்களின் நல்ல எண்ணங்கள் தான் அவர்களது மலர்மாலை! இது யாரும் மறுக்க முடியாத மாற்ற முடியாத உண்மையாகும்.

இத்தகைய கலைஆர்வம் படைத்தவர்களின் சிறந்த தயாரிப்புதான் ஔவைப் புரொடக்ஷன்சாரின் ''ரத்த பாசம்'' இதே கதையை சகோதரர்கள் ஏற்கனவே நாடக ரூபத்தில் ரஸிகப் பெருங்குடி மக்

'கூண்டுக் கிளி'யில் கணேசனும், குசல குமாரியும்

களின் முன் நடித்துக் காட்டி நல்ல ஆதரவைப் பெற்றிருக்கிறார்களென்று எண்ணும்போது மீண்டும், கதையை, வளர்ப்பானேன்.

நாடக உலகிலே புகழ் சிறந்த நடிகமணி திரு. டி. கே. சண்முகம், போக்கிரி ராஜா வேஷத்திலிருந்து டல்லுப்பாட்டோடு ராணியின் அன்பிற்குப் பாத்திரமாகி, ராணியாக நடிக்கும் புதுமை நடிகை அஞ்சலி தேவியின் சாகஸ நடிப்பில் தன்னையே மறந்து அவள் மீது கொண்டுள்ள பாசத்தால் தான் கொண்டுள்ள கொடிய எண்ணத்திற்கே ஒரு முழுக்குப்போட்டு விட்டு நல்லவன் என்ற பெயரெடுக்கும் போது சிறைச்சாலை செல்வது, இப்படிப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலை சுழலில் சண்முகம் தன்னையே மறந்து நடிக்கிறார்....இல்லை. தன்னை ஒரு இயற்கை நடிகரென்று எடுத்துக் காட்டுகிறார். இவர் ஒளவை சண்முகமா! அல்ல, ''ரௌடி ராஜா'' சண்முகமா என ஆச்சர்யப்படுகிறோம், அகமகிழ்ச்சியடைகிறோம். என்னே அவரின் அற்புத நடிப்பு!

அது மாத்திரமல்ல, இன்னொரு முக்ய விஷயம் என்னவென்றால், கலைஞனுக்குத் தான் தெரியும் கலை உலகின நிலை, என்பதின் எடுத்துக் காட்டாக, கலை என்ற பொருளுக்கு, வேங்கடமோ விந்தியமோ அல்ல குமரியோ என்ற பாகுபாடு கிடையாது, என்பதை தன் நல்லுணர்ச்சியால் தமிழ் நடிகைகள் எத்தனையோ பேர்கள் இருந்தும் நடிப்புக்கலை தேர்தலை நடத்தி அதிலே புதுமை நடிகை அஞ்சலிக்கு இடமளித்திருப்பது கண்டு தமிழன் எப்போது பரந்த நோக்கமுடையவன் என்று நிரூபித்திருக்கிறார் சண்முகம். அஞ்சலிதேவியும், ராணியாக இடம், பொருள், நிலைமைகளை அனுசரித்து அபாரமாக நடித்திருக்கிறார். வழக்கமாக தன், முரட்டுப் பிடிவாதத்தையும், வக்ர எண்ணங்களையும், தாங்கித் திரியும் திரைப்பட அயோக்யன், அல்ல, (வில்லன்) இத்தகைய முக்ய பாத்திரத்தில் நடிப்பதற்கென்றே பிறந்தவர், டி. எஸ். பாலையா மதுவாகத் தோன்றி மக்களின் வழக்கமான ஆதரவைப் பெற்றுவிடுகிறார். இயற்கையாகவே, டி. கே. பகவதி தனக்குக் கிடைக்கப்பட்ட சிறிய பாத்திரத்தைக் கூட காண்பவர் ரஸனைக்கு, அவர்கள் கற்பனைக்கே எட்டாத அளவிற்கு அவர் நடிப்பில் நடிப்புக் கலையின் ஜீவகளை அலைமோதும், அத்தகைய சிறப்பான நடிகர் டி. கே. பகவதி ரகுவாகக் காட்சியளிக்கிறார். அந்தஸ்து, சூழ்நிலையின் மாறுதல்களால் உணர்ச்சி வசப்பட்டு நடிக்கும் போது நமது இதயம் அவரை அன்போடு போற்றுகிறது. அவர் நடிப்புத்திறன் உயருகிறது. பொதுவாக ரத்தபாசம், மக்களின் ஆர்வத்திற்கும், புகழுக்கும் உரிய நல்ல கதை! திரைக் கதையின் அமைப்பும், அமைப்புக்கேற்ற ஓர் ஒழுங்கு முறையும் பாத்திரங்களின் நிலைமைக்குத் தகுந்த வசன நடையும், கதையின் போக்கிற்கோர் புகமை ஊட்டுகிறது. மற்றும் ஆடல், பாடல் நகைச்சுவை அத்தனையும் கனகச்சிதமாக அமைந்திருக்கிறது. திரைக்கதை வசனத்தில் ஸ்ரீதர் புதுமையான நடையைக் கையாண்டிருக்கிறார். டைரக்டர் ஆர். எஸ். மணி அற்புதமாக டைரக்ட் செய்திருக்கிறார். அதோடு கூட, ஒளவை ப்ரொடக்ஷன்சாரின் நிர்வாகத்தை ஏற்று இப்படத்தை வெற்றிகரமாய் முடித்ததிற்கு திரு. டி. கே. முத்துசாமி அவர்களை மிகமிகப் பாராட்டுகிறோம்.

தூக்கு தூக்கி

அருணாவின் 'தூக்கு தூக்கி' ஆகஸ்ட் 26வ முதல் எல்லா இடங்களிலும் வெளியிடப்பட்டுள்ளது. 'பழைய கள் புதிய மொந்தை'யில் என்ற வாக்கியம் ஞாபகத்திற்கு வருகிறது. ஏற்கனவே நாடகம் மூலமாகவும் திரைப்படம் மூலமாகவும் சக்கை போடு போட்டுள்ள இக்கதையை படமாக்குகிறார்களே, இது எப்படி ஓடப் போகிறது என்று நினைத்திருந்த

'கூண்டுக் கிளி'யில் பி. எஸ். சரோஜா

நமக்கு படத்தை பார்த்தபிறகு பழைய கதையாக இருந்தாலும் அதை எப்படி மெருகு படுத்தி புதுப்பிக்கலாம் என்ற உண்மையை பட முதலாளிகளுக்கு ஒரு வழிகாட்டியாக இப்படத்தை உருவாக்கி யிருக்கிறார்கள் அருணா பிலிம்சார்.

கொண்டு வந்தால் தந்தை, கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய், சீர் கொண்டுவந்தால் சகோதரி, கொலை செய்வாள் பத்தினி, உயிர் காப்பான் தோழன் என்ற ஒரு அறிஞரின் வாக்கியங்களை பொய்ப்பிப்பதாக சுந்தரபுரி இளவரசன் சுந்தராங்கதன் மாறு வேடத்தில் கிளம்புகிறான். தன் மகன் பொருள் திரட்ட முடியாது திரும்பிவிட்டதைக் கண்டு சுந்தர புரிமன்னன் சுந்தராங்கதனை நாடு கடத்துகிறான் இது முதல் தோல்வி.

அறிஞரின் முதல் வாக்கியத்திற்கு வெற்றி. இதை கேள்வியுற்ற தாய் மனம் நொந்து மிகவும் கஷ்டப்படுகிறாள். கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய் என்ற வாக்கியமும் மெய்யாகி விடுகிறது. இந்த நிலையில் வெறுங் கையுடன் சென்ற சுந்தராங்கதனை அவன் சகோதரி குணசுந்தரி உதறித் தள்ளுகிறாள். மூன்றாவது வாக்கியமும் இதன் மூலம் மெய்யாகிறது சுந்தராங்கதனுக்கு. இந்த தோல்விகளுடன் தன் மனைவி மங்களபுரி இளவரசி பிரேமாவைக் காணச் செல்கிறான் சுந்தராங்கதன். தன் மனைவி சேட்டுடன் கள்ள நட்புக் கொண்டுள்ளதை காணுகிறான். இதை அறிந்தபிரேமா அவன் மீது அபாண்டமான பழி கூறி அரசனிடம் தூக்கு தண்டனை வாங்கித் தருகிறாள். சுவர்ணபுரி என்னும் நாட்டில் பயித்தியம் போல் நடித்து, அந்நாட்டு இளவரசியின் உள்ளத்தை கொள்ளை கொள்கிறான். இச்சமயத்தில் மங்களபுரி மன்னன் மாறுவேடத்தில் உள்ள சுந்தராங்கதனை கைதியாக்கி நீதிமன்றத்தில் நிறுத்துகிறான். குற்றவாளி என குற்றஞ் சாட்டப்பட்ட சுந்தராங்கதனை தக்க சமயத்தில் வந்து தப்பிவித்தான் அவனுடைய தோழன். அறிஞரின் ஐந்தாவது வாக்கியமும் மெய்யாகிறது. இதுதான் 'தூக்கு தூக்கி' கதை.

படம் பாதிவரை அனாவசியமாக வளருகிறது. சுந்தராங்கதனின் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்துவதற்காக இளவரசனுக்கு இரு சகோதரர்களை இணைத்து

படத்தின் விருவிருப்பைக் குறைத்திருக்கிறார்கள். இவர்களின் கரடி விளையாட்டு முதலியவை ரசிக்கத் தகுந்தவையாயில்லை. ஆனால் படம் இடைவேளைக்குப் பிறகு நல்ல நோக்கத்தோடு ஓடுகிறது.

சுந்தராங்கதனாக நடிக்கும் சிவாஜி கணேசன் சக்கைபோடு போடுகிறார். சுந்தராங்கதன் பாத்திரத்தில் அவருடைய முழுத் திறமையும் வெளிப்படுத்தியிருக்கிறார் டைரக்டர் ஆர். எம். கிருஷ்ணஸ்வாமி. 'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்' என்ற பாட்டுக்கு அவர் பிடிக்கும் அபிநயம் நம்மை வயிறு வெடிக்க சிறிக்க வைக்கிறது. பைத்தியமாக ஏற்கனவே நடித்து பயிற்சி பெற்றுள்ள கணேசன் இப்படத்தில் இன்னும் அதிக வெற்றி காணுகிறார் அந்த வேஷத்தில். சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளையாக கனஜோராக நடித்திருக்கிறார் கணேசன்.

சேட்டாக வரும் பாலையா கன கச்சிதமாக நடித்திருக்கிறார். சட்டாம்பிள்ளையாக நடிக்கும் வெங்கட்ராமனும் நன்றாக நடித்திருக்கிறார். பிரேமாவாக தோன்றும் லலிதா சோபிக்கவில்லை. ஸ்வர்ணபுரி இளவரசியாக நடிக்கும் பத்மினிக்கும் மந்திரி குமாரியாக நடிக்கும் ராகினிக்கும் அதிக சந்தர்ப்பம் அளிக்கவில்லை.

பாட்டுகளும் கச்சிதமாக அமைந்திருக்கிறது ரசிகர்களின் பாராட்டுதலை வெகுவாகப் பெருகிறது 'பியாரி நிம்பல் மேலே நமக்கி மஜா' என்ற பாட்டும் 'அபாய அறிவிப்பு' என்ற பாட்டும்.

மொத்தத்தில் 'தூக்கு தூக்கி' நல்ல பொழுது போக்கு படம்.

கூண்டுக்கிளி

ஆர். ஆர். பிக்சர்ஸாரின் இப்படம் ஆகஸ்ட் 26-ந் தேதி முதல் தென்னடெங்கும் வெளியிடப்பட்டுள்ளது. ராமண்ணா டைரக்ஷனை திறமையுடன் செய்திருக்கிறார். திரையிடப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் வெற்றிகரமாக ஓடும் இப்படத்தில் குசலகுமாரி, பி. எஸ். சரோஜா, சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்திரன், கே. சாரங்கபாணி எல்லோரும் வழக்கம்போல் நன்றாக நடித்திருக்கிறார்களாம். ராகினியின் புது மாதிரியான நடனம் பார்ப்பவர்களின் கவனத்தைக் கவருகிறதாம். ஆர். ஆர். பிக்சர்ஸாரின் இரண்டாவது படமான 'கூண்டுக்கிளி' அவர்களுக்கு ஒரு மகத்தான வெற்றி என்றே தென்னடெங்கும் சொல்லுவது நம் காதில் விழுகிறது. செப்டம்பர் 9-ந் தேதி சென்னையில் பார்த்து விட்டால் போகிறது.

வைரமாலை

வைத்யா பிலிம்சாரின் 'வைரமாலை' வெகு வேகமாக தயாராகிக் கொண்டு வருகிறது. இது சம்பந்தமாக வைத்யா பிலிம்சார் கடந்த சில நாட்களாக பெங்களூரில் முகாமிட்டிருக்கிறார்கள். அநேகமாக செப்டம்பர் 20ம் தேதிக்கு மேல் திரையிடப்படலாம். பத்மினி, மனோஹர் பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படம் தெலுங்கிலும் உருவாகிறதாம்.

போனமச்சான் திரும்பிவந்தான்

மெர்குரி பிலிம்சாரின், போன மச்சான் திரும்பிவந்தான், அநேகமாக தீபாவளியன்று திரையிடப்படலாம். நடிகர்கள் ஜாபிதாவில் ஸ்ரீராம், குசலகுமாரி, தங்கவேலு முதலிய மின்னும் நட்சத்திரங்கள் இடம் பெற்றுள்ளனர். காலஞ்சென்ற இசைக் கலைஞர் சி. ஆர். சுப்பராமனின் பிரதம மாணவர் எம். எஸ். விஸ்வநாதம் சங்கித டைரக்ஷனை ஏற்றுள்ளார். படஉலகில் நிறைய அனுபவமுள்ள வெங்கடசாமி அவர்களின் தயாரிப்பு என்றால் அதன் வளர்ச்சிக்கு கேட்க வேண்டுமா?

நாட்டுக்கு வேண்டியது செல்வம்
வீட்டுக்கு வேண்டியது

தயாரிப்பாளர் : செல்வம் இண்டஸ்டிரியல்ஸ், சென்னை-21.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துக்களை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் சிலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் சிலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
பிராஞ்ச்: 134. SERANGOON ROAD, சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 82. MAIN ST., கொழும்பு-11.

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர் : ஜி. உமாபதி எம். சி., உமா பிரிண்டர்ஸ்,
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.

★

அழகிற்கு அழகு

★

மனதிற்கு மகிழ்ச்சி

★

உயர்ந்த உறுதியான வேலைப்பாடுள்ள

வைரம் தங்க நகைகள்

வெள்ளி பாத்திரங்களுக்கு

T. கோவிந்தராஜுலு நாயுடு

JEWELLERS & DIAMOND MERCHANTS

28. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு
மதராஸ் . 1

Edited, Printed and Published by G. Umapathy, M.C. at Uma Printers,
4/32, Thathamuthiappan Street,